# கரையாத காதலுடன்



சுபா

IL
TION
A

# கரையாத காதலுடன்...

## 1

வெளியே கோடையின் உக்கிரம் நகரத்தை வறுத்துக்கொண்டிருந்தது. அந்த அரங்கம் வசதியாகக் குளிரூட்டப்பட்டிருந்தது. மேடையில் குஷன் நாற்காலிகள் போடப்பட்டு, பெரிய தொழிலதிபர்களும், அரசுத் துறையின் அதிகாரிகளும், மேதகு கவர்னரும் அமர்ந் திருந்தனர், பளபளக்கும் துணியில் எழுதப்பட்ட வாசகம், 'சிறு தொழில் சிறப்பரங்கம்' என்று அறிவித்தது.

இரண்டு நாட்களாக நடந்த தொழில்துறை சந்திப்புகள், கருத்தரங்குகள் எல்லாம் முடிந்து, இன்றைக்குப் பரிசுகள் வழங்கும் விழா...

"அடுத்து சிறந்த சிறுதொழிலதிபருக்கான பரிசு வழங்கும் நிகழ்ச்சி துவங்கவிருக்கிறது!'' என்று அறிவிப்பாளர் சொன்னதும், முதல் வரிசையில் அமர்ந்திருந்த அனுசூயாவும், மேகாவும் நிமிர்ந்து உட்கார்ந்தனர்.

வட மாநிலத்திலிருந்து வந்திருந்த கவர்னர், மேடையில் ஒலித்துக்கொண்டிருந்த தமிழ் புரியாமல், தலை டர்பனை அடிக்கடி சரி செய்துகொண்டார்.

ஓ்மேடை வரிசைகளில் அமர்ந்திருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் நாசூக்கான ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருந்தனர். ஆண்களில் அதிகமானவர்கள் டை கட்டியிருந்தனர்; சூட் அணிந்திருந்தனர். பெண்களில் பலர் ஜீன்ஸ் அணிந்திருந்தனர். உதட்டுச் சாயம் பூசி, காதுகளில் நான்கைந்து துளைகள் போட்டு, தங்கப் பொட்டுகளால் நிரப்பியிருந்தனர். சிலர் கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தனர்.

அவர்களிடமிருந்து வித்தியாசப்பட்டு, ஒரு தொழிலாளி போல் காக்கி பேண்ட்டும், காக்கிச் சட்டையும் அணிந்திருந்தான் நந்தா.

மேடையின் இடப்புறம், நீலத் தடுப்புக்குப் பின்னே தயாராகக் காத்திருந்த நந்தாவைப் பார்த்து சந்தோஷமாகப் புன்னகைத்தாள் அனுசூயா. அவன் பதில் புன்னகை செய்தபோது, அவனைப் பார்த்து காற்றில் ஒரு முத்தம் பறக்கவிட்டாள் மேகா.

பாவாடை, சட்டை அணிந்த 16 வயதுப் பெண் காற்றில் முத்தம் பறக்கவிட்டால், யாருக்குத்தான் ஆர்வம் வராது! மற்றவர்கள் கை தட்டும்போதெல்லாம் மொழி புரியாமல் சும்மா புன்னகைத்துக்கொண்டிருந்த கவர்னர், இக்காட்சியால் கவரப்பட்டு நந்தாவைத் திரும்பிப் பார்த்தார்.

சட்டென்று பார்வையை நகர்த்திக்கொண்டான் நந்தா.

மேகாவின் தொடையில் கிள்ளினாள் அனுசூயா...

"கழுதை, அப்பாவுக்கு ப்ளையிங் கிஸ், அனுப்பற நேரமா இது?"

"எங்கப்பா... நான் எப்பவேணா, அனுப்புவேன்... பொறாமைல வெந்து சாகாதே... வேணும்ன்னா நீயும் ஒண்ணு அனுப்பிக்க..." என்று சொல்லிவிட்டு, சட்டென்று அனுசூயாவின் கையைப் பிடித்துத் தன்னுடன் அணைத்துக்கொண்டாள் மேகா.



"இந்த கூட்டத்துலயே, உன் புருஷன் தாம்மா பயங்கர ஸ்மார்ட்... ஓடிப்போய் ஒரு கிஸ் அடிச்சிட்டு வர்றீயா?"

"ஏய் ரவுடி... யார் காதுலயாவது விழுந்து தொலைக்கப் போவுதடி... கொஞ்சம் கண்ணியமாப் பேசக் கத்துக்க!"

அனுசூயா, கண்டிக்கும் குரலில் சொன்னாளே தவிர, அவளையறியாமல், நந்தாவின் பக்கம் பார்வை தானாகத் திரும்பியது. நந்தாவிற்கு 38 வயது. ஆறடிக்கு சற்றே குறைவான உயரம், திடமான உடல், போலீஸ் கிராப், கறுத்த மீசை, முகவாயின் மத்தியில் சிறு குழிவு, உறுதியான கண்கள். மேகா சொன்னதில் தப்பே இல்லை என்றுதான் தோன்றியது.

நந்தாவின் பெயர் அழைக்கப்பட்டதும், அவன் மேகாவைப் பார்ப்பதைக் கவனமாகத் தவிர்த்துவிட்டு, கிடுகிடுவென்று மேடைக்கு நடந்தான்.

அறிவிப்பாளரின் குரல் தொடர்ந்தது...

"இந்த விருதுக்கு, 270 தொழிலதிபர்களின் பெயர்கள் பரிசீலனைக்கு வந்தன. அவர்களில் மிகச் சிறந்த தொழில்நுட்பத்துடன் கார்களுக்கான உதிரி பாகங்களைத் தயாரித்துவரும், 'அனுசூயா ஆட்டோ மொபைல்ஸ்' நிறுவனர் நந்தா முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்!"

அரங்கம் கைத்தட்டல்களால் நிறைந்தது.

"தொடர்ந்து மூன்று வருடங்களாக, 'சிறந்த சிறு தொழிலதிபர்' என்ற இந்தச் சிறப்பு விருதை, திரு. நந்தா

அவர்களே பெற்றுவருகிறார் என்பது இன்னொரு சிறப்புச் செய்தி !"

முதல் வரிசையில் அமர்ந்திருந்த மேகா மட்டும் வாய்க்குள் இரு விரல்களை விட்டு, 'உய்ய்ய்...' என்று அரங்கமே அதிரும்படி விசிலடித்தாள்.

அவளை அனுசூயா அதட்ட, "ஷ்... முடிஞ்சா நீயும் அடி...என்னைத் தடுக்காதே !" என்றாள் மேகா.

மேடையில் நந்தாவிடம் பரிசுக் கேடயத்தைக் கொடுத்த கவர்னர், அவன் கையைப் பிடித்துக் குலுக்கியபோது, சற்றே அதிர்ந்தார்...

நந்தாவின் வலது கையில் கட்டை விரல், சுட்டு விரல், சுண்டு விரல் என்று மொத்தமே மூன்று விரல்கள்தான் இருந்தன; மத்தியில் இரண்டு விரல்கள் காணாமல் போயிருந்தன.

கவர்னர் சற்றே தயங்கிவிட்டு, 'மிஷினில் கையைக் கொடுத்தீர்களா நந்தா ?" என்று இந்தியில் கேட்டார்.

"இது போரில் இழந்தது சார் ! பாகிஸ்தான்காரர்கள் வெட்டியது !" என்றான் நந்தா சரளமான இந்தியில், அவன் இதழ்களில் புன்னகை.

"ஓ... நீங்கள் முன்னாள் ராணுவ வீரரா ?"

"ஆமாம் சார் !"

கேமராக்கள் மின்னின. மேடையிலிருந்து இறங்கியதும், 'டி.வி.' நிருபர்கள் சூழ்ந்துகொள்வர். கடனேயென்று உலர்ந்த குரலில் அவனைச் சில கேள்விகள் கேட்டார். ஒரு நடிகனோ, நடிகையோ, அரசியல்வாதியோ கலந்துகொள்ளாத எந்த விழாவும் அவர்களை சுவாரஸ்யப் படுத்துவதில்லை.



நந்தாவிடம் மைக் கொடுக்கப்பட்டது. மைக்கைப் பிடித்ததும், தெளிவாகப் பேசினான் நந்தா...

"பொதுவாக ஓர் ஆணுடைய வெற்றிக்குப் பின்னால், ஒரு பெண் இருப்பாள் என்று சொல்வர்; என் வெற்றிக்குப் பின்னால் இரண்டு பெண்கள் இருக்கின்றனர். ஒன்று; என் மனைவி அனுசூயா; இரண்டாவது: என் செல்ல மகள் மேகா. அவர்களுடைய தொடர்ந்த ஊக்கமும், உற்சாகமும்தான் என்னைக் களைப்படையாமல் செலுத்திக்கொண்டிருக்கின்றன !"

கூட்டம் கை தட்டியது. விழா முடிந்ததும் அவர்களை மேடைக்குக் கீழே கவர்னருக்கு அறிமுகம் செய்தான் நந்தா...

"இது, என் மனைவி அனுசூயா; என் தொழிற் சாலையின் எஜமானி. 15 வருடங்களாக இவள்தான் எனக்கு ஒவ்வொரு கட்டத்திலும் உறுதிகொடுத்து, நம்பிக்கையூட்டி, வழிநடத்தி வந்திருக்கிறாள்!"

கவர்னரைப் பார்த்து கை கூப்பினாள் அனுசூயா.

மொட, மொடப்பான பருத்திப் புடவையை அனுசூயா கட்டியிருந்த நேர்த்தி அவளுக்குத் தனி அழகு தந்தது; ஐந்தரை அடி உயரம். சற்றே கருமையான, திருத்தமான முகம். ஒளிவீசும் விழிகள். நெற்றியின் மையத்தில் சிறு வெள்ளி நிறப் பொட்டு. அவள் சிரித்தபோது, வெண் பற்கள் அந்த சருமத்திற்கு மேலும் அழகூட்டின.

அனுசூயாவின் கையைப் பிடித்துக்கொண்டு, பொருந்தி நிற்க முடியாமல் அசைந்துகொண்டேயிருந்த மேகா, அந்தக் கையை விலக்கிவிட்டு நந்தாவின் அருகில் வந்து நின்றாள்.

மேகாவுக்கு, அனுசுயாவின் அதே கண்கள், அதே மூக்கு, சருமத்தின் நிறம் மட்டும் சிவப்பாயிருந்தது. 16 வயதில், இளமையின் புதிய மொட்டாகத் தெரிந்தாள். அம்மாவிற்கு இணையான உயரம் வளர்ந்திருந்தாள். தாவணியில்லாத பாவாடையும், மேல் சட்டையும் அவளுக்குப் பொருத்தமாயிருந்தன.

"இது என் மகள் மேகா. எங்கள் இரண்டு பேருக்கும் எஜமானி!"

மேகாவின் கன்னங்கள் வெட்கத்தில் சற்றே சிவந்தன...

"போங்கப்பா," என்று நந்தாவிடம் சிணுங்கினாலும், பார்வை கவர்னர்மீதே பதிந்திருந்தது.

"இந்த டர்பனை உங்களுக்கு தினமும் கட்டி விடுபவர்களுக்கும், அரசாங்கம்தான் சம்பளம் கொடுக்கிறதா?" என்று ஆங்கிலத்தில் கேட்டாள்.

திடுக்கிட்டான் நந்தா...

"ஏய்... யார்கிட்ட துடுக்காப் பேசறதுன்னு கிடையாது?" என்று பதறினான்.

சிரித்தார் கவர்னர்...

"எனக்கு இவளைப் பிடித்திருக்கிறது" என்றார்.

இடம் : கண்காட்சி திடலின் கேளிக்கைப் பகுதி - விருது வழங்கும் விழா முடிந்ததும், அதைக் கொண்டாட வேண்டும் என்று அடம் பிடித்து இங்கே அழைத்து வந்திருந்தாள் மேகா...



"என் கொள்ளுத் தாத்தா வயசாகுது அந்தாளுக்கு. என்னைப் பிடிச்சிருக்குன்னு சொன்னா, உடனே அவர் ஜாதகத்தைக் கேட்டுருவீங்கன்னு நெனைச்சிட்டாரா?" என்றாள்.

"ச்சீ... 16 வயசு பொண்ணு மாதிரியாப் பேசுது இது?" என்று காதைப் பொத்திக்கொண்டாள் அனுசுயா.

சிரித்தான் நந்தா.

"இந்த மாதிரி விழாக்களுக்கும் கூப்பிடலைன்னா, கவர்னருங்களுக்கு போரடிச்சப் போயிடும்!" என்றான்.

"அப்பா... ஜயன்ட் வீல்ல போகணும்," என்று குழந்தைபோல் குதித்தாள் மேகா.

மூவரும் ஒருவருடன் ஒருவர் இழைந்தபடி, ராட்சஸ ராட்டினம் சுழன்ற பகுதிக்கு நகர்ந்தனர்.

ராட்சஸ ராட்டினத்தின் செங்குத்தான வட்டம், மின்சார மோட்டாரின் இயக்கத்தில் சுழன்றுகொண்டிருந்த வேகத்தில், அதில் அமர்ந்திருந்தவர்களிடமிருந்து பயக் கூச்சல்கள் காற்றை அதிரடித்துக்கொண்டிருந்தன.

அந்தச் சுற்று முடிந்து, அடுத்த சுற்றுக்காக ஒவ்வொரு பெட்டியாக கீழே வந்து நின்று, ஆட்களை ஏற்றிக்கொள்ள ஆரம்பித்தபோது, "இதுலயா போகணும்? வேணாம் மேகா!" என்று பின்வாங்கினாள் அனுசுயா.

"ஒரு ஆர்மிக்காரரோட பொண்டாட்டி, இப்படி நடுங்கினா நாட்டுக்கே அசிங்கம்... இல்லப்பா?" என்று அவளை முன்னால் தள்ளினாள் மேகா.

"நீயும் வா," என்று மேகாவையும் உள்ளே இழுத்தாள் அனுசுயா.

"அய்யே... நீங்க ரெண்டுபேரும் ஜாலியாப் போயிட்டு வாங்க... அப்புறம் நான் அப்பாவோட ஒரு ரவுண்டு போவேன் !"

பயத்தில் அவனுடன் நெருங்கி அனுசூயா உட்கார, பாதுகாப்புக் கம்பியை முன்னால் பொருத்திக்கொண்டான் நந்தா.

ராட்டினம் சுழலத் துவங்கியது. மெல்ல, மெல்ல வேகம் எடுத்தது. காற்றை எதிர்த்து சரேலென்று உயரத்திற்கு ஏறும்போதும், சடாரென்று கீழே இறங்கும்போதும், ரத்தம் ஜிவ்வென்று உடலெங்கும் வேகமெடுக்க, சின்னக் குழந்தைபோல் கத்திய அனுசூயா பயத்தில் நந்தாவைக் கட்டிக்கொண்டாள்; அவளைத் தன்னுடன் அணைத்துப் பிடித்துக்கொண்டான் நந்தா.

தன் சுற்றுகளை முடித்து, ராட்டினம் வேகம் குறைந்து நிறுத்தத்திற்கு வந்தபின்னும், கண்களைத் திறக்கவில்லை அனுசூயா. நந்தாவைப் பற்றிக்கொண்டிருந்தாள்.

"அனு..." என்று அவளைப் பிடித்து உலுக்கினான் நந்தா.

திடுக்கிட்டு விழித்துப் பார்த்தாள் அனுசூயா. சுற்றியிருந்தவர்களைப் பார்த்து கன்னங்கள் சிவக்க, சரேலென்று எழுந்தாள். மேகாவிடம் வகையாக மாட்டிக்கொண்டோம் என்று வெட்கத்துடன் அவளிருந்த திசையில் பார்த்தாள்.

ஆனால், ஒவ்வொரு சுற்றின்போதும் இவர்களைப் பார்த்து கையை வீசிக் காட்டிக்கொண்டிருந்த மேகாவை சுற்று வட்டாரத்தில் எங்கேயும் காணவில்லை.

★ ★ ★



## 2

"மேகா... மேகா எங்கே?" என்று பதறியபடி தேடினாள் அனுசூயா.

மிகப் பரந்திருந்த அந்தக் கண்காட்சித் திடலில், கலைத்துப் போட்ட எறும்புப் புற்று போல் குறுக்கிலும், நெடுக்கிலுமாக மக்கள் தலைகள் அலைந்து கொண்டிருந்தன. பார்வையைச் சுற்றிலும் அனுப்பிப் பார்த்தான் நந்தா.

"இங்கேதானே நின்னுக்கிட்டு நம்மளைப் பார்த்து கையை ஆட்டிக்கிட்டிருந்தா ?"

பரபரவென்று கூட்டத்தில் புகுந்து, இங்குமங்கும் விரைந்தான் நந்தா. ஜனத் திரளில் பாவாடை, தாவணி போட்ட பெண்கள் யார் கண்ணில் பட்டாலும், ஓடிப் போய் பார்த்துக்கொண்டிருந்தான். அனுசூயாவுக்கு பயத்தில் கண்களில் கண்ணீர் திரண்டுவிட்டது.

நந்தாவும், அனுசூயாவும் பதறித் தேடுவதை ரசித்துப் பார்த்தபடி, அவர்களைப் பார்வையிலிருந்து தவற விடாமல், ஸ்டால்களுக்குப் பின்னால் நகர்ந்துகொண்டிருந்தாள் மேகா.

ஐந்து நிமிடங்கள் கூட ஆகியிருக்காது. ஒரு கட்டத்தில் அனுசூயா களைத்து, தன்னிலை இழந்து அங்கு போட்டிருந்த சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்துவிட்டாள். அவளருகில் வந்து கவலையுடன் நின்றான் நந்தா...

"பயப்படாத... மேகா, நாலு ஊரை வித்துட்டு வரக்கூடியவ... சீக்கிரமே மொபைல் போனுக்கு பேசுவா; பாரு," என்று சமாதானமாகச் சொன்னாலும், அவனது கண்களும் பதட்டத்துடன் தன்னைத் தேடுவதை கவனித்தாள் மேகா.

பக்கத்து ஐஸ்க்ரீம் பார்லர் சென்று மூன்று ஐஸ்க்ரீம்கள் வாங்கிக்கொண்டாள். தடக்கென்று அவர்கள் எதிரில் போய் நின்றாள்...

"ஹாய், டார்லிங்ஸ்! ஏன் இப்படி என்னை விட்டுட்டு ஓடிவந்துட்டீங்க?"

துள்ளி எழுந்த அனுசூயா, அழுகை குமுற, மேகாவைக் கட்டிப் பிடித்தாள்...

"அடி செருப்பால... ஏண்டி இப்படிப் பதற வச்சிட்டே?"

"நீங்க ரெண்டு பேரும் ஜயன்ட் வீல்ல ரொமான்டிக்கா சுத்திட்டு எறங்கறப்ப, என் ஞாபகம் இருக்காதுன்னுல்ல நெனைச்சேன்!"

அவளைப் பார்த்ததும் கோபிப்பதா, கொஞ்சுவதா என்று நந்தாவுக்கு புரியவில்லை...

"மேகா, இன்னும் 10 நிமிஷம் விட்டிருந்தா, உங்கம்மாவுக்கு ஹார்ட்-அட்டாக் வந்திருக்கும்... இந்த மாதிரி விபரீதமா வெளையாடாதடா!"

"ஸாரி, ஸாரி, அம்மா! என்னை விடு; ஐஸ்க்ரீம் கரையுது பார்!"

மேலே நீலவானம் மேகங்களால் கறுப்புத் திரை போட்டுக்கொள்ளத் துவங்கியிருந்தது.

"அதென்னவோ தெரியலப்பா... உங்க ரெண்டு பேரையும் பார்த்தா, எனக்குள்ளயும் ஒரு ரொமான்டிக்



மூடு வருது... வெளையாடிப் பார்க்கணும்னு தோணுது... எனக்கு எப்பப்பா கல்யாணத்துக்குப் பாப்பீங்க?" தன் ஐஸ் க்ரீமை முதுகுக்குப் பின்னால் வைத்துக்கொண்டு, நந்தாவின் கையிலிருந்த ஐஸ்க்ரீமை வாயின் நுனியால் தொட்டு சுவைத்தபடி கேட்டாள் மேகா.

"என்னடா திடீர்னு ஆசை வந்துருச்சு?"

"அந்த பஞ்சாபி கவர்னருக்கு இஷ்டமா கேளுங்க... நாளைக்கே இவளைக் கட்டிக்கொடுத்துட்டு நாம நிம்மதியா இருக்கலாம்." உலர்ந்த கண்ணீருடன் சிரித்தாள் அனுசூயா.

"அய்... ஆசை! எனக்கு 20 வயசுல பண்ணினாலும் சரி; இல்ல அவ்வைப் பாட்டி வயசானதும் பண்ணிக் கொடுத்தாலும் சரி, ஒரே கண்டிஷன்... வர்றவன் எங்கப்பா மாதிரி இருக்கணும்!"

மேகாவின் கண்களில் கனவின் மினுமினுப்பு.

நந்தாவுக்குப் பெருமையாகவும், நெகிழ்ச்சியாகவும் இருந்தது... மேகாவின் தோள்களைப் பிடித்துத் தன்னுடன் அப்படியே அணைத்துக்கொண்டான்.

"அம்மா ராட்டினத்துல உங்களைக் கட்டிப் பிடிச்சிட்டிருந்தாங்களே... பயத்துலயா? இல்ல, சும்மா ஜாலிக்காகவாப்பா?"

"ஏ... ராஸ்க்கல்!" என்று புன்னகையுடன் மேகாவின் தலையில் செல்லமாகத் தட்டினான் நந்தா.

"உங்க ரெண்டுபேருக்கும் நடுவுல இருக்கறதுதான்மா அப்பழுக்கில்லாத காதல்; மத்ததெல்லாம் டூப் காதல்... ரெண்டு பேருக்கும் மூடு மாறி, வீட்டு ஞாபகம் வந்துருக்குமே!"

"அப்பா, அம்மாகிட்ட ஒரு மக பேசற மாதிரியாப் பேசுது இது? 18 வயசானதும், எவனுக்காச்சும் கட்டிக்கொடுத்துத் துரத்திரணும்," என்றபடி அனுசூயா கையை ஓங்க, அவளிடமிருந்து தப்பித்து ஓடினாள் மேகா.

விருட்டென்று போர்வை மேகாவின் முகத்திலிருந்து விலக்கி இழுக்கப்பட்டபோது, காலைச் சூரியன் சுள்ளென்று முகத்தில் அடித்தது.

"எழுந்திரு, கழுதை!"

கண்களைச் சுருக்கிப் பார்த்தாள் மேகா. குளித்து, உடுத்தி புறப்படத் தயாராயிருந்தாள் அனுசூயா. நாற்காலியில் உட்கார்ந்து, ஷூக்களின் லேஸ்களை முடிச்சிட்டுக் கொண்டிருந்தான் நந்தா; பக்கத்தில் சிறு பயணப் பெட்டி.

"நாளைக்கு எக்ஸாம்! படிக்கறதுக்காக லீவு விட்டா, தூங்கிட்டேயிருப்பியா? எழுந்து வா, கண்ணம்மா... வந்து கதவைப் பூட்டிக்க," என்று செல்லமாகக் கூப்பிட்டாள் அனுசூயா.

"சரியான கொடுமைக்கார ராட்சஸி!" என்று பற்களை நறநறத்தபடி படுக்கையிலிருந்து இறங்கினாள் மேகா.

"உனக்குப் பிடிச்ச மோர்க் குழம்பு; வறுத்த சேனைப் பொறியல் பண்ணியிருக்கேன். ஸ்கூலுக்குப் போறப்பதான் அள்ளிப் போட்டுக்கற. நிம்மதியா ரசிச்சு சாப்பிடு," என்று சொல்லிக்கொண்டே செருப்பில் கால்களை நுழைத்தாள் அனுசூயா.

மேகாவை அருகில் இழுத்து அவள் நெற்றியில் முத்தம் பதித்தான் நந்தா...

"அப்பா, இன்னிக்கு பிசினஸ் விஷயமா கோயமுத்தூருக்குப் போறேன்டா... ரெண்டே நாள்ல வந்துருவேன்!"



"அய்யய்யோ... இந்த ராட்சஸிகிட்ட தனியா விட்டுட்டுப் போறீங்களே... நீங்க இல்லேன்னா, இதுக்கு மூடு - அவுட்டாயிடுமே. என்கிட்ட எரிஞ்சு, எரிஞ்சு விழுமே...!" என்று அப்படியே அனுசூயாவைக் கட்டிப் பிடித்துத் தொங்கினாள் மேகா.

"புடவையைக் கசக்காத கொரங்கே," என்று அவளிடமிருந்து விடுபட்டாள் அனுசூயா.

"எதெதுக்கோ எக்சேன்ஜ் ஆபர் போடறாங்களே... அம்மாக்களுக்குப் போட்டா, மொதல்ல உன்னைக் கொண்டுபோய் கொடுத்துருவேன்!"

சிரித்தான் நந்தா...

"பத்திரமா இரு. தனியா இருக்கும்போது, க்ரில் கேட்டைப் பூட்டியே வச்சிரு," என்றான்.

அனுசூயாவின் கையைக் கோர்த்தபடி படிகளில் இறங்கினான்.

"அப்பா, ஊர்லேர்ந்து வரும்போது புது அம்மா வாங்கிட்டு வாங்க," என்று அவர்களுக்குப் பின்னாலேயே குரல் கொடுத்துவிட்டுச் சிரித்தபடி கதவைச் சாத்தினாள் மேகா.

விருது வாங்கிய மேடையில் மிகைப்படுத்திச் சொல்லிவிடவில்லை நந்தா...

குடும்பத்தில் மட்டுமல்லாது, கம்பெனியிலும் நந்தாவுக்கு உற்ற துணையாக அனுசூயா இருப்பது மேகாவுக்குத் தெரியும்.

நந்தா ஊரில் இல்லாத நாட்களில், தொழிற்சாலையில் எல்லா முக்கிய முடிவுகளும் எடுப்பது அவள்தான். அதனால், வீடு திரும்ப தாமதமாகிவிடும், அரை

மணிக்கொருதடவை வீட்டுக்கு போன் செய்து, மேகாவை விசாரித்துக்கொண்டிருப்பாள்.

போரடித்தால், அவளையும் கம்பெனிக்கு வரச் சொல்லிவிடுவாள். இருவருமாகச் சேர்ந்து எங்காவது வெளியில் சாப்பிட்டுவிட்டு வீடு திரும்புவர். அந்த நாட்களில் மட்டும் மேகாவின் இடுப்பைக் கட்டிக்கொண்டு அவளோடு படுப்பாள் அனுசூயா.

'அப்பாவை நீ மொத, மொதல்ல எப்பம்மா பார்த்தே? எங்கேம்மா பார்த்தே? அப்ப, என்ன டிரெஸ் போட்டிருந்தாரு? நீ என்ன டிரெஸ் போட்டிருந்தே?' என்று ஏதாவது நச்சரித்தபடியே தூங்கிப் போவாள் மேகா.

நந்தா ஊரில் இல்லாத இந்த இரண்டு நாட்களும் அனுசூயாவிடம் எப்படி வம்பு செய்வது என்று யோசித்தபடியே, பல் தேய்த்து, குளித்து முடித்தாள்...

ஆரம்பத்தில், அப்பாவுக்கு அம்மாவும்; அம்மாவுக்கு அப்பாவும் காதல் கடிதங்கள் எழுதாமலா இருந்திருப்பார்கள்? அதைக் கண்டெடுத்துவிட்டால் போதும்; அனுசூயாவை ஒரு வழி பண்ணிவிடலாம்.

எண்ணம் தோன்றியதுமே, முக்காலியைப் போட்டு, பரண் மீது ஏறி, அம்மா வைத்திருக்கும் அவளுடைய பழைய பெட்டியைக் கீழே இறக்கினாள்.

தூசைத் தட்டி திறந்து, ஆராய்ந்தாள்...

பழைய ஸ்வெட்டர், ஓரங்கள் நைந்துபோன பட்டுப் புடவை, மேகாவின் ஆரம்ப வயதில் அவளை எடுத்த புகைப்படங்களின் ஆல்பங்கள் என்று கலந்து கட்டி, என்னென்னவோ இருந்தன. ஒவ்வொன்றாக வெளியே எடுத்து வைத்துப் புரட்டினாள் மேகா. 15 ஆண்டுகளுக்கு முன் நந்தாவின் மீசை பெரிதாக இருந்திருக்கிறது.



அம்மாவின் கண்களுக்குக் கீழ் கருவளையம்; கன்னங்கள் ஒட்டியிருந்திருக்கின்றன. அம்மா இப்போது தான் ஆரோக்கியமாக, அழகாக, சந்தோஷமாக இருக்கிறாள்.

'எப்படிப்பா இந்த ஈர்க்குச்சியை மனசு வந்து கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க?' என்று நந்தாவிடம் இந்த போட்டோவைக் காட்டி கலாட்டா செய்ய வேண்டும். தனியே எடுத்து வைத்தாள். அனுசூயாவின் பழைய புடவையை எடுத்தபோது, அதற்குள்ளிருந்து ஒரு புகைப்படம் கீழே நழுவி விழுந்தது.

அதை எடுத்துப் பார்த்ததும், மேகாவின் அடிவயிற்றில் கத்தியை செருகினாற் போலிருந்தது. நம்ப முடியாதவளாக, தலையை உலுக்கி மறுபடி பார்த்தாள்.

கறுப்பு - வெள்ளைப் புகைப்படம். அதில் இளவயது அனுசூயா இருந்தாள். அவள் கன்னத்தோடு கன்னம் வைத்து கொஞ்சிக் கொண்டிருந்த இளைஞன்...

சத்தியமாக நந்தா இல்லை; அம்மாவிற்கு அண்ணன், தம்பிகள் கிடையாது என்று சொல்லியிருக்கிறாளே... அப்படியானால் யார் இவன்?

புகைப்படத்தைத் திருப்பினாள். பின்னால் நான்கு வரிகள் கிறுக்கப்பட்டிருந்தன...

'செல்ல அனுகுண்டுவுக்கு,

தித்திக்கும் முத்தங்கள்...

கரையாத காதலுடன்,

சங்கர்...'

மேகாவின் நெஞ்சில் மின்னல் கிழித்து நுழைந்தாற்போலிருந்தது.

மறுபடி, மறுபடி அதே புகைப்படத்தைப் பார்த்தாள். இது அம்மாதானே? அம்மாவேதான்!

அப்படியானால், அவளுடைய முகத்தோடு முகம் வைத்துக் கொஞ்சும் அளவு நெருக்கமாக இருக்கும் இந்த சங்கர் யார்? 'செல்ல அனுகுண்டு' என்று கொஞ்சலாக அழைக்கும் அளவுக்கு உரிமை எடுத்துக்கொண்டது எப்படி? 'கரையாத காதலுடன்' என்ற அழுத்தம், திருத்தமான வார்த்தைகளுக்கு வேறு என்ன அர்த்தம் இருக்க முடியும்?

அப்படியானால், அவள் அம்மாவின் வாழ்க்கையில் யாருக்கும் சொல்லப்படாத அந்தரங்கமான வாழ்க்கை ஒன்று இருக்கிறதா? இந்த ஆளுடன் அவள் எவ்வளவு தூரம் உறவு வைத்திருந்தாள்? அவனை அவள் மறந்திருந்தால், இந்தப் புகைப்படத்தை பத்திரப்படுத்தியிருப்பது ஏன்?

யோசிக்க, யோசிக்க மேகாவின் மண்டைக்குள் பூகம்பங்கள் வெடித்தன.

★ ★ ★



# 3

மறுபடி, மறுபடி அந்த போட்டோவைப் பார்த்து துக்கமானாள் மேகா.

முன்பின் பார்த்திராத அந்த சங்கர் மேல் அதீதமான வெறுப்பு வந்தது. எந்த தைரியத்தில் அந்த அயோக்கியன் அம்மாவின் முகத்தோடு முகம் உரசிக்கொண்டிருக்கிறான்?

காதல் தோல்வியாக இருந்தால், அன்றைக்கே இந்த போட்டோவைக் கிழித்துப்போட்டிருக்கமாட்டாளா அம்மா? கல்யாணத்துக்கு அப்புறமும் ஒளித்து வைத்திருக்க வேண்டிய அவசியம் என்ன?

அம்மாவும், அப்பாவும் காதல் தேவர்களால் படைக்கப்பட்டதாக, தான் நினைத்துக்கொண்டிருப்பதெல்லாம் அர்த்தமற்றதா? இன்னொருத்தனை மனதில் சுமந்துதான், அப்பாவிடம் இழைந்து, இழைந்து காதலாக நடந்துகொள்வது போல் நடிக்கிறாளா? 16 வயதில், மேகாவிற்குக் கிடைத்திருந்த குறுகிய அனுபவங்களின் அடிப்படையில், அனுசூயாவின் மீது அசாத்தியமான காழ்ப்புதான் குமுறி வந்தது.

அனுசூயாவை கேலி செய்யலாம் என்று நினைத்திருந்ததெல்லாம் கரைந்து, எதற்காக இந்தப் பெட்டியைத் திறந்தோம் என்ற வேதனைதான் பெருகி நின்றது. அந்தப் புகைப்படத்தைத் தவிர, மற்றதையெல்லாம் பழையபடி வைத்து, பரண் மீது பெட்டியை தள்ளினாள்.

போன் அடித்தது; எடுத்தாள்... அனுசூயாதான்.

பின்னணியில் இயந்திரங்களின் ஒலி கேட்க, அவள் குரல் சற்று உரக்க ஒலித்தது...

"கண்ணா... ஆரஞ்சு டப்பால உனக்காக கார்ன் ப்ளேக்ஸ் வாங்கி வச்சேன்டா... சொல்ல மறந்துட்டேன்; எடுத்துக்க !"

பதில் சொல்லாமல் தொடர்பைத் துண்டித்தாள் மேகா.

உடனடியாக மறுபடி போன் ஒலித்தது; எடுத்தாள்.

"மேகா... பாதி பேசிட்டிருக்கும்போது லைன் கட் ஆயிருச்சு... உனக்காக ஆரஞ்சு டப்பால..."

"கார்ன் ப்ளேக்ஸ் சாப்பிடலைன்னா, உயிர் ஒண்ணும் போயிடாது," என்று சொல்லிவிட்டு ரிசீவரை போனில் அறைந்தாள் மேகா.

மறுபடி, போன் ஒலித்தது.

"என்னைக் கொஞ்சம் நிம்மதியா விடேன்," என்று போனில் இரைந்துவிட்டு, மறுபடி தொடர்பைத் துண்டித்தாள் மேகா.

சிறு தொழில் பட்டறைகளின் சொர்க்கமாக விளங்கும் கிண்டி தொழிற்பேட்டை -

'அனுசூயா ஆட்டோ மொபைல்ஸ்' என்று போர்டு வைத்த அந்தத் தொழிற்சாலையில் இயந்திரங்கள் விடாமல் இயங்கிக்கொண்டிருந்தன.

கையில் ஏந்திய ரிசீவருடன் இயக்கம் இழந்து, உறைந்து நின்றாள் அனுசூயா.

என்னாயிற்று மேகாவிற்கு ? சும்மா சீண்டிப்பார்த்து விளையாடுகிறாளா ? இல்லை, தூக்கக் கலக்கமா ? பரீட்சை பற்றிய பயமா ? ஒரு வேளை உடம்பு சரியில்லையா ?



நந்தா இருந்தால், அவனிடம் கேட்கலாம். அவனிடம் தானே எல்லாவற்றையும் பகிர்ந்துகொள்வது வழக்கம் ! கோவையில், என்ன பரபரப்பில் அவன் இருக்கிறானோ... அவனை இந்த விஷயங்களுக்காகவெல்லாம் தொந்தரவு செய்வது சரியல்ல. மேகாவை நம்ப முடியாது. மாலையில் அவளைப் பார்த்ததும், 'பயந்துட்டியா ?' என்று கழுத்தைக் கட்டி முத்தம் கொடுக்கும் தடிமாடு !

தன்னையே அனுசூயா சமாதானம் செய்து கொண்டாலும், உள்ளுக்குள் ஏதோ ஓர் அபாய மணியின், 'ஙண... ஙண' கேட்டுக்கொண்டேயிருந்தது.

கண்ணாடிக் கதவுக்கு மறுபுறம் இயந்திரங்கள், கடகடவென்று சப்தித்தபடி ஓடிக்கொண்டிருந்தன.

நந்தாவிற்கு நிர்வாகத்தில் உதவுவதற்காக வந்துவிட்டு, இந்த அற்ப விஷயங்களுக்காக மனதை அலையவிடக் கூடாது என்று முடிவெடுத்தாள். பில்களைப் பிரித்து அடுக்கி, கம்ப்யூட்டரில் பதிவு செய்வதில் கவனத்தைத் திருப்பினாள்.

மாலை மேகாவிற்குப் பிடித்த சூடான சமோசாக்களை மறக்காமல் வாங்கிக்கொண்டாள்.

வீட்டிற்குள் நுழைந்தபோது, அனுசூயாவிற்கு அதிர்ச்சி காத்திருந்தது...

காலை டிபனும், மதிய உணவும் தொடப்படாமல், மேஜை மீது அப்படியே இருந்தன.

கட்டிலில் குப்புறப்படுத்திருந்தாள் மேகா. அழுது களைத்தவளைபோல் அவளது கண்கள் சிவந்திருந்தன.

பதறினாள் அனுசூயா... காய்ச்சலா என்று மேகாவின் கழுத்தில் புறங்கையை வைத்துப் பார்த்தாள்.

அந்த கையை தட்டிவிட்டு அனுசூயாவைக் காழ்ப்புடன் பார்த்தாள் மேகா...

"உன் நாடகத்தையெல்லாம் அப்பாவோட நிறுத்திக்க," என்றாள்.

இயலாமையில் கோபமானாள் அனுசூயா...

"மேகா... வெளையாடறதுக்கு ஒரு லிமிட் இருக்கு... காலைலேர்ந்து சாப்பிடாம ஏன் இருக்கே?"

"வெஷத்தை வாங்கிக்கொடு... சாப்பிடறேன்," என வெடித்தாள் மேகா.

"என்னால் தாங்க முடியலைடா... என்ன பிரச்னை? உண்மையைச் சொல்லு... நான் உன் செல்ல அம்மா இல்ல?" என்று மேகாவின் பக்கத்தில் உட்கார்ந்தாள் அனுசூயா.

விருட்டென்று எழுந்து, "உண்மையைப் பத்தி நீ பேசறயா? உன்னை என் அம்மான்னு சொல்லிக்கவே வெக்கமா இருக்கு!"

"என்னடா ஆச்சு உனக்கு?" என்று பரிதாபமான குரலில் கேட்டாள்.

அவளை உதறினாள் மேகா...

"என்னை எதுவும் கேக்காத! கேட்டா, வீட்டை விட்டு ஓடிப்போயிடுவேன்!" என்று க்ரீச்சிட்டுவிட்டு மொட்டை மாடிக்கு ஓடிப்போனாள்.

அப்படியே தளர்ந்து உட்கார்ந்தாள் அனுசூயா.

எங்கே, என்ன தப்பு நடந்தது? அம்மாமேல் எதற்கு மேகாவுக்கு இத்தனைக் கோபம்? வீட்டைவிட்டே ஓடிப்போவேன் என்று மிரட்டுமளவிற்கு அரை நாளுக்குள் என்ன காழ்ப்பு வந்துவிட முடியும்?

அனுசூயாவிற்குத் தலை சுற்றியது; உயிரற்ற இயந்திரம் போல் வேலைகளை செய்தாள்.



இரவு -

மனம் கேட்கவில்லை. அனுசூயாவும் சாப்பிட வில்லை.

மேகாவின் கோபம் குறைந்திருக்கும் என்று நினைத்து மொட்டை மாடிக்கு ஏறினாள். நட்சத்திரங்களைத் தவிர, மொட்டை மாடி மற்றபடி இருட்டாயிருந்தது. விளக்கைப் போட்டாள்.

உலர்த்தப்பட்ட துணிகள் மட்டும் காற்றில் குதியாட்டம் போட்டன; மேகா தென்படவில்லை.

பதறினாள் அனுசூயா...

"மேகா... என்னை உயிரோடக் கொல்லாதடா... எங்கே இருக்கேடா? எதுக்குக் கோபம்னு சொல்லுடா," என்று கெஞ்சும் குரலில் கேட்டபோது அழுகை சிறியது.

படிகளில் அனுசூயா ஏறி வரும் சப்தம் கேட்டதுமே, மொட்டை மாடியில் அமைக்கப்பட்டிருந்த கான்க்ரீட் தண்ணீர்த் தொட்டிக்குக் கீழே இருந்த இடைவெளியில் போய் பதுங்கியிருந்தாள் மேகா.

அம்மா பதறித் பதறி தன்னைத் தேடுவதைப் பார்த்து, முன்பு வேடிக்கையாக ரசித்தது போலல்லாமல், அவளுக்கு இப்போது, ஒரு குரூர சந்தோஷம் வந்தது... தேடட்டும்; பதறட்டும்; பைத்தியமாகட்டும்!

"மேகா..." என்று மறுபடி அனுசூயா அழைத்தபோது குரல் உயர்ந்திருந்தது.

அக்கம் பக்கத்திலிருப்பவர்கள் ஒலி கேட்டு மாடிக்கு வருவரா? அவளை நிறுத்தி வேண்டாத கேள்விகள் கேட்பரா? தர்ம சங்கடங்களை எதிர்கொள்ளத் தயாராயில்லை மேகா.

தண்ணீர்த் தொட்டிக்கு அடியிலிருந்து சட்டென்று வெளியே வந்தாள். அந்த ஒலி கேட்டு திரும்பினாள் அனுசூயா...

"மேகா !" என்று அதட்டலாகக் கூப்பிட்டாள்.

நிற்காமல் சட, சடவென்று படிகளில் இறங்கி விட்டாள் மேகா. பின்னாலேயே பதறிக்கொண்டு இறங்கி வந்தாள் அனுசூயா.

நேரே தன் படுக்கைக்கு வந்து பரபரவென்று படுத்தாள் மேகா. போர்வையைத் தன் தலை வரை இழுத்துக்கொண்டாள். அனுசூயாவின் இதயம் வெடித்து விடுவதுபோல் படபடத்தது...

"ஏண்டா, என்னைக் கண்டா உனக்கு இவ்வளவு வெறுப்பு? நான் என்ன தப்பு பண்ணினேன்?" என்று அந்தப் போர்வையை நகர்த்தியபோது, வெடுக்கென்று எழுந்து உட்கார்ந்தாள் மேகா...

"இன்னொரு தரம் என்னைக் கேள்வி கேட்டா, நான் வீட்டை விட்டு நிஜமாகவே ஓடிப்போயிடுவேன்," என்று அனல் கக்கும் வார்த்தைகளை உதிர்த்தாள்.

"சரி, எதுவும் கேக்கல; சாப்பிட வா !"

"வேணாம் !"

"காலைலேர்ந்து எதுவும் சாப்பிடல... பசிக்கலையா உனக்கு ?"

"பசிக்கலைன்னு சொல்லல... உன் கையால இனிமே சாப்பிட மாட்டேன் !"

மறுபடி இழுத்துப் போர்த்திக்கொண்டாள் மேகா.

அனுசூயாவிற்கு இதயத்தில் சூட்டுக் கோலை செருகியது போல் வலித்தது. ஒரு பக்கம் அழுகையும், ஒரு பக்கம் கோபமும் பொங்கின. முந்தின தினத்திலிருந்து நடந்ததையெல்லாம் மறுபடி, மறுபடி மனதில் காட்சிகளாக ஓட்டிப் பார்த்தாள். மேகாவை இவ்வளவு தூரம் கோபப்படுத்தும்படி அவள் செய்தது என்ன ? எவ்வளவு யோசித்தும், அவளுக்குப் புரியவில்லை.



நந்தாவைக் கூப்பிட்டுப் பேசலாமா ? வேண்டாம். மிக முக்கியமான வர்த்தக விஷயமாக போயிருக்கிறான். அவன் நிம்மதியைக் கெடுக்க வேண்டாம். அவன் திரும்பி வரும்வரை இரண்டு நாட்கள் காத்திருக்க வேண்டியது தான்.

அவளும் சாப்பிடாமல், மேகாவின் அருகில் அவளை ஒட்டிப் படுத்தாள். அவள் இடுப்பில் கையைப் போட்டு அணைத்தாள். உடனடியாக அந்தக் கையை விலக்கினாள் மேகா.

காலையிலிருந்து அலுவலகத்தில் உழைத்துவிட்டு வந்திருந்த அனுசூயாவின் உடம்பு அசதியில் ஓய்வு கேட்டுக் கெஞ்சியது. ஆனால், மனதில் கொதிக்கும் எண்ணங்கள் புரண்டு கொண்டிருக்கையில் உறக்கம் பிடிபடவில்லை.

இருட்டை வெறித்து பார்த்து விழித்திருந்தாள்.

எவ்வளவு சந்தோஷமான சிறிய குடும்பம் என்று அவள் இறுமாந்திருந்தாள் ? எந்தக் கொள்ளிக்கண் பட்டது ?

விழிகள் களைத்துக் களைத்து தாமாகவே மூடின. மேகாவும் தூங்கியிருப்பாள் போல; இந்தமுறை இடுப்பில் கை போட்டபோது விலக்கி விடவில்லை.

விடிகாலையில் பட படவென்று கதவு தட்டப் பட்டது.

மற்ற நாட்களில் உலுக்கி எழுப்பினால்கூட கண் திறக்காத மேகா, சடாரென்று விழித்தாள். அனுசூயாவை முந்தி வாசலுக்கு ஓடி, கதவைத் திறந்தாள்.

பின்னாலேயே போனாள் அனுசூயா.

கையில் பயணப் பெட்டியை சுமந்தபடி, களைத்த கண்களுடன் நின்றிருந்தான் நந்தா.

"எதுக்குடா போன் பண்ணி, என்னை அவசரமா வரச் சொன்னே?" என்று மேகாவைக் கேட்டான்.

அவன்மீது பாய்ந்து கட்டிக்கொண்டாள் மேகா...

"இவ... இவ உங்களுக்கு துரோகம் பண்ணியிருக் காப்பா," என்று அனுசூயாவின் பக்கம் காட்டி, குமுறி அழ ஆரம்பித்தாள்.

விக்கித்து நின்றாள் அனுசூயா.

★ ★ ★



## 4

முகத்தை நந்தாவின் மார்பில் புதைத்து விம்மி அழுதாள் மேகா...

"அம்மா துரோகம் பண்ணிட்டாப்பா! நீங்க ரெண்டு பேரும்தான் அருமையான ஜோடி, 'மேட் பார் ஈச் அதர்'ன்னு எவ்வளவு தடவை சொல்லியிருக்கேன். ஆனா, அம்மா கள்ளத்தனமா இன்னொருத்தனை மனசுல வெச்சுக்கிட்டு, உங்ககூட வாழ்ந்திருக்காப்பா!"

வானைக் கிழிக்கும் மின்னல், செங்குத்தாக தன் உச்சி மண்டையில் இறங்கிவிட்டாற் போல் நடுங்கினாள் அனுசூயா.

கையில் பிடித்திருந்த பயணப் பையை கீழே நழுவ விட்டான் நந்தா. தன்னை அணைத்துப் பிடித்திருந்த மேகாவை உலுக்கினான்...

"கண்ணம்மா... என்ன பேசற நீ?"

ஒரே எட்டில் மேகாவை நெருங்கி, நந்தாவிடமிருந்து அவளைப் பிரித்து விலக்கினாள் அனுசூயா. அவள் கண்களில் கனல் தெறித்தது. கையை வீசியபோது அது மேகாவின் இடது கன்னத்தை ஓங்கி அறைந்தது...

என்னடி சொன்ன? ஏதோ விளையாட்டுக்குப் பேசற, வம்பு பண்ணிட்டிருக்கன்னு உனக்கு இடம் குடுத்தா, என்ன வேணாப் பேசலாம்ன்னு நெனைச்சிட்டியா?"

அனுசூயா அவ்வளவு கோபப்பட்டு, வாழ்நாளில் பார்த்ததில்லை நந்தா.

அம்மாவிடம் வாங்கிய அறையின் அதிர்வுகள் உச்சி மண்டைவரை எதிரொலித்துக் கொண்டிருக்க, மேகாவின் அழுகை விசையை அணைத்தாற்போல் நின்றிருந்தது.

"அனு... விடு! சின்னப் பொண்ணு..." என்று மேகாவை அனுசூயாவிடமிருந்து விலக்கினான் நந்தா.

அனுசூயாவின் ஆத்திரம் அத்தனையும் அப்படியே உருமாறி, அழுகையாக வெடித்தது... நந்தாவை கட்டிப் பிடித்து, அவன் தோளில் முகம் புதைத்து அழலானாள். அதிர்ந்து பின்வாங்கி சுவரில் சாய்ந்து நின்றிருந்த அவள் நந்தாவை அனுசூயா அணைத்துக்கொண்டதும் பாய்ந்து வந்தாள்...

"விடு... உன் அசிங்கம் பிடிச்ச கையால அப்பாவைத் தொடாத!" என்று அனுசூயாவைப் பிடித்து இழுத்தாள்.

இந்தமுறை நந்தாவின் முகத்திலும் கோபம் கொப்பளித்தது...

"மேகா... வயசுக்கு மீறிப் பேசற... உம்மேல உயிரையே வெச்சிருக்கற அம்மாவைப் பாத்து இப்படிப் பேசறதுக்கு உனக்கு எப்படி மனசு வந்தது?"

"அப்பா... உங்களுக்கு இந்த அம்மாவைத் தெரியாது. அத்தனையும் நடிப்பு... அத்தனையும் கள்ளத்தனம்... அம்மாவைப் பத்தி என்கிட்ட ஆதாரம் இருக்கு... வாங்க, காட்றேன்..." நந்தாவின் கரத்தைப் பிடித்து இழுத்துச் சென்றாள் மேகா. பின்னும் கால்களுடன் பின்னாலேயே தொடர்ந்தாள் அனுசூயா.

புத்தக அலமாரியை திறந்து, புத்தகங்களுக்கு நடுவில் செருகியிருந்த அந்த கறுப்பு - வெள்ளை புகைப்படத்தை எடுத்து நந்தாவிடம் நீட்டினாள் மேகா...



"பாருங்கப்பா... இந்த போட்டோவைப் பாருங்க. பின்னால என்ன எழுதியிருக்குன்னு படிச்சுப் பாருங்க!"

அந்தப் புகைப்படத்தைப் பார்த்ததும், மின்சாரத்தைத் தொட்டவன் போல் அதிர்ந்தான் நந்தா. அனுசூயாவின் முகத்திலும் கலவரம் புயலாக வீசியது...

"மேகா! இதை... இதை... எங்கேருந்து எடுத்த?" பதறும் குரலில் கேட்டாள் அனுசூயா.

"ஏன்? ரகசியம் வெளிப்பட்டுடுச்சேன்னு டென்ஷனா இருக்கா. யாருக்கும் தெரியக்கூடாதுன்னு ஒளிச்சு வெச்சிருந்தியே... உன் பெட்டிலருந்துதான் எடுத்தேன்!"

"என் பெட்டியை எதுக்குத் திறந்த?"

"நான் ஒரு முட்டாள்... அப்பாவுக்கு லவ்வோட ஏதாவது லெட்டர் எழுதியிருப்ப. அதைவச்சு, உங்க ரெண்டுபேரையும் கலாட்டா பண்ணலாம்ன்னு நெனைச்சு, உன் பெட்டியைத் திறந்தேன். இந்த அசிங்கம் கண்ல பட்டுத் தொலைச்சுது. கட்டிப் புடிச்சு முத்தம் கொடுக்கற மாதிரி கன்னத்துல கன்னம் வெச்சிருக்கியே... யாரு இந்த சங்கர்? இந்த அசிங்கம்லாம் கல்யாணத்துக்கு அப்புறமா, இல்ல... கல்யாணத்துக்கு முன் நடந்ததா?"

விசை இழந்த பம்பரம் போல அப்படியே ஓய்ந்து தரையில் அமர்ந்துவிட்டாள் அனுசூயா.

மெல்ல வாய் திறந்தான் நந்தா...

"மேகா! உண்மை என்னன்னு தெரியாம, அம்மாவ வாய்ல வந்தபடி பேசக்கூடாது. இதெல்லாம் பெரியவங்க விஷயம். நீ சின்னப்பொண்ணு; தலையிடக்கூடாது..."

மேகாவின் கண்களில் அம்மா அறைந்த அறையின் வலி காரணமாக கண்ணீர் வந்ததே தவிர, அழுகை நின்று

போயிருந்தது. முகத்தில் உறுதியும், அனுசூயாவின் மீது கோபமும் பொங்கியிருந்தன...

"நான் சின்னப்பொண்ணு இல்லப்பா ! வளர்ந்தாச்சு. இனிமே இந்த துரோகிகூட என்னால வாழ முடியாது. இந்தக் கையால சமைச்ச சாப்பாட்டை என்னால சாப்பிட முடியாது. நீங்க வெளியூர் போறதா இருந்தா, என்னையும் கூட அழைச்சிட்டுப் போயிடுங்கப்பா. என்னை தனியா விட்டுட்டுப் போனீங்கன்னா, திரும்பி வரும்போது உயிரோடவே பார்க்க மாட்டீங்க !"

"கடவுளே..."

தன் நெற்றியைப் பிடித்துக் கொண்டான். 16 வயது பூச்செடியிடம், ஒரு மரத்தின் பாரத்தை எப்படி இறக்கி வைப்பது ?

சற்று நேரம் திகைப்பிலேயே அந்த இடத்தில் அமைதி நிலவியது.

"மேகா... உன்கிட்ட சொல்லவே வேண்டாம்னுதான் நினைச்சிருந்தோம். ஆனா, இப்போ விஷயம் எங்க கை மீறிப் போயிடுச்சு. இனிமேலும் உங்கிட்ட மறைச்சு வெக்கறது நல்லாயில்ல !"

முக்காலியை இழுத்துப்போட்டு ஏறி, பரணில் அனுசூயாவின் பெட்டிக்குப் பின்னால் வைக்கப்பட்டிருந்த தன் பெட்டியை இறக்கினான் நந்தா...

"இதைத் திற..."

மேகா, நடுங்கும் விரல்களால் ராணுவத்தின் அடர் பச்சை வண்ண பெயின்ட் அடித்திருந்த அந்தப் பெட்டியின் மூடியைத் திறந்தாள். அந்துருண்டையின் வாசம் காற்றில் பரவியது. மேலாக மடித்து வைக்கப்பட்டிருந்த ராணுவச் சீருடைகளை ஒவ்வொன்றாக வெளியே எடுத்தான் நந்தா.



அடுத்து என்ன வரப்போகிறதோ என்ற ஆவலுடன் பார்த்தாள் மேகா. பெட்டியின் அடியிலிருந்து, சற்றே பழுப்பேறியிருந்த, 'திருமண நினைவுகள்' என்ற புகைப்பட ஆல்பத்தை எடுத்து, மேகாவிடம் நீட்டினான்.

"திறந்து பாரு..."

சுவரில் சரிந்து உட்கார்ந்திருந்த அனுசூயா, தன் முழங்கால்களுக்கிடையில் முகத்தைப் புதைத்து மெலிதாக விம்மிக் கொண்டிருந்தாள். குழப்பம் நீங்காதவளாக அந்த ஆல்பத்தை எடுத்து மடியில் வைத்து புரட்டினாள் மேகா.

முதல் பக்கத்தில் ஒரு திருமண அழைப்பிதழ் ஒட்டப்பட்டிருந்தது. 17 வருடங்களுக்கு முந்தைய தேதியில் நடந்த திருமணம். மணமகள் : அனுசூயா, மணமகன் : சங்கர்.

ஆல்பத்தைப் புரட்டப் புரட்ட, அதிர்ந்தாள் மேகா. ஒவ்வொரு புகைப்படத்திலும் திருமணத்தின் வெவ்வேறு கட்டங்கள். மணக்கோலத்தில் அலங்காரங்களோடு காணப்பட்ட அனுசூயாவின் கையைப் பிடித்திருந்தது நந்தா இல்லை; அவள் ஏற்கனவே புகைப்படத்தில் பார்த்திருந்த அந்த சங்கர்.

"என்னப்பா இது ?" மிரண்டு கேட்டாள் மேகா.

மேகாவிடமிருந்து ஆல்பத்தை வாங்கி கட்டிலில் வைத்தான் நந்தா...

"எதையும் மறைக்காம, எல்லா உண்மையையும் உங்கிட்ட சொல்லப்போறேன். போய் மூஞ்சியக் கழுவிட்டு வா !"

அனுசூயாவைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே பாத்ரூமுக்கு நடந்தாள் மேகா...

அனுசூயாவை நெருங்கி அவளை அணைத்துக் கொண்டான் நந்தா...

"அனு... பயப்படாதடா! மேகா புரிஞ்சுப்பா... அவ வயசுக்கு வேற என்ன தோணும் சொல்லு?"

அவன் தோளில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள் அனுசுயா.

"நீங்க திரும்பி வரப்போறீங்கன்னு ஏன் என்கிட்ட சொல்லவே இல்ல?"

"அனு! சொன்னா நீ புரிஞ்சுப்பன்னு நினைக்கறேன். மேகா, போன் பண்ணினபோது ரொம்ப டென்ஷனா இருந்தா, 'உடனே ஊருக்குப் புறப்பட்டு வாங்க'ன்னு சொன்னா. 'நாளைக்கு காலைலகூட ஒரு க்ளையன்ட்டோட முக்கியமான ஆர்டர் பத்திப் பேசணும். அப்படில்லாம் சட்டுப்புட்டுன்னு நான் புறப்பட்டு வந்துட முடியாது. ரெண்டு நாள் அட்ஜஸ்ட் பண்ணிக்க கண்ணு'ன்னு சொல்லிப் பாத்தேன்.

"அவ, 'விடியறதுக்குள்ள நீங்க வரல்லைன்னா, நான் பொறப்பட்டு அங்க வந்துடுவேன்ப்பா'ன்னு அழுதா... பதறிப் போயிட்டேன். சரி! போனை அம்மாட்ட குடுன்னேன்... அம்மாகிட்ட நீங்க வர்றதைப் பத்தி சொன்னா, உயிரை விட்டுருவேன்னு அழுதா... நான் ரொம்பக் குழம்பிப் போயிட்டேன் அனு!"

அனுசுயாவிற்கு நந்தாவைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது.

"கொஞ்சம் மேகாவோட இடத்துல உன்னை வெச்சுப் பாரு... இதுவரைக்கும் அப்பாவும், அம்மாவும் ஒருத்தருக்காவே ஒருத்தர் உருவாக்கப்பட்டவங்கன்னு நினைச்சுட்டிருந்தது... திடீர்னு இப்படி ஒரு போட்டோ கண்ணுல பட்டா, அந்தச் சின்னப் பொண்ணு ஷாக்காகுமா, ஆகாதா? அந்தப் பதட்டத்துலதான் அப்படிப் பேசியிருக்கு. மேகா பேர்ல கோபம் வெச்சுக்காதடா!"



தலையசைத்து மறுத்தாள் அனு...

"இல்ல... எனக்கு அவ பேர்ல கோபம் இல்ல. ஆனா, உண்மை தெரிஞ்சப்புறம் அவ எப்படி நடந்துப் பாளோன்னு பயமாத்தான் இருக்கு!"

"பயப்படாத. நான் இருக்கேன்..." என்று அவளை அணைத்துக்கொண்டான் நந்தா.

"நைட்டு பூரா தூங்காம பஸ்ல வந்தது, ஒடம்பெல்லாம் அடிச்சுப் போட்ட மாதிரி இருக்குடா. உன் கையால ஒரு காபி சாப்பிட்டாதான் தெம்பா இருக்கும். ஓடு!"

கண்களை புறங்கையால் துடைத்துக்கொண்டாள் அனுசுயா.

மேகா முகம் கழுவி, தலையை வாரி, நந்தாவுக்கு எதிரில் அமர்ந்திருந்தாள். அவனாக மவுனத்தை உடைக்க வேண்டும் என்று பொறுமையுடன் காத்திருந்தாள். காபியை நந்தாவிற்கு எதிரிலும், போர்ன்விடாவை மேகாவுக்கு எதிரிலும் வைத்தாள் அனுசுயா.

சட்டென்று அந்தக் கையை உதறினாள் மேகா...

"தொடாத!"

விலகி வந்து உட்கார்ந்தாள் அனுசுயா. காபியை அருந்திவிட்டு, தொண்டையை செருமிக்கொண்டான் நந்தா...

"நேத்துலேர்ந்து எதுவுமே சாப்பிடலையாமே மேகா... மொதல்ல அந்த போர்ன்விட்டாவை சாப்பிடு!"

"வேண்டாம்ப்பா!"

"சொன்னாக் கேளு!"

அவள் அதற்குமேல் மறுக்காமல் கட, கடவென்று அதைக் குடித்தாள்.

"சொல்லுங்கப்பா... யாரு அந்த சங்கர்? அவனுக்கும், அம்மாவுக்கும் எப்ப கல்யாணம் ஆச்சு?"

சொல்ல ஆரம்பித்தான் நந்தா...

"நான் ராணுவத்துல இருந்தவன்னு சொல்லியிருக்கேன் இல்ல? 17 வருஷத்துக்கு முன்னால, இந்திய எல்லைலதான் எனக்கு டூட்டி!"

★ ★ ★



# 5

இந்தியா, பாகிஸ்தான் என்று எந்தப் பாகுபாடுமின்றி, இரு நாடுகளுக்கும் பொதுவான வானம் மெலிதாக இருள் பூசிக்கொள்ள ஆரம்பித்திருந்தது.

கரடு, முரடான பூமியில் பயணம் செய்தது அந்த ஆர்மி வேன். உள்ளே, நாங்கள் சோழிகளைப் போல குலுக்கப்பட்டுக்கொண்டிருந்தோம். இரு நாடுகளையும் பிரிக்கும் எல்லையை நெருங்கியதும், வேன் அங்கங்கே நின்றது.

எல்லையில், முந்தின நாளிலிருந்து காவல் பணியில் இருந்தவர்கள் வேனுக்குள் ஏறிக்கொள்ள, இரவுப் பணிக்காக நியமிக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவராக இறங்கிக்கொண்டோம்.

நான் இறங்க வேண்டிய இடம் வந்தது. பகல் முழுவதும் காவலுக்கு இருந்த பஞ்சாபிய ராணுவ வீரன், விறைப்பாக நின்று எனக்கு ஒரு சல்யூட் வைத்து, வேனில் ஏறினான். வேன் புறப்பட்டுச் சென்றது.

நீண்ட இரவை எதிர்கொள்ளத் தயாரானேன். ஆரம்பத்தில் தனிமையும், தூக்கமின்மையும் வெறுப்பேற்றின. பேச்சுத் துணைக்குக் கூட ஆளில்லாமல் வெறுமையாக இருப்பது எரிச்சலாக இருந்தது. ஆனால், பழகப் பழக எனக்கு அந்தத் தனிமை மிகப் பிடித்திருந்தது.

எந்த நேரமும், எங்கிருந்து வேண்டுமானாலும் எதிரி தாக்கக்கூடும். அந்த சவாலை எதிர்கொள்ள எப்போதுமே புலன்களைக் கூர்மையாக வைத்திருக்க வேண்டியிருந்தது; அதை மிகவும் ரசித்தேன்.

திடீரென்று வேன் நின்றது. கதவைப் பாதி திறந்து, டிரைவர் அங்கிருந்து எட்டிப்பார்த்து, 'நந்தா... இங்கே வா...' என்று இரைச்சலாகக் கூப்பிட்டான்.

தப, தபவென்று ரைபிளுடன் ஓடினேன்.

வாக்கி டாக்கியை என்னிடம் கொடுத்தான்.

மறுமுனையில் இருந்த கர்னல் ஜான் செம்பருத்தியின் குரல் அந்த கரகரப்பான ஸ்பீக்கர் வழியே கசிந்தது...

"நந்தா... நீ ட்யூட்டி பார்க்க ஆரம்பிக்கும் முன் ஒருவனைச் சந்திக்க வேண்டும். உடனே புறப்பட்டு வா !"

ஏன், எதற்கு என்றெல்லாம் ராணுவத்தில் கேட்க முடியாது. பஞ்சாபி சபித்துக்கொண்டே மறுபடி இறங்கிக்கொள்ள, நான் வேனில் ஏறினேன்.

கர்னல் ஜான் செம்பருத்தியின் அறையில் மின் விளக்கு சுரீர் என்று எரிந்தது. 'வா !' என்றார் ஒற்றைச் சொல்லாக, அங்கே இருந்த நாற்காலியில் ஏற்கனவே உட்கார்ந்திருந்தவன் நிமிர்ந்து பார்த்தான்.

'நந்தா... இவன் பெயர் சங்கர். இவனும் தமிழ்நாட்டிலிருந்து வருகிறான் !'

'வணக்கம்...' என்றேன்.

'வணக்கம்...' என்றான்.

என்னைவிட உயரமாக இருந்தான். உறுதியான தோள்களும், நிமிர்ந்த நெஞ்சும் கொண்டிருந்தான். சிலரைப் பார்த்த முதல் பார்வையிலேயே பிடித்துப்போகும். சங்கர் அந்த ரகம். அவன் கண்களில் நட்பு இருந்தது; புன்னகையில் உண்மை இருந்தது.



'சங்கர், காஷ்மீர் எல்லைகளில் பணியாற்றிக் கொண்டிருந்தான். சென்ற வாரம் கடும் காய்ச்சலில் விழுந்துவிட்டான். சில காலத்திற்கு அவனுக்கு அவ்வளவு குளிரான பிரதேசம் வேண்டாம் என்று முடிவெடுக்கப் பட்டது. இந்த யூனிட்டிற்கு புதிதாக மாற்றலாகி வந்திருக்கிறான்.

'இங்கே, தமிழர்கள் யாராவது இருக்கின்றனரா என்று ஏக்கத்துடன் கேட்டான். அதற்காகத்தான் உன்னை வரவழைத்தேன். இவன் முற்றிலும் குணமாகும்வரை, உன்னுடன் சேர்ந்து பணியாற்றப்போகிறான் !' என்றார் கர்னல்.

'வெல்கம் !' என்றேன்.

புன்னகைத்தார் கர்னல்...

'இரவுகளில் உனக்காக குறிப்பிடப்பட்டிருக்கும் பகுதியில் இருவரும் சேர்ந்து காவல் இருங்கள். புதிய பிரதேசத்தையும், புதிய எல்லையையும், நுணுக்கங்களையும் சங்கருக்குக் கற்றுக்கொடு. அப்புறம் அவன் தனியே செயல்பட ஆரம்பிப்பான் !'

அப்படித்தான் எனக்கு அறிமுகமானான் சங்கர்.

'நந்தா ! தமிழில் பேசப் போகிறேன் என்ற நினைப்பே எனக்குள் புது ரத்தம் பாய்ச்சியிருக்கிறது !' என்று சொன்னான் சங்கர்.

எல்லையில் இறங்கிக்கொண்டோம்.

'இங்கே, இருட்டில் ரீங்காரமிடும் பூச்சிகளிடமும், அவ்வப்போது கண் சிமிட்டிக்காட்டும் மின்மினிப் பூச்சிகளிடமும் மட்டுமே பேசிக்கொண்டிருப்பேன்.

இப்போது, ஒரு நண்பனுடன், அதுவும் என் தாய் மொழியில் பேசும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது!' என்று சங்கரின் தோளை அணைத்துக்கொண்டேன்.

'இரவில் இங்கு கொசுக்கள் அதிகம். இந்தா, இதை உன் சருமத்தில் பூசிக்கொள்; கொசுக்கள் வராது!' என்று அந்த ட்யூபை அவனிடம் தூக்கிப் போட்டேன், நன்றி சொன்னான்.

'உன்னுடைய பின்னணி பற்றிச் சொல் சங்கர்!'

'என் வயது 23. என் அப்பாவும் ராணுவத்தில் இருந்தவர். எல்லைப் போரில் உயிரைத் தியாகம் செய்தவர். அதற்குப் பிறகு முழுக்க முழுக்க பொறுப்பெடுத்து என்னை வளர்த்தது என் அம்மா. கணவனை நாட்டுப் பணிக்காக அர்ப்பணித்து இழந்திருந்தாள். இருந்தாலும், அடுத்து என்னையும் சந்தோஷமாக ராணுவப் பணிக்கு அனுப்பி வைத்தாள்... மற்றபடி உடன் பிறந்தவர்கள் யாரும் எனக்கு இல்லை. உனக்கு?'

'எனக்கு அப்பா, அம்மாவின் முகங்களே நினைவில் இல்லை! என் நான்காவது வயதிலேயே அவர்களை இழந்துவிட்டேன். அதற்குப் பின் மாமா வீடு, சித்தப்பா வீடு என்று அங்கங்கே பந்தாடப்பட்டேன். ஒருவழியாக படிப்பை முடித்தேன்.

'இப்போது எனக்கு சொந்தம் என்று சொல்லிக் கொள்ள இருப்பது ஒன்றுவிட்ட அண்ணன் ஒருவன்தான். அவன் குவைத்தில் எண்ணெய்க் கிணறுகளில் வேலை செய்யப் போய்விட்டான். மற்றபடி, நான் இப்போது ஒரு நவீன அனாதை!'

'யாரும் அனாதையில்லை. இன்றிலிருந்து நான் உனக்கு உறவு...' என்று என்னை அணைத்துக் கொண்டான் சங்கர்.



கல்லூரித் தோழர்களைப்போல் இரண்டே நாட்களில், நாங்கள் நெருக்கமானோம். ஒரே சிகரட்டைப் புகைத்தோம்; ஒரே ரொட்டியைக் கடித்தோம்; ஒரே பாடலைப் பாடினோம்.

'நந்தா... 15 நாட்கள் நான் லீவில் போகிறேன். என்னுடைய திருமணத்திற்காக, நீயும் லீவு போட்டுவிட்டு என்னுடன் வா!'

சிறு வயதிலிருந்தே பெயர் சொல்லிக்கொள்ளும் அளவிற்கு எனக்கு நெருங்கிய நண்பர்கள் யாரும் கிடையாது. திருமணங்களுக்குச் செல்லும்போது பெரியவர்களுடன் ஒரு இரண்டாம்பட்ச குடிமகனாகத்தான் அழைத்துச் செல்லப்பட்டிருந்தேன். அதனால், சங்கரின் திருமணத்தில் மாப்பிள்ளைத் தோழன் என்கிற ஒரு பெரிய பதவியே கிடைக்கும்போது விட்டுக்கொடுக்க எனக்கு மனமில்லை.

ஆனால் மறுத்தார் கர்னல்...

'வெரி ஸாரி... எல்லையில் அங்கங்கே சிறு, சிறு பிரச்னைகள் வெடித்துக்கொண்டிருக்கின்றன. பல தீவிர வாதிகள் இந்தியாவிற்குள் ஊடுருவிக்கொண்டிருப்பதாக நமக்கு நிறைய புகார்கள் வந்துள்ளன. எல்லைப் பகுதியில் ரோந்துப் பணியை தீவிரமாக்கிக்கொண்டிருக்கிறோம். இரண்டு பேருக்கு ஒரே சமயத்தில் லீவு கொடுப்பது இயலாது!'

'பரவாயில்லை! உன் புகைப்படத்தை என் அருகில் வைத்திருப்பேன்... மாப்பிள்ளைத் தோழனாக எல்லாருக்கும் அறிமுகம் செய்யப்போகிறேன்!' என்று சொன்னான் சங்கர்.

நானும், அவனும் இணைந்து சில புகைப்படங்கள் எடுத்துக்கொண்டோம்.

குறிப்பிட்ட நாளில் தன் திருமணத்திற்குப் புறப்பட்டுப் போனான் சங்கர். என் உடலிலிருந்து ஒரு அங்கத்தையே வெட்டி எடுத்து போய்விட்டது போல நான் வருத்தப்பட்டேன். தனிமை அதற்கு முன் என்னை இந்த அளவுக்கு வாட்டியதில்லை.

எங்கள் முகாமிலிருந்து ஐந்து கி. மீ., நடந்து சென்றால்தான் பொதுத் தொலைபேசியில் பேச முடியும். பொதுத் தொலைபேசியிலிருந்து திருமண மண்டபத்திற்கு போன் செய்தேன்.

சங்கரை அழைத்து, வாழ்த்து தெரிவித்தபோது மிகவும் மகிழ்ந்தான்...

'இரு... என் அம்மாவிடம் பேசு!' என்று போனை அவன் அம்மாவிடம் கொடுத்தான்.

'தம்பி... சங்கர், உன்னைப்பற்றி நிறைய சொன்னான். நீ இவனுடைய கல்யாணத்துக்கு வரவில்லை என்று வருத்தப்படாதே. நண்பனின் கல்யாணத்தைவிட நாட்டின் பாதுகாப்புதான் முக்கியம்!'

எங்கிருந்தோ பேசிய அந்தத் தாய்க்கு இந்தியாவின் மீதிருந்த அபரிமிதமான பாசம் என்னை நெகிழ்த்தியது.

'உன்னைப்போன்ற இளைஞர்களைப்பற்றிக் கேள்விப் பட்டாலே, எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது. உன் போட்டோவைக் கொண்டு வந்திருப்பதாக சங்கர் காட்டினான். ஆனால், பாவி... எனக்கு இரண்டு கண்ணும் தெரியாது. நீ நேரில் வந்திருந்தால், உன்னை தொட்டுப் பார்த்தாவது தெரிந்துகொண்டிருப்பேன்... உன் போட்டோவைத் தடவிப் பார்த்து என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை!'

திருமணத்திற்குப் போக முடியவில்லையே என்று அந்தக் கணம் மிக வருந்தினேன்.



'உனக்கு அம்மா, அப்பா இரண்டுபேரும் இல்லை என்று சங்கர் சொன்னான். அந்த மாதிரி நினைக்காதே. நான் உனக்கு அம்மா மாதிரி... லீவு கிடைக்கும்போது நம் வீட்டுக்கு வா; நீயும் எனக்கு ஒரு பிள்ளைதான்!'

மறுமுனையில் சங்கரின் அம்மா பேசப் பேச, ஆயிரம் மைல்களுக்கு மேல் தள்ளியிருந்த என் கண்களில் தானாகக் கண்ணீர் வழிந்தது.

'பக்கத்தில் இருந்தால், உங்கள் கால்களைத் தொட்டிருப்பேன் அம்மா!' என்றேன் நெகிழ்ச்சியுடன்.

'என் மனைவியிடமும் பேசு...' என்று சங்கர், போனை அவன் புது மனைவியிடமும் கொடுத்தான்.

சற்று நேரத்திற்கு அவளிடமிருந்து பேச்சே இல்லை. 'பேசு... பேசு...' என்று மறுபக்கம் அவளை, சங்கர் தூண்டிக் கொண்டிருப்பது மட்டும்தான் கேட்டது.

அவள் குரல் மிகத் தயங்கி வந்தது...

'வணக்கம். உங்களைப்பற்றி அவர் நிறைய சொன்னார். எல்லைப் பக்கம் அவர் இருக்கும்போது பத்திரமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்... அப்புறம், ஒருநாள் வீட்டுக்கு வாருங்கள்!' இவ்வளவுதான் அவள் பேசினாள்.

'சங்கர்! ராணுவ அதிகாரிகள் பயந்ததுபோல இங்கே ஒன்றும் பெரிய பிரச்னைகள் இல்லை. நீ எங்காவது ஹனிமூனுக்கு ஜாலியாகப் போய்விட்டு வா!'

'தேங்க்ஸ்டா நந்தா...' என்றான் சங்கர்.

'நானும், அனுசூயாவும் டார்ஜிலிங்குக்கு போகப் போறோம்!' என்று சொன்னான்.

ஆனால், சங்கருக்கு நீண்ட நாட்கள் அந்த சந்தோஷத்தைக் கொடுப்பதற்கு பாகிஸ்தான் தயாராக இல்லை.

எல்லையில் இரண்டு இடங்களில் மோசமான தாக்குதல்கள் நிகழ்ந்தன. இந்திய ராணுவக் கிடங்கு ஒன்று பற்றி எரிந்தது.

லீவில் சென்றிருந்த அத்தனைபேரும் உடனடியாக ராணுவ முகாமிற்குத் திரும்பவேண்டும் என்று உத்தரவுகள் பறந்தன. சங்கருடைய தேனிலவு பாதியில் துண்டிக்கப் பட்டு, அவன் திரும்ப வந்து சேர்ந்தான். அங்கேதான் பிரச்னையே ஆரம்பமானது.

★ ★ ★



# 6

எங்கள் இருவரையும் தன் அலுவலகத்துக்குக் கூப்பிட்டு அனுப்பியிருந்தார் கர்னல் ஜான் செம்பருத்தி.

'எல்லையில், வேலிக்கு இந்தப் பக்கமே காவலிருந்த உங்களுக்கு வேலிக்கு அந்தப் பக்கம் போக வாய்ப்பு வந்துள்ளது. நீங்கள் ஈடுபடப்போகும் வேலை மிக ரகசிய மானது. சிறிது காலத்திற்கு நீங்கள் பாகிஸ்தானியர்களாக இருக்கப்போகிறீர்கள் !' என்று பீடிகையுடன் ஆரம்பித்தார்.

'இன்னும் தெளிவாகச் சொல்ல முடியுமா கர்னல் ?' என்றேன்.

'டில்லியில், கேப்டன் ராம்குமார் சந்தித்து, விளக்கங்கள் கொடுப்பார். ஆனால், ஒரு சின்ன உத்தரவு. இந்த நிமிடத்திலிருந்து நீங்கள் இருவரும் எங்கிருக்கிறீர்கள், எங்கு போகிறீர்கள், எங்கு வருகிறீர்கள் என்ற விவரங்கள் எதையும் உங்கள் நண்பர்களிடமோ, உறவினர்களிடமோ பகிர்ந்துகொள்ளக்கூடாது !'

எனக்குப் பிரச்னையில்லை... ஆனால், சங்கர்தான் பாவம்... புதிதாகத் திருமணமானவன். அவனுக்குமா இந்த நிபந்தனை ?'

'ஆம் ! ரயில் நிலையத்திற்கு உங்களை அழைத்துப் போக ஜீப் காத்திருக்கிறது. தில்லிக்குச் செல்லும் ரயிலில் உங்களுக்கான இருக்கைகள் பதிவு செய்யப்பட்டுவிட்டன !'

புதுடில்லி -

ஜனவரி மாதத்தின் குளிர் டில்லியை புரட்டிக்கொண்டிருந்தது. எங்கள் ரயில் சென்று சேர்ந்த நேரத்தில், விடிந்து வெகு நேரமாகியும், நான்கடி தள்ளி என்ன இருக்கிறது என்பதே தெரியாத அளவுக்கு பனி அடர்ந்திருந்தது.

எங்களை ரயில் நிலையத்தில் பிக்கப் செய்த அம்பாசிடர், மீரட் செல்லும் சாலையில் அமைதியான ஒரு கட்டடத்திற்கு முன் சென்று நின்றது. எங்களுடைய அடையாளங்கள் சரி பார்க்கப்பட்டு, உள்ளே அனுமதிக்கப் பட்டோம்.

கேப்டன் ராம்குமார், தமிழர்; வயது 30; உறுதியான உடம்பு; பளீரென்ற பற்கள்; தெளிவான, கூர்மையான கண்கள்.

'வாருங்கள்...' என்றார்.

நேரடியாக விஷயத்திற்கு வந்தார்...

'பாகிஸ்தானில் தீவிரவாதிகளுக்கான முகாம்கள் இயங்குகின்றன. இந்திய தேசத்தில் வறுமை காரணமாக மனம் நொந்துபோன பல இளைஞர்கள், இந்த முகாம்களுக்கு எப்படியோ எல்லையைக் கடந்து அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

துப்பாக்கி சுடுவது, அதிவேகத்தில் வாகனங்களைச் செலுத்துவது, தண்ணீரில் மூழ்கி வெகுநேரம் நீச்சலடிப்பது என்று பல கடுமையான பயிற்சிகள் அவர்களுக்குத் தரப்படுகின்றன. வெடிகுண்டுகளை தயாரிப்பதிலும், அவற்றை உரிய இடங்களில் ரகசியமாகப் பொருத்துவதிலும் அவர்கள் திறமைசாலிகளாக ஆக்கப்படுகின்றனர்!'

அவர் தந்த விவரங்கள் அதிர்ச்சி தந்தன.



பெரும்பாலான தீவிரவாதிகளின் மனத்திற்குள் தூங்கிக் கொண்டிருக்கும் சாத்தான்களும், மிருகங்களும் விழித்து எழுப்பப்படுகின்றன. சொந்த சகோதரனா, இல்லையா என்றுகூட பார்க்காமல் சுடும் அளவுக்கு இதயம் மரத்துப்போகிறது. பயிற்சி முடிந்ததும், இந்திய எல்லைக்குள் அவர்கள் செலுத்தப்படுகின்றனர்.

'இந்திய ராணுவத்தினரிடமோ, வேறு அதிகாரிகளிடமோ சிக்கினால், 20 நொடிகளுக்குள் உயிரைப் பறிக்க வல்ல சயனைட் விஷத்தை அவர்கள் அருந்திவிடுவராம். அதற்காக அந்த மருந்தைக் கழுத்திலேயே கட்டியிருப்பராம். அந்த அளவுக்கு இளைஞர்களுக்கு மூளைச் சலவை செய்யப்படுகிறது' என்றார்.

'இந்திய ராணுவத்தைச் சேர்ந்த சிலரே சொந்த தேசத்திற்கு துரோகம் செய்து, இந்தத் தீவிரவாத முகாம்களுக்குப் பல தகவல்களைக் கசிய விட்டுக்கொண்டிருக்கின்றனர் என்று நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன. எனவே, சிங்கத்தின் குகைக்குள்ளேயே நுழைய ஒரு இந்தியக் குழு விரைவில் புறப்படவிருக்கிறது.

'தகவல்களை ஒருபுறம் சேகரித்தபடி, அந்த தீவிரவாத முகாம்களை அவர்கள் எதிர்பாராத நேரத்தில் தாக்கி அழித்துத் தரையோடு, தரையாக புதைப்பது அந்தக் குழுவின் நோக்கம். என் தலைமையில் புறப்படும் அந்தக் குழுவில் இடம்பெற நீங்கள் இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்களுக்கு சம்மதமா?'

நானும், சங்கரும் நெஞ்சை நிமிர்த்தி நின்றோம்...

'எங்களுக்கு வெகு சம்மதம்!'

'அப்படியானால், இந்த நிமிடத்திலிருந்து நீங்கள் இருவரும் ஷேவ் செய்ய வேண்டாம்; தலை முடியையும் வெட்டிக்கொள்ள வேண்டாம்!'

3 - க. கா. பு. வெ. எண். 851

அடுத்த சில நாட்களுக்குத் தொடர்ந்து எங்களுக்குப் பல பயிற்சிகள் அளிக்கப்பட்டன. உருது மொழி பேசுவதில் ஓரளவு தேர்ந்தோம்.

புறப்படும் நாள் வந்தது.

'தப்பித் தவறி நம்மில் யாராவது எதிரிகளின் கைகளில் பிடிபட்டால்கூட, எக்காரணம் கொண்டும் நம் சொந்த சகோதரர்களை காட்டிக்கொடுக்கக்கூடாது என்ற வைராக்கியத்துடன் செயல்பட வேண்டும்!' என்று உறுதிமொழி கேட்டார் கேப்டன் ராம்குமார்.

நானும், சங்கரும் எந்தச் சூழ்நிலையிலும், தேசத் துரோகம் செய்ய மாட்டோம் என்று சத்தியம் செய்தோம்.

இந்தியப் பகுதியிலிருந்து பாகிஸ்தானிற்குள் ரகசியமாகச் செல்வதற்கென்று பல வழிகள் இருக்கின்றன என்பதை அப்போதுதான் அறிந்தேன். எல்லைக்கு மறுபுறம் எங்களை வரவேற்று அழைத்துச் செல்ல ஒரு பாக்., வாகனம் இருட்டில் காத்திருந்தது.

டிரைவர் இருக்கையில் அமர்ந்திருந்த மனிதர் நீண்ட தாடியும், கருணை வழியும் கண்களும் கொண்டிருந்தார்.

'இவர் பெயர் சையது. இந்தியர்களின் நண்பர். நகரத்தில் ஒரு மெத்தைக் கடை வைத்திருக்கிறார். இவர் வீட்டில்தான் நீங்கள் இருவரும் தங்கப் போகிறீர்கள்...' என்றவர், அவரிடம், 'சையது பாய், இது அன்வர்; அது வாசிம்!' என்று எங்களை அறிமுகம் செய்தார் கேப்டன் ராம்குமார்.

நான் - அன்வர்; சங்கர் - வாசிம்.

வேறொரு நண்பர் வீட்டுக்குச் சென்றுவிட்டார் ராம்குமார்.



சையது பாஷாவின் வீட்டில், ஒரு அன்பு தேவதையை சந்தித்தோம்.

'இவள் என் மகள் சாபிரா. உங்கள் தேவைகளை கவனித்துக்கொள்வாள்!'

சாபிராவுக்கு வயது 12. மண்ணிற்கு இறங்கிவந்த தேவதைபோல் தெரிந்தாள். ஆனால், இரக்கமற்ற படைப்பில், அவளுடைய இரண்டு விழிகளும் பழுதாகியிருந்தன. சூரிய வெளிச்சத்தில்கூட எதிரில் இருப்பவர்கள் மங்கலாகத்தான் தெரிவராம். மாலையானதும், அவளுக்குப் பார்வை மொத்தமாகப் பறிபோய்விடும் என்று அறிந்து வருந்தினோம்.

தன் பார்வையை நம்பாமல், தன் மற்ற புலன்களை கூர்மையாக வைத்திருந்தே, பெரும்பாலான வீட்டுக் காரியங்களை அவள் நடத்திக்கொண்டிருந்தாள். 'அன்வர் அண்ணா, வாசிம் அண்ணா' என்று எங்களை அழைத்து வெகு சீக்கிரமே ஒரு புதிய பாசத்தை எங்களுடன் ஏற்படுத்திக்கொண்டாள்.

சையத் பாஷாவின் மெத்தைக் கடையில், சங்கர் மெத்தைகள் தைக்கவும், பஞ்சை அடைக்கவும் நியமிக்கப்பட்டவனாக அடையாளம் கொண்டிருந்தான். அங்கே தயாராகும் மெத்தைகளை உரிய இடங்களுக்கு எடுத்து சென்று டெலிவரி செய்யும் வேன் டிரைவராக நான் உருமாறியிருந்தேன்.

மெத்தைகளுக்குள் பல ரகசிய விவரங்கள், முக்கியத் தகவல்கள் ரகசியமாகப் பதுக்கப்பட்டிருப்பது எங்களுக்கு மட்டும்தான் தெரியும். அவ்வப்போது எங்கள் குழுவினர் ஏதாவது ஒரு பொது இடத்தில் தற்செயலாக சந்திப்பது போல் சந்திப்போம். எங்களுடைய திட்டங்களின் அடுத்தடுத்த கட்டங்களை இயல்பாகப் பேசுவதுபோல் விவாதிப்போம்.

நாங்கள் காத்திருந்த தினம் வந்தது. ஒரு
வரைபடத்தை விரித்தார் கேப்டன் ராம்குமார்...

'நந்தா ! தீவிரவாத முகாம்களில் இருப்பவர்களுக்கு
மெத்தைகள் சப்ளை செய்யும் ஒரு ஆர்டரை சையத் பாஷா
எப்படியோ பிடித்துத் தந்திருக்கிறார். மெத்தைகளை
ஏற்றிச்செல்லும் வேனை நீ தான் ஓட்டப்போகிறாய்.
மெத்தைகளுக்குள் பயங்கரமான பல வெடிகுண்டுகள்
பொருத்தப்பட்டிருக்கும்...

'அவற்றை இயக்கும் விசைகள் தனியே நம்
ஆறுபேரிடமும் ரிமோட்களில் இருக்கும். எந்த, எந்த
முகாம்களில் எந்தெந்த மெத்தைகள் இறக்கப்பட வேண்டும்
என்ற முழு விவரமும் இப்போது பேசப்போகிறோம் !'

அடுத்தடுத்த நாட்களில், எனக்கும், சங்கருக்கும்
இரவுகளில் தூக்கம் வரவில்லை. நம் தேசத்திற்காக
யாருக்கும் தெரியாத வெகு முக்கியமான ஒரு வேலையில்
ஈடுபடப்போகிறோம் என்ற எண்ணமே எங்கள் ரத்தத்தில்
பரபரப்பை ஏற்றியிருந்தது.

தனிமை கிடைத்த ஓர் இரவு -

என்னிடம் மனம் விட்டுப் பேசினான் சங்கர்...

'நந்தா... துப்பாக்கி பிடித்து, ராணுவ வீரனாக
நேரடியாக போரில் ஈடுபட்டால், எதிர் வரும் ஆபத்துக்கள்
என்னென்ன என்று தெளிவாகத் தெரியும். ஆனால்,
இப்படிப்பட்ட ரகசியமான வேலைகளில் ஈடுபடும்போது
நம்மை யார், எங்கிருந்து தாக்குவர் என்று சொல்ல முடியாது !'

'பயப்படுகிறாயா சங்கர் ?'

'இல்லை நந்தா ! குற்றமுள்ளவனாக உணர்கிறேன்.
நாம் எங்கே போயிருக்கிறோம், என்ன செய்துகொண்டிருக்
கிறோம் என்று எந்தத் தகவலும் என் குடும்பத்தாருக்கு



நான் சொல்லவில்லை. ஏதாவது விபரீதமாக நிகழ்ந்து,
இந்தியாவிற்குத் திரும்ப முடியாமல் போனால் ? ஒருமுறை
என் மனைவியிடம் பேசவேண்டும் என்று எனக்கு
ஏக்கமாக இருக்கிறதடா !' என்றான்.

கேப்டன் ராம்குமாரின் எச்சரிக்கைகளை மீறி, ஒரு
தானியங்கி பொதுத் தொலைபேசி நிலையத்திலிருந்து தன்
வீட்டிற்கு போன் செய்தான் சங்கர். இரண்டே
நிமிடங்களில் பேச்சை முடித்துக்கொண்டான். போனை
வைத்துவிட்டு வந்தபோது அவனுடைய முகம்
சந்தோஷத்தில் பூரித்திருந்தது.

'நந்தா... சந்தோஷமான சேதிடா... என் மனைவி
கர்ப்பமாய் இருக்கிறாளாம் !'

மகிழ்ச்சியில், அவனை அப்படியே தூக்கி சுழற்றி
இறக்கினேன்.

'அம்மாவுடன் பேசினேன் நந்தா ! பஞ்சாப் எல்லையில்
இருப்பதாகப் பொய் சொன்னேன். 'வேலைப்பளு
குறையும்போது லீவு வாங்கிக்கொண்டு என்னைப் பார்க்க
வருவீர்களா ?' என்று அனு ஏக்கத்துடன் கேட்டாளடா !'

சங்கரின் பதட்டம் விலகி, அவனிடம் ஓர் அமைதி
வந்துவிட்டதை கவனித்தேன். காத்திருக்கும் ஆபத்தை
உணராமல், வீட்டிற்குத் திரும்பினோம்.

வழக்கமாக கதவை விரல் முட்டியால் இரண்டுமுறை
தட்டினால் வந்திருப்பது நாங்கள்தான் என்று உள்ளே
சாபிராவுக்குப் புரியும், அதேபோல விரல் முட்டியால்
இருமுறை தட்டினேன்.

கதவு திறந்தது; ஆனால், திறந்தவள் சாபிரா இல்லை;
நெடு, நெடு உயரத்துடன் நின்றிருந்த பாக்., ராணுவ வீரன்.
கதவைத் திறந்த வேகத்திலேயே எங்கள் சட்டையைக்
கொத்தாகப் பற்றி உள்ளே இழுத்துப் போட்டான்.

★ ★ ★

# 7

அரையிருளாக இருந்த அறை சுவிட்சைத் தட்டியதும் வெளிச்சமாக மாறியது. ஒரு பக்கம் நாற்காலியுடன் கட்டிப்போடப்பட்டிருந்தாள் சாபிரா.

எங்கள் இருவருடைய பாக்கெட்களும் பரிசோதிக்கப் பட்டன. எங்கள் உடல்களில் அவர்களுடைய கைகள் ஓடின. ஒளித்து வைத்திருந்த ரிவால்வரும், கத்தியும் பறிக்கப்பட்டன.

'நான் கதவைத் தட்டியபோது, நீங்கள்தான் வந்திருக்கிறீர்கள் என்று நினைத்து இந்த குருட்டுப் பெண் எனக்குத் திறந்து விட்டாள்...' என்றான் நெடு, நெடுவென்றிருந்தவன்.

'யார் நீ?' என்றேன் அதிர்ந்து.

'இந்திய நாயே... அது நான் கேட்க வேண்டிய கேள்வி!' அவனுடைய வலுவான புறங்கை என் கன்னத்தில் அறைந்தது.

'அண்ணா... எனக்கு பயமாயிருக்கிறது!' என்று தவிப்புடன் அழுதாள் சாபிரா...

'இந்தியாவிற்கு போன் போட்டுப் பேசியது உங்களில் யார்?'



'நீங்கள் எங்கோ தவறு செய்கிறீர்கள். அனாவசியமாக எங்களைப் பிடித்துவைத்து கேள்விகள் கேட்கிறீர்கள்...' என்று தைரியமாகச் சொன்னான் சங்கர்.

உயரமாயிருந்தவன் சாபிராவின் இரு காதுகளையும் பற்றித் திருக ஆரம்பித்தான். வலியில் அவள் கதறினாள்.

'இன்னும் மூன்று எண்ணுவதற்குள் உண்மைகளைக் கக்க வேண்டும். என்ன ரகசியமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறீர்கள்? உங்களை அனுப்பியது யார்? இங்கே நீங்கள் செய்து முடித்திருக்கும் காரியங்கள் என்னென்ன? செய்யத் திட்டமிட்டிருக்கும் விஷயங்கள் என்னென்ன?'

சாபிராவை விடு. அவள் ஒன்றும் அறியாதவள்...' என்று அலறினேன்.

'உன் பாசாங்குகளை நிறுத்து. உன் பெயர் அன்வர் இல்லை; உண்மையான பெயரைச் சொல்...'

'இதோ பார்... அந்தப் பெண்ணை முதலில் வெளியே அனுப்பு. அப்புறம் பேசலாம்...' என்றான் சங்கர்.

துப்பாக்கிகளைப் பிடித்திருந்தவர்களிடம் சாபிராவை பக்கத்து அறைக்கு இழுத்துப்போகச் சொன்னான் உயரமாய் இருந்தவன்.

'இப்பொழுது சொல்... உன் பெயர் என்ன?'

திடீரென்று அவன்மீது பாய்ந்தான் சங்கர். கையில் துப்பாக்கி பிடித்திருந்தபோதும், சங்கரின் பாய்ச்சலை சற்றும் எதிர்பாராத அவன் அப்படியே பின்புறம் விழுந்தான்.

தன் முஷ்டியை அவன் கன்னத்தில் சங்கர் பாய்ச்சியபோது, பூட்ஸ் கால்கள் ஓடிவந்தன. சங்கரை அள்ளிப் பிடித்தன. அடிபட்டவன் எழுந்து சிரித்தான்...

இவன் சீறும் பூனையாக இருக்கிறான். அடுத்தவனைப் பிடியுங்கள்!' என்று என்னை நோக்கி கை காட்டினான்.

மூன்றுபேராக என்னை அழுத்திப் பிடித்தனர்.

'உனக்கெதற்கு 10 விரல்கள்? உண்மைகளைச் சொல்லாவிட்டால் ஓரிரண்டு விரலை பலிகொடுக்க வேண்டும்!'

என்னை பாத்ரூமுக்கு இழுத்து சென்று, வெள்ளை பளிங்குக் கல்லில் என் கையை ஒருவன் பூட்ஸ் காலால் மிதித்து தரையோடு அழுத்திகொள்ள, என் விரலைக் குறடால் பிடித்தான் இன்னொருவன்.

'விரலை மட்டுமல்ல; என் கையை எடுத்தாலும் என்னிடமிருந்து உனக்கு எந்த விவரமும் கிடைக்காது...' என்றேன் உறுதியாக.

என் விரல் மளுக்கென்று முறிக்கப்பட்டு, குபு, குபுவென்று ரத்தம் வெளியேறி, வெள்ளைத் தரையை சிகப்பாக்கியது.

'அடுத்த விரலையாவது காப்பாற்றிக்கொள்; உண்மையைச் சொல்!'

'மாட்டேன்...' என்றேன்.

இரண்டாவது விரலும் மடக்கப்பட்டது; மயங்கிச் சரிந்தேன்.

மீண்டும் கண்களைத் திறந்தபோது என் முகத்தில் தண்ணீர் அடிக்கப்பட்டிருந்தது. மேலே வானமும், சிதறிக் கிடந்த நட்சத்திரங்களும் இரக்கமில்லாமல் என்னைப் பார்த்துக் கண்ணடித்தன.



குலுங்கல்களை வைத்து, திறந்திருந்த ஜீப்பில் நாங்கள் பயணம் செய்கிறோம் என்பதைப் புரிந்து கொண்டேன். என் வலது கையில் இப்போது அழுத்தமாக துணி சுற்றப்பட்டிருந்தது.

ஜீப்பின் இன்னொருபுறம் உட்கார்ந்திருந்தான் சங்கர். இரண்டு கைகளிலும் முகத்தைத் தாங்கியிருந்தான். எங்களைத் தாக்கியவன் தன் மடியில் ஒரு இயந்திரத் துப்பாக்கியை வைத்திருந்தான். சங்கரிடம் அவன் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தான்.

'முதலிலேயே பிகு பண்ணாமல் உண்மைகளைச் சொல்ல நீ ஒப்புக்கொண்டிருந்தால், உன் நண்பன் அனாவசியமாக விரல்களை இழந்திருக்க வேண்டாம்!' என்றான்.

நான் அதிர்ந்தேன்...

'வாசிம்... இவர்கள் சொல்வது என்ன?'

'முட்டாள் இன்னும் எதற்கு இந்தப் பாசாங்கு விளையாட்டு? இவன் பெயர் சங்கர்; உன் பெயர் நந்தா. கேப்டன் ராம்குமார் தலைமையில் தீவிரவாத முகாம்களை அழிப்பதற்காக இந்திய ராணுவத்தால் ரகசியமாக அனுப்பப்பட்டிருக்கிறீர்கள். எல்லா விவரங்களையும் இவன் சொல்லிவிட்டான்!

சங்கரை அதிர்ச்சியுடன் பார்த்தேன்.

'உன்னுடைய விரலை உடைத்தபோதே இவன் மிரண்டுவிட்டான். 'எல்லா உண்மைகளையும் சொல்கிறேன். ஆனால், என்னைக் கொன்று விடாதீர்கள். என்னை உயிரோடு விட்டு விடுங்கள்!' என்று காலில் விழுந்து கதறினான். இவன் கொடுத்த தகவல்களை வைத்து, உங்கள் குழுவினர் அத்தனைபேரையும் மடக்கிவிட்டோம்!' அவன் கெக்கலித்து சிரித்தான்.

'சங்கர் ! நீயா நம் தேசத்திற்கு துரோகம் செய்தாய் ?'

'துரோகம் என்ற வார்த்தையை பயன்படுத்தாதே... உண்மைகளை நான் சொல்லாவிட்டால், மற்ற விரல்களும் உடைந்திருக்கும்; என்னையும் கொன்றுபோட்டிருப்பர். எந்தத் தப்பும் செய்யாத சாபிராவும் அனாவசியமாக சிதைக்கப்பட்டிருப்பாள்.

'ஐந்து இந்தியர்கள் இறந்துபோனால், அதனால், இந்தியாவிற்கு பெரிய பாதிப்பு இல்லை. இன்னும் 500 பேரை அனுப்பும் அளவுக்கு இந்திய ராணுவத்தில் பலம் இருக்கிறது. ஆனால், இந்த ஒரு சங்கர் இறந்துபோனால், அவனுடைய குடும்பத்திற்கு வேறு யார் இருக்கின்றனர் ?'

பாகிஸ்தானைச் சேர்ந்த அந்த ராணுவ ஜீப், இந்தியாவையும் பாகிஸ்தானையும் பிரித்த அந்த எல்லை அருகில் சென்று நின்றது.

ஏற்கனவே கேப்டன் ராம்குமாரும், மற்றவர்களும் அங்கே இழுத்துவரப்பட்டிருந்தனர். எல்லாருடைய கைகளும் பின்புறம் கட்டப்பட்டிருந்தன; என்னுடைய கைகளும் கட்டப்பட்டன.

சங்கருடைய விரல்கள் உதறிக்கொண்டிருந்தன...

'தாங்க்ஸ் கேப்டன். நான் இந்திய எல்லைக்குள் போகலாமா ?' என்று நடுங்கும் குரலில் கேட்டான்.

பெரும் நகைச்சுவையைக் கேட்டுவிட்டதுபோல பெரும் குரலெடுத்துச் சிரித்தான் பாகிஸ்தான் ராணுவ கேப்டன்...

'எங்களை என்ன இந்தியர்கள் போல் முட்டாள்கள் என்று நினைத்தாயா ? உன்னை விட்டு விடுவதாக நாங்கள் சொன்னது பச்சைப் பொய். சங்கர், மற்றவர்களுடன் உனக்கு மரண தண்டனைதான் !'



மிரண்ட சங்கர் தப்பித்து ஓட முயற்சிக்க, துப்பாக்கி ஒலித்தது குப்புறடித்து விழுந்தான் சங்கர்.

'சங்கர் !' என்று அலறினேன். அவனிடம் ஓட முயற்சி செய்தபோது, மடக்கப்பட்டேன். எங்களிடமிருந்து ஓரடி தூரத்தில் இருந்தது இந்தியாவையும், பாகிஸ்தானையும் பிரிக்கும் வேலி. நாங்கள் இந்தியாவை நோக்கி நிறுத்தப்பட்டோம். பாகிஸ்தானியர்கள் எங்கள் முதுகுப் பக்கம் நின்று இயந்திரத் துப்பாக்கியை இயக்கினர்.

'டிஷ்யூம் !' குப்புறடித்து விழுந்தார் கேப்டன் ராம்குமார்.

'டிஷ்யூம் ! டிஷ்யூம் !'

அடுத்தடுத்து எங்கள் குழுவினர் ஒவ்வொருவராக பாகிஸ்தான் மண்ணை முத்தமிட்டு மரணடைந்தனர்.

தோட்டாவின் சப்தம் கேட்டு இந்திய எல்லையில் ரோந்துப் பணியிலிருந்த ராணுவ வீரர்கள் யாராவது எங்கள் உதவிக்கு வரக்கூடும் என்று தவிப்பாய் நினைத்தேன். கடைசித் தோட்டா என் முதுகில் பாயக் காத்திருந்தேன்.

பின்னால் துப்பாக்கியின் 'க்ளிக்' மட்டும் கேட்டது. தைரியமாகத் திரும்பிப் பார்த்தேன். கேப்டன் பிடித்திருந்த துப்பாக்கியில் தோட்டாக்கள் தீர்ந்திருந்தன. அவன் மறுபடியும் தோட்டாக்களை நிரப்பும் பணியில் ஈடுபட்டிருந்தான்.

அதிவேகமாக செயல்பட்டு, சரேலென்று கீழே குனிந்து, மண்ணை அள்ளி அவன் கண்களில் வீசினேன். இரண்டு பாகிஸ்தானிய வீரர்கள் என்னைத் துரத்த ஆரம்பித்தனர். நேர்க் கோட்டில் ஓடாமல் இடதும், வலதுமாக ஓடினேன். அவர்களுடைய துப்பாக்கிகள் வேகமாக இயங்கின. ஆனால், ஒரே எட்டில் வேலியை

அடைந்து, அதைத் தாண்டி இந்திய எல்லைக்குள் குதித்தேன்.

என் அதிர்ஷ்டம் மிகச் சில வினாடிகளில் அங்கே வெளிச்சத்தை பீய்ச்சிக்கொண்டு இந்திய ஜீப் ஒன்று வந்தது. இந்தியப் பகுதியிலிருந்த ராணுவ வீரர்களும் தங்கள் துப்பாக்கிகளை இயக்கத் துவங்கினர். பாகிஸ்தான் ஜீப் மிரண்டு அப்படியே பின்வாங்கியது.

இந்தியர்கள் என்னைச் சூழ்ந்துகொண்டனர். மரணத்தின் விளிம்பிலிருந்து தப்பித்து வந்திருந்த அதிர்ச்சியில் நான் மயங்கி விழுந்து, அப்படியே மயக்கமானேன். கண்விழித்தபோது, இந்திய ராணுவ முகாமின் மருத்துவமனையில் இருந்தேன்.

என் அருகில் நின்றிருந்தார் கர்னல் ஜான் செம்பருத்தி...

'என்ன ஆயிற்று நந்தா?' என்றார்.

கனத்த நெஞ்சுடன் நடந்தவற்றை விளக்கினேன்.

'நம் சங்கரா நாட்டுக்கு இப்படி துரோகம் செய்தான்?' என்று கலங்கினார்.

'அதை துரோகம் என்று சொல்லாதீர்கள் சார்; அவன் மிரண்டுவிட்டான்!' என்றேன்.

'நோ... துரோகம்தான். இந்தியர்களில் மிக முக்கியமான ஐந்துபேரை அனாவசியமாக இழந்திருக்கிறோம். கேப்டன் ராம்குமாரை நம்பி, இன்னும் 12 பேர் பாகிஸ்தான் எல்லைக்குள் அனுப்பப்பட்டிருக்கின்றனர். அவர்கள் எல்லாரும் இப்பொழுது சரியான தலைமை இல்லாமல் சிக்கிக் கொள்ளும் ஆபத்து இருக்கிறது. அத்தனைக்கும் காரணம் சங்கர்; அவனுக்கு மன்னிப்பில்லை!'



சங்கரை அவர் குற்றம் சாட்டியபோது, என் இதயம் துடித்தது.

'உன்னுடைய விரல்களுக்கு என்ன ஆயிற்று?'

சொன்னேன்.

'விரல்களை இழந்தபோதும், நீ காட்டிக்கொடுக்கவில்லை. உன்னை நினைத்தால் எனக்குப் பெருமையாக இருக்கிறது நந்தா. இனி உன்னால் துப்பாக்கியை இயக்க முடியாது. நீ ராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்படுவாய்.

'மாதா மாதம் உனக்கு ஒரு உதவித் தொகை வந்துகொண்டிருக்கும். மற்றபடி, நீ இந்தியாவின் எந்தப் பகுதியிலும் உன் விருப்பப்படி செயலாற்றலாம்...' என்று என் கன்னத்தில் தட்டிக்கொடுத்துச் சொன்னார் கர்னல் ஜான் செம்பருத்தி.

கண்களை மூடினேன். மண்டைக்குள் சங்கரின் குரல் அதிர்ந்து ஒலித்தது.

'ஐந்து இந்தியர்கள் இறந்துபோனால், இன்னும் 500 பேரை அனுப்பும் அளவுக்கு இந்திய ராணுவத்தில் பலம் இருக்கிறது. ஆனால், இந்த ஒரு சங்கர் இறந்து போனால், அவனுடைய குடும்பத்திற்கு வேறு யார் இருக்கின்றனர்?'

அவனை எதிர்பார்த்து பார்வையற்ற அம்மாவும், பாசத்துடன் மனைவியும் காத்திருப்பர் என்ற எண்ணமே என்னை வதைத்தது. உடல் நலம் தேறியதும், சங்கரின் ஊருக்குப் பயணமானேன்.

★ ★ ★

# 8

**த**மிழ்நாட்டில் கால்களைப் பதித்தபோது என் உடல் சிலிர்த்தது. ஆனால், எனக்குள் கிளர்ந்தெழுந்திருக்க வேண்டிய சந்தோஷம் இல்லை; மாறாக, பெரும் துக்கம் மனதை அழுத்திக்கொண்டிருந்தது. எதற்காக சங்கரின் குடும்பத்தைத் தேடிச் செல்கிறேன்? புரியவில்லை. ஆனால், சங்கர் விட்டுப்போன மிகப்பெரிய கடமை ஒன்று என் தோள்களில் சுமத்தப்பட்டிருப்பதாக உணர்ந்தேன்.

சங்கர் தேசத் துரோகியாகிவிட்டதால், அவனுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய பென்ஷன்கூட இல்லாமல் போய்விட்டது. வயதான அவனுடைய அம்மா என்ன செய்வாள்? வயிற்றில் அவன் வாரிசை சுமக்கும் மனைவி என்ன செய்வாள்? எண்ணங்கள் என்னைச் செலுத்தின.

சங்கர் குறிப்பிட்டிருந்த மணல் புத்தூரை என் கால்கள் சென்றடைந்தன. பள்ளிக்கூடத்திற்கு நேர் எதிரே அந்த வெள்ளை வீடு. அதன் உச்சியில் ஒரு குச்சி நட்டு, அதில் தேசியக் கொடி பறந்தது. வீட்டின் கதவைத் தட்டினேன்.

"யாரு?" என்றபடி கதவைத் திறந்து, சங்கரின் அம்மா நின்றார். வயது 60; தளர்ந்திருந்தாள். தலைமுடியில் 60 சதவீதத்திற்கு மேல் நரை; கண்ணோரங்களில் சுருக்கங்கள்.

என்னை ஊடுருவி அவள் பார்த்த பொழுதே, அவளுடைய விழிகளுக்குப் பார்க்கும் சக்தி இல்லை



என்பது புரிந்தது. சாபிராவைப் பார்த்தபோதெல்லாம் சங்கருக்கு அம்மாவின் நினைவு இடறியிருக்கும்.

'வணக்கம்மா... என் பெயர் நந்தா. சங்கர் கூட ராணுவத்தில் வேலை பார்த்தவன்...'

அவள் முகத்தில் விளக்குபோட்டதுபோல் பிரகாசம்...

'உள்ள வா தம்பி...' இரு கைகளையும் நீட்டி, என் கன்னங்களை வருடினாள்...

'சங்கர் உன்னைப்பத்தி நிறைய சொல்லியிருக்கான். கல்யாணத்துக்கு வந்தபோது உன்னையும் அழைச்சிட்டு வரணும்ன்னு நினைச்சானாம். கடைசி நிமிஷத்துல லீவு குடுக்காம கழுத்தறுத்துட்டாங்கன்னு சொன்னான்... என்னப்பா ஆச்சு?' மேற்கொண்டு கேட்க முடியாமல் அவள் குரல் உடைந்தது.

பதில் சொல்ல இயலாமல் திகைத்திருந்தேன். என் கண்கள் அந்த வீட்டின் எல்லா வாசல்களையும் தேடி அலைந்தன. சங்கரின் இளம் மனைவி எங்கே?

அந்த சிறிய வீட்டில், நுழைந்தவுடன் இருந்த அறைச் சுவரில் இரண்டு புகைப்படங்கள் அருகருகே மாட்டப்பட்டிருந்தன. ராணுவ உடையில் இருந்தவர் சங்கரின் அப்பாவாக இருக்க வேண்டும்; பக்கத்திலேயே சங்கரின் படம். இரண்டு படங்களுக்கும் மாலைகள் அணிவிக்கப்பட்டிருந்தன.

'உன்னை தாம்ப்பா கேக்கறேன்... நான் கேட்டதுக்கு யாரும் சரியான பதில் சொல்லலப்பா... சங்கருக்கு எப்படி?'

தன் மகனை துணிந்து ராணுவத்திற்கு அனுப்பிய இந்தத் தாயிடம் சங்கர் செய்த நீசத்தனமான செயலை எப்படி சொல்வது? தயங்கினேன்...

'எதிரிங்ககிட்ட ஆறுபேர் மாட்டிக்கிட்டோம். அதுல அஞ்சுபேரை அவங்க சுட்டுட்டாங்க. எப்படியோ நான் தப்பிச்சுட்டேன். அவங்க என்னை சுட்டிருக்கக் கூடாதா? சங்கர் தப்பிச்சு வந்திருக்கக் கூடாதான்னு தாம்மா ஒவ்வொரு நிமிஷமும் அழுதுட்டிருக்கேன்...' என்றேன்.

'ஏம்ப்பா, அப்படிச் சொல்ற? ஒவ்வொரு உயிருக்கும் தனியா ஒரு மதிப்பிருக்குப்பா. எந்த விதத்துல சங்கர் உன்னைவிட உசத்தி?'

'ஒரே ஒரு விதத்துல தாம்மா... நான் தனிக்கட்டை; உறவுன்னு சொல்லிக்க யாருமில்லை... சங்கர் உயிரோட இருந்தா, இந்த வீட்டுக்கு உபயோகமா இருப்பான்!'

இப்போது உள்ளறையிலிருந்து திடீரென்று விசும்பல் சப்தம் வந்தது.

'அம்மா... உள்ள இருக்கறது...'

'சங்கரோட மனைவி அனு!' என்றவர், அவளை அழைத்தார்.

கலங்கிய கண்களுடன் வந்த அவளை பார்த்ததும் என் நெஞ்சம் வெடித்தது.

'சங்கர் எங்களை விட்டுப் போயிடலப்பா. அவனோட அடையாளமா அவ வயத்துல ஒண்ணு இப்ப வளருது...' என்றார் சங்கரின் அம்மா.

சில மணி நேரங்கள் உணர்ச்சிகளில் கரைந்தோம்.

'நந்தா... இருந்து சாப்பிட்டுப் போப்பா!'

எனக்கு பிடித்த முருங்கைக்காய் சாம்பார், எனக்கு பிடித்த உருளைக்கிழங்கு கறி... சங்கர் எனக்குப் பிடித்ததைப் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறானாம்.



எனக்கு உணவு ஒரு கவளம் கூட உள்ளே இறங்கவில்லை. அன்பும், ஆசையுமாக பரிமாறும் அனுசூயாவைப் பார்க்கப் பார்க்க கண்ணீர் ததும்பி, துக்கம் பொங்கியது. உணவு முடிந்து வாசலில் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திருக்கும்போது மெல்ல கேட்டேன்.

'அம்மா! சங்கர் வேற, நான் வேறன்னு நினைக்காதீங்க. எனக்கு அம்மா கிடையாது, அப்பா கிடையாது, கூடப் பிறந்தவங்க யாரும் கிடையாது, உங்களையே என் அம்மாவா நினைச்சு சொல்றேன்... ராணுவத்திலேர்ந்து ஓய்வு பெற்றுட்டேன். சென்னைல, ஒரு பெட்டிக்கடையோ, வேறு சிறு வியாபாரமோ செஞ்சுதான் மிச்ச நாளைக் கழிக்கப்போறேன்.

'பார்வையில்லாம நீங்களும், வயித்துல குழந்தையோட உங்க மருமகளும் எந்த ஆண் துணையுமில்லாம எதுக்காகக் கஷ்டப்படணும்? நீங்கள் என்கூட வந்துருங்க!'

சங்கரின் அம்மா நெகிழ்ந்தாள்...

'தம்பி உன் கையக் குடுப்பா...' என்று கையை வாங்கி தன் கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

'உனக்குப் பெரிய மனசுப்பா... ஆனா, இந்த மண்ணைவிட்டு நான் எங்கயும் போனதில்லையேப்பா...'

'அம்மா... இந்த ஊர்லயே இருக்கணும்ன்னு நீங்க தீர்மானமா இருந்தா, இதே ஊர்லயே நான் ஒரு பிழைப்பைத் தேடிக்கறேன்!'

அவள் கண்களில் கண்ணீர் பெருகியது.

'முதல்ல நீ சென்னைக்குப் போ; அப்புறம் இதை யோசிப்போம்!' என்றாள்.

கனத்த மனதுடன் விடைபெற்றேன். அனுசூயாவின் கண்களில் படிந்து விட்ட சோகம் என் நெஞ்சை அறுத்தது.

எனக்கு மோட்டார் என்ஜினியரிங்கில் கொஞ்சம் பரிச்சயம் இருந்தது. ராணுவ ஜீப்களையும், லாரிகளையும் கூட நிறைய தடவை பழுது பார்த்திருக்கிறேன். ஒரு சிறு தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்பது என் இள வயது ஆசை. ராணுவத்திலிருந்து ரிடையரானவர்களுக்கு அரசாங்கம் வழங்கிய சலுகைகளும், கடன் வசதிகளும் எனக்குக் கை கொடுத்தன.

கிண்டி தொழிற்பேட்டையில், ஸ்க்ரூக்களை மட்டும் தயாரிக்கும் தொழிலகத்தை ஒரு சிறு யூனிட்டாக துவங்கினேன். ஒவ்வொரு வார இறுதியிலும், சங்கரின் அம்மாவையும், அவன் மனைவி அனுசூயாவையும் சென்று பார்த்துவந்தேன்.

நான்காவது மாதம் மணல் புத்தூருக்குச் சென்ற போது, எனக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அதீத வயிற்று வலியுடன் அங்கிருந்த அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தாள் அனுசூயா.

'வயிற்றில் இருக்கும் சிசு தப்பான கோணத்தில் புரண்டிருக்கிறது. அம்மாவைக் காப்பாற்ற வேண்டு மானால், குழந்தையை பலி கொடுக்க வேண்டும்!' என்று அங்கிருந்த டாக்டர் சொன்னார்.

'என் உயிரை எடுத்துக்கட்டும்... அவரோட அடையாளத்தைப் பார்க்கணும்ன்னு அத்தை துடிச்சிட்டிருக்காங்க... அதை ஒண்ணும் பண்ணிராதீங்க,' என்று அழுதாள் அனுசூயா.

'ரெண்டுபேரையும் காப்பாத்தலாம். ஆனா, இந்த ஊர்ல வசதி போறாது. என் பேச்சைத் தட்டாம, தயவு செஞ்சு சென்னைக்கு வாங்க!' என்று கெஞ்சினேன்.

சங்கரின் அம்மா வற்புறுத்தி, அனுசூயாவை சென்னைக்கு அழைத்து வந்தார்.



சென்னை மருத்துவர்கள் பெரு முயற்சி செய்து, காப்பாற்றினர். நான்கே வாரங்களில் அனுசூயாவின் வலி விலகியது; சிரிப்பு திரும்பியது. அவர்களுக்கு என் வீட்டைக் கொடுத்துவிட்டு, நான் ஒரு லாட்ஜ் அறைக்கு மாறினேன்.

'தம்பி... நீ இல்லைன்னா, நாங்க ஒண்ணுமில்லாம போயிருப்போம்!' என்று சங்கரின் அம்மா என் கைகளைப் பிடித்து அழுதாள்.

என் மனதை அரித்துக்கொண்டிருந்த விஷயத்தைச் சொல்ல, அதை சரியான சந்தர்ப்பமாகப் பயன்படுத்தினேன்...

'அம்மா... உங்க மருமக இந்த வயசுல, தனி மரமா நிக்கறது நல்லாயில்லம்மா... காலம் எவ்வளவோ மாறிடுச்சு. நீங்க சம்மதிச்சா...'

'தம்பி...! என்ன சொல்ற? அவ வயித்துல ஒரு குழந்தை வளருது...'

'தெரியும்மா... சங்கரோட குழந்தை என்னோட குழந்தையாவே இருந்துட்டுப் போகட்டும்...' என்றேன்.

அவள் வெகு நேரம் யோசித்தாள்...

'அனுகிட்ட ஒரு வார்த்தை கேக்கணும் நந்தா!' என்றாள்.

* * *

முதலில் திகைத்த அனுசூயா, அப்புறம் மெல்ல வாய் திறந்தாள்...

'உங்களை மாதிரி ஒரு துணை கிடைக்க கொடுத்து வச்சிருக்கணும் நந்தா... ஆனா, இதுக்கு சம்மதிச்சா... நாட்டுக்காக உயிரைக் குடுத்த சங்கரை நான் அவமதிக்கற மாதிரி ஆயிடும்... வேணாம்!' என்றாள்.

சங்கரைப்பற்றிய உண்மையை நான் சொல்லாமல் விட்டால், கடைசிவரை அவனுடைய நினைவுகளுடனேயே அனுசுயா தனி மரமாக வாழ முனைவாள் என்று உணர்ந்தேன். அதைத் தவிர்க்கும் பொறுப்பு எனக்கில்லையா ?

'உங்க ரெண்டுபேருக்கும் ஒரு உண்மையைச் சொல்லப் போறேன். நீங்க அதிர்ச்சியாகக் கூடாது. சங்கர் மேல் வருத்தப்படக்கூடாது !'

'என்ன சொல்ற நந்தா ?'

மனதை கல்லாக்கிக்கொண்டு பாகிஸ்தானில் நடந்ததையெல்லாம் விவரித்தேன்.

இறுக்கமான முகத்துடன் கேட்டுக்கொண்டிருந்தாள் அனுசுயா. பின், சரேலென்று நிமிர்ந்தாள்...

'தன்னோட ஒரு உயிருக்காக சொந்த நாட்டுக்கே துரோகம் பண்ண அவர் தயாராயிட்டாரா ? என் மாமனார் மட்டுமில்ல, எங்கப்பாவும் ராணுவத்துல இருந்தவர்தான்... நந்தா ! இப்ப சொல்றேன்... ஒரு துரோகியோட மனைவின்னு சொல்லிக்கறதைவிட, நாட்டுப் பற்றோட இருக்கற உங்களுக்கு மனைவியாகறதுல எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்ல !'

★ ★ ★



# 9

'தீவிரவாதிகளால எவ்வளவு குடும்பங்கள் அழியுது ? நெஞ்சுல ஈரமில்லாத சமீபத்துல ஒரு பள்ளிக்கூட பஸ்ஸையே வெடிச்சாங்களே... 40 குழந்தைங்க இறந்து போனாங்களே ! அவங்களைப் பத்திலாம் நெனைக்காம, துரோகம் செய்ய எப்படி மனசு வந்தது சங்கருக்கு ? அந்த துரோகியோட விதவைன்னு சொல்லிக்கறதுல எனக்கு என்ன பெருமை ?'

அனுசுயாவின் குரல் தீர்மானமாயிருந்தது.

சங்கரின் அம்மாவை நிமிர்ந்து பார்த்தேன். அவளுடைய கண்களிலும், முகத்திலும் உறுதி தெரிந்தது...

'ஆமாம் நந்தா! அனு சொல்றதுதான் சரி, அவனை என் மகன்னு சொல்லிக்கவே வெக்கமாயிருக்கு. அவன் நெனைப்பே வேணாம்... உன்னைப் பெத்ததா நெனைச்சு சந்தோஷப்பட்டுக்கறேன்... அனுசுயாவை நீ கல்யாணம் பண்ணிக்க; என் பூரண ஆசீர்வாதம் உண்டு !' என்றாள்.

மெல்லிய குரலில் பேசினாள் அனு :

'நிபந்தனை விதிக்கிறதா நெனைக்காதீங்க... ஆனா, இந்தக் கல்யாணத்துக்கு முன்னால சில விஷயங்களை நாம பேசிடறது நல்லது !'

'சொல்லு, அனு !'

'எனக்கு பொறந்த வீடுன்னு ஒரு பெரிய குடும்பம் இல்ல. எங்கப்பா போர்ல இறந்தாரு... எங்கம்மாவும் போய் சேர்ந்துட்டாங்க... இருந்த ஒரே அண்ணனும் வெளி நாட்டுல இருக்காரு... சங்கரும், அவரோட அம்மாவும்தான் என் உலகம்ன்னு இருந்தேன்... பார்வையில்லாத இந்த அத்தையை கடைசி வரைக்கும் நம்ம கூட வச்சிக்கணும் !'

'அப்புறம் ?'

'சங்கர் கூட 10 நாள்தான் வாழ்ந்திருக்கேன். ஆனாலும், என்னை நம்பி வரப்போற அவரோட குழந்தைக்கு கடைசிவரைக்கும் பாதுகாப்பு தரணும். நாளைக்கு இது சங்கரோட குழந்தைதானேன்னு நீங்களும் பிரிச்சு பார்க்கக்கூடாது !'

நெகிழ்ந்து போனேன்.

'நமக்குன்னு ஒரு குழந்தை பிறந்தா தானே, பிரிச்சுப் பாக்கத் தோணும் ? நமக்கு ஒரே குழந்தை; அது இதுதான்... கடைசிவரைக்கும் இவங்களுக்கு மகனா, உன் குழந்தைக்கு அப்பாவா இருப்பேன்; சத்தியம் !'

வீட்டிலேயே பூஜை அறையில் அனுசூயாவுக்கு தாலி கட்டினேன். என் மனைவியானாள் அனுசூயா. சில மாதங்களில் உயிருக்கு உயிராக உன்னைப் பெற்றுக் கொடுத்தாள்.

கண் தெரியாத உன் பாட்டியின் மடியில், உன்னை விட்டபோது சொந்த மகனையே தன் மடியில் படுக்க வைத்ததுபோல் வருடி, வருடிப் பார்த்து, முத்தங்களாகக் கொடுத்து எப்படி சந்தோஷப்பட்டார் தெரியுமா ? ஐந்து வயது வரை நீ பாட்டியை விட்டு வரவே மாட்டாய். அவள்தான் திடீரென்று நம் எல்லாரையும் விட்டுப் போய்விட்டாள்.



அதற்கப்புறம் இந்தச் சிறிய குடும்பத்தில் நீ, நான் அனுதான்.

சங்கரை முற்றிலும் மறந்துவிட்டு என்னிடம் சகஜமாகப் பழகுவதற்கு அனுசூயாவிற்கு கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் பிடித்தன.

சொல்லிக் கொண்டிருந்ததை நிறுத்தினான் நந்தா.

அவன் பேசிய நேரத்தில், ஓரிடத்தில் பொருந்தி உட்கார முடியாமல் வெவ்வேறு விதமாக நகர்ந்து உட்கார்ந்திருந்தாள் மேகா.

அவள் தலையை அன்புடன் வருடினான் நந்தா...

"கண்ணம்மா... சங்கர்கூட தேனிலவு போனபோது எடுத்த போட்டோ அது. இப்ப சொல்லு. உங்கம்மா எனக்கு துரோகமா பண்ணிட்டா ? இல்லடா ! உம்மேல உயிரையே வெச்சிருக்காங்கடா உங்கம்மா. அதே அளவுக்கு எம் மேலயும் உயிரையே வெச்சியிருக்காங்க !"

துடித்து எழுந்தாள் மேகா. அம்மாவின் மடியில் போய் விழுந்தாள். அவளை இறுக அணைத்து அழுதாள்...

"அம்மா... என்னை மன்னிச்சிடும்மா... ஓங்கி கன்னத்துல அறைஞ்சிடும்மா. உன்னை கேள்வி கேட்ட இந்த நாக்கை சூடு வெச்சு பொசுக்கிடும்மா !"

கண்களில் கண்ணீர் பெருக, இத்தனையையும் கேட்டுக்கொண்டிருந்த அனுசூயா இறுக்கம் உடைந்து மேகாவை அள்ளிக்கொண்டாள். அம்மாவும், மகளும் உணர்ச்சிகளின் கொந்தளிப்பில் கரைந்து அழுவதை தள்ளி நின்று ரசித்தான் நந்தா. அவனுடைய கண்களும் ஈரமாகியிருந்தன.

அனுசூயாவின் கன்னத்தில் மாறி, மாறி முத்த மிட்டாள் மேகா.

அழுதுகொண்டே சிரித்து, "கொஞ்சம் ஸ்வீட்டா கண்ணீர்விட கத்துக்கம்மா. முத்தம் கொடுத்தா, உதடெல்லாம் உப்புக் கரிக்குது!" என்று அவள் சொன்னதும், அனுசூயாவும் உதடுகள் விரிய சிரித்தாள்.

"எதுக்கும்மா அந்த துரோகியோட போட்டோவை இன்னும் வெச்சிருக்கீங்க? எரிச்சிருக்க வேண்டியது தானே?"

பதறினான் நந்தா...

"அப்படியெல்லாம் பேசாதே மேகா. உனக்கு சங்கரைப்பற்றித் தெரியாது. அவனுக்கு இந்த தேசம் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் அவங்கம்மா; அவ்வளவு முக்கியம் உங்கம்மா. அவ்வளவு முக்கியம் உங்கம்மா வயித்துல வளர்ந்த நீ... குடும்பப் பாசத்துலதான் தேசத்துக்கு துரோகியானான்!"

கண்களைத் துடைத்துக்கொண்டாள் மேகா...

"எனக்கு உங்க பெருந்தன்மையைப் பாத்தா ரொம்ப ஆச்சர்யமாயிருக்குப்பா. எங்கப்பாவைப்பத்தி என் மனசுல ஒரு கெட்ட அபிப்ராயம் வந்துடக் கூடாதுங்கறதுக்காக எப்படியெல்லாம் அவர் பண்ணின துரோகத்துக்கு நியாயம் கற்பிக்கறீங்க?"

மேகாவை இழுத்து அணைத்துக்கொண்டான் நந்தா...

"உனக்கு ஓரளவு பக்குவம் வந்தப்புறம், உன்னைப் பத்தின எல்லா உண்மையும் உன்கிட்ட சொல்றதாதான் இருந்தோம். அதனாலதான் இந்த போட்டோவெல்லாம் பத்திரமா வச்சிருந்தோம். ஆனா, நீ பொறுமையில்லாத அவசரக் கழுதையாச்சே... எல்லாத்தையும் கெடுத்துட்டே..."

ராணுவத் தோழர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படத்தை மேகாவிடம் காட்டினான் நந்தா.



"இவர்தான் ராம்குமார்; இதான் உங்கப்பா; இதான் நான்..."

அவன் கன்னத்தில் பளாரென்று அறைந்தாள் மேகா. அவன் விரலைப் பிடித்தாள்...

"ஒழுங்காக் காட்டுங்க. எது என் அப்பா?"

இதான் உங்கப்பா..."

மீண்டும் அறைந்தாள். அவன் விரலை அவள் பிடித்து புகைப்படத்தில் சங்கருடைய முகத்திலிருந்து நகர்த்தி, நந்தாவின் முகத்துக்கு கொண்டுவந்து அழுத்தினாள்...

"நல்லாப் புரிஞ்சுக்குங்க. இதுதான் எங்கப்பா; அது இல்ல!"

நெகிழ்ந்தான் நந்தா.

அனுசூயாவின் குரல் குறுக்கில் புகுந்தது...

"நேத்து ராத்திரிலேர்ந்து நான் சாப்பிடலை. நேத்து காலைலேருந்து இந்தக் கழுதை சாப்பிடலை. எங்களுக்குப் பசிக்குது!"

மேகாவைத் தட்டினான் நந்தா...

"போடா... மூணு பேரும் குளிச்சுட்டு டிபன் சாப்பிட வெளியே போறோம்!"

அவளும், அனுசூயாவும் குளிப்பதற்காக பாத் ரூமுக்குள் போய் சேர்ந்ததும் கையிலிருந்த புகைப்படத்தை சற்று நேரம் பார்த்துக்கொண்டிருந்தான் நந்தா. மற்ற முகங்கள் எல்லாமே அப்படியே புகையாகிப் போய் அவனும், சங்கரும் மட்டும் இருப்பது போல் தோன்றியது.

சங்கரின் முகத்தை விரல் நுனியால் மெல்ல வருடினான்...

"சாரிடா சங்கர்... மேகா கிட்ட நான் நிறைய பொய் சொல்ல வேண்டியிருந்தது. என்னை மன்னிச்சிடு !"

அவன் கண்களில் கண்ணீர் ததும்பி, பார்வை மச மசப்பானது.

சாப்பிடும் போது சொன்னாள் மேகா...

"இன்னிக்கு நீங்க கோயமுத்தூர் போறீங்க. உங்க வேலையை முடிக்கறீங்க... எங்களுக்காக வெயிட் பண்றீங்க. நானும், அம்மாவும் நைட் புறப்பட்டு வர்றோம். நாம மூணுபேரும் நாளைக்கு காலைல ஊட்டிக்குப் போறோம் !"

"என்னடா திடீர்னு ?" என்று அதிசயித்தாள் அனுசுயா.

"ஆமா, எனக்கு ஒரு புது அப்பா கிடைச்சிருக்காரு; புது அம்மா கிடைச்சிருக்காங்க. எனக்கு கொண்டாடணும் போல இருக்கு. தயவுசெஞ்சு தடுக்காதீங்க !"

"சரி !" என்றான் நந்தா.

நீலமலை ராணி -

சிகரங்களில் படுத்திருப்பதா, சுருண்டு வான் நோக்கி எழுவதா என்ற குழப்பத்துடன் அலையும் மேகங்கள். தைல மரங்களையும், தேயிலைத் தோட்டங்களையும் அலங்காரமாக உடுத்தியிருக்கும் ஊட்டி.

நகரத்தால் அழுக்கு பண்ணப்பட்ட ஏரியில் படகுகள் மிதந்தன. ஒரு துடுப்புப் படகை செலுத்திக்கொண் டிருந்தான் நந்தா. எதிரில் மேகாவும், அனுசுயாவும் நெருங்கி அமர்ந்திருந்தனர்.

அம்மாவின் தொடையில் கிள்ளினாள் மேகா.

"பாவம் இல்லியா எங்கப்பா ? போனதடவை நாம போட்டிங் வந்தபோது நீயும், அப்பாவும் பக்கத்துல பக்கத்துல, உக்காந்து ஆளுக்கு ஒரு துடுப்பு பிடிச்சு போடலை ? இன்னிக்கு மட்டும் ஏன் அவரைத் தனியாக் காய விட்டுட்டே ?"



நெளிந்தாள் அனுசுயா.

மேகாவிடம் கடந்த காலத்தைப்பற்றி நந்தா விவரித்துச் சொன்னபோது, மீண்டும் அந்த நாட்களை வாழ்ந்து முடித்தது போன்ற ஒரு சின்ன அதிர்ச்சி அனுசுயாவைத் தாக்கியிருந்தது.

சங்கரை முற்றிலுமாக மறந்து, நந்தாவை மட்டுமே நினைத்திருந்த மனதில் எதிர்பாராத சின்னப் புயல் ஒன்று வீசி விட்டது. வளர்ந்த மகளின் முன் குற்றவாளிக் கூண்டில் நிற்கவைக்கப்பட்டது போன்ற உணர்விலிருந்து முழுவதுமாக அவளால் மீள முடியவில்லை.

அதை மேகாவும் கவனித்தாள். அம்மாவுக்கும், அப்பாவுக்கும் நடுவில் கண்ணுக்குத் தெரியாத ஒரு லட்சுமணக் கோட்டைதான் இழுத்துவிட்டோமே என்ற குற்ற உணர்வு அவளை உறுத்தியது.

"போம்மா... அப்பா பக்கத்துல உக்காரு !"

"வா, அனு..." என்று சற்று ஒதுங்கிக்கொண்டான் நந்தா. வேறு வழியில்லாமல் அவன் அருகில் அமர்ந்தாள் அனுசுயா.

நந்தா வலதுபுறத் துடுப்பையும், அனுசுயா இடது புறத் துடுப்பையும் ஒரே கதியில் இயக்க, படகு நகர்ந்தது.

மேகா, நின்றபடி கைகளை கேமரா போல் வைத்து 'க்ளிக், க்ளிக்' என்று இரண்டு, மூன்று கற்பனை ஸ்னாப்களை எடுத்தாள்.

பக்கத்தில் ஒரு மோட்டார் படகு விரைந்து கடந்தது. அது உந்தித் தள்ளிய தண்ணீர் இந்தப் படகில் மோதிய வேகத்தில் இது சற்றே ஆடியது.

படகில் நின்றிருந்த நீச்சல் தெரியாத மேகா, சடாரென்று தன்னிலை இழந்து, தண்ணீருக்குள் தலைகுப்புற விழுந்தாள்.

★ ★ ★



## 10

படகில் நின்றிருந்த மேகா, சடாரென்று தன்னிலை இழந்து, தண்ணீருக்குள் விழுந்ததும் அலறினாள் அனுசூயா; பதறினான் நந்தா.

பக்கத்தில் சென்ற படகில் இருந்த ஓர் இளைஞன் உடனே தண்ணீருக்குள் பாய்ந்தான். அந்தப் படகில் இருந்தவர்களும் பதட்டத்துடன் வேடிக்கை பார்க்க, அடுத்த சில வினாடிகளில், மேகா தண்ணீருக்குளிருந்து அவனால் அள்ளப்பட்டாள். தண்ணீர் மட்டத்துக்கு மேலே அவளுடைய தலை கொண்டுவரப்பட்டது. நந்தாவும், அவனுமாக சேர்ந்து நந்தாவின் படகுக்குள் அவளை இழுத்துப்போட்டனர்.

அந்த அறையில் மின்சார ஹீட்டர் அலை அலையாக வெப்பத்தை பரப்பிக்கொண்டிருந்தது. மெல்ல கண்களைத் திறந்தாள் மேகா. பக்கத்தில் பதட்டத்துடன் அமர்ந்திருந்த அனுசூயாவைப் பார்த்து கண்ணடித்தாள். கோபத்துடனும், அழுகையுடனும் மேகாவின் தலையில் தட்டினாள் அனுசூயா...

"எதுல விளையாடறதுன்னு இல்ல ?"

அந்த இளைஞனிடம் நன்றி சொல்லிக்கொண்டிருந்தான் நந்தா. குரல் கேட்டுத் திரும்பினான்.

"இவர்தான் தண்ணில குதிச்சு உன்னை வெளில கொண்டுவந்தார் மேகா," என்றான்.

"நீங்க ஏம்ப்பா தண்ணில குதிச்சு என்னைக் காப்பாத்தல ? அப்படியே ஊட்டி ஏரியிலேயே போய்ச் சேரட்டும்னு நினைச்சுட்டீங்களாப்பா ?"

"முட்டாளா நீ ? நானும் குதிக்கறதுக்கு ட்ரை பண்ணியிருந்தேன்னா, மொத்தமா படகு கவுந்திருக்கும். உங்கம்மாவும் தண்ணிக்குள்ள போயிருப்பா !"

"அவருக்கு தாங்க்ஸ் சொல்லு !" என்றாள் அனுசூயா.

மேகா பார்வையை திருப்பிப் பார்த்தாள். பக்கத்தில் உட்கார்ந்திருந்தவன் முற்றிலும் நனைந்திருந்தான். பூத்து வாலையால் தலையைத் துவட்டிக்கொண்டிருந்தான். ஊட்டிக் குளிரில் உடைகள் நனைந்துபோனதால் அவன் பற்கள் கிடு, கிடுவென்று தந்தியடித்துக்கொண்டிருந்தன.

அவன் சிரித்தான். 20 வயது இளைஞன்; ஆரோக்கியமான பற்கள்; இளமையான முகம்; அடர்ந்த புருவங்கள்; கண்களில் வெளிச்சம்.

"இவர் பேரு வினோத் !"

அந்த இளைஞனின் முகத்தை சற்று நேரம் ஊன்றிப் பார்த்தாள் மேகா...

"இந்த முகத்தை நான் எங்கயோ பாத்த மாதிரி தோணுதுப்பா..."

"நீங்க என்னை தண்ணிக்குள்ளதானே பாத்தீங்க... அப்பக்கூட கண்ணை உடனே மூடிக்கிட்டீங்களே..." என்று சிரித்தான் வினோத்.

"இல்ல... வேற எங்கயோ பார்த்த மாதிரி எனக்கும் தோணுது," என்றான் நந்தா.

"ஏம்ப்பா... ஒருவேளை நம்ம ரெண்டு பேர் கனவிலயும் இவர் வந்திருப்பாரோ ?"



சிரித்தான் வினோத்...

"உங்க கனவுல நான் வந்தேனா, இல்லையான்னு எனக்குத் தெரியாது. ஆனா, என் கனவுல நீங்க வரலை !"

"இந்த வால் பொண்ணை வெச்சுக்கிட்டுத்தான் 16 வருஷமா நாங்க கஷ்டப்பட்டிருக்கோம். இது கிடு, கிடுன்னு படிச்சு முடிச்சதுன்னா, எவன் கையிலயாவது தூக்கிக் குடுத்துட்டு நாங்க நிம்மதியாயிடுவோம்," என்றாள் அனுசூயா.

"அப்படியெல்லாம் என்னை வித்துர முடியாதும்மா..." என்று அவள் கழுத்தை கட்டிக்கொண்டாள் மேகா.

"வினோத் சென்னை வந்தா வீட்டுக்கு வாங்க..." விசிட்டிங் கார்டை அவனிடம் கொடுத்தான் நந்தா.

அதைப் புரட்டிப் பார்த்தான் வினோத்...

"ஏன் சார் ! என் படிப்பை முடிச்சப்புறம் ஒருவேளை எனக்கு வேலை கிடைக்கலைன்னா, உங்க பொண்ணை காப்பாத்தினதுக்காக உங்க கம்பெனில ஒரு வேலை போட்டுத்தர மாட்டீங்க ?"

அவனுடைய நகைச்சுவை உணர்வை ரசித்தான் நந்தா.

"சொல்ல முடியாது. எங்கப்பா உணர்ச்சிவசப்பட்டு பொண்ணையே கட்டிக்கொடுத்தாலும் கொடுத்துடுவாரு !"

"ஐய்யய்யோ... சார் ! நான் உதவிதான் கேட்டேன்; தண்டனை கொடுத்துடாதீங்க !"

சிரித்தான் வினோத். அவர்களிடம் விடைபெற்று விருட்டென்று அந்த அறையை விட்டு வெளியேறினான்.

"கழுதை ! ஒரு ஆம்பளைகிட்ட என்ன பேசறதுன்னு கிடையாது ? பேசாம இவளை தண்ணிலயே விட்டுருக்கலாங்க; காப்பாத்தினது தப்பாப் போச்சு !" என்றாள் அனுசூயா.

வினோத் போன பிறகும், கண்களை மூடினால் அவனுடைய ஈரம் சொட்டும் முகமும், வசீகரிக்கும் சிரிப்பும் மேகாவின் நினைவிலேயே இருந்தன.

'எங்கே பார்த்த முகம் அது ? ச்சே ! ஏன் அந்த முகம் மறுபடி, மறுபடி வந்து தொந்தரவு செய்கிறது ?' என்று கண்களை இறுக மூடிக்கொண்டாள்.

எவ்வளவு இறுக மூடினாலும் அவனைக் கண்களுக்குள்ளிருந்து விரட்ட முடியவில்லை.

விழுந்து அடிபட்டுக்கொண்ட காயம் காலப் போக்கில் சிராய்ப்பாக மாறி, முற்றிலும் காய்ந்து உதிர்ந்து போய் தழும்பு கூட தெரியாமல் மறைந்து போவதுண்டு அதைப்போலத்தான் சங்கர் பற்றி மேகாவின் இதயத்தில் எழுந்த புயல், கொஞ்சம், கொஞ்சமாக வலுவிழந்து ஒரு கட்டத்தில் நினைவுகளிலிருந்தே நழுவி விட்டது.

மேகா, கல்லூரியின் முதல் வருடத்தை முடித்திருந்த நேரம்.

இரவு நள்ளிரவில் அவளை உலுக்கி எழுப்பினாள் அனுசூயா. விழித்தவுடன் மேகாவின் மீது ரோஜாப் பூக்களைத் தூவினான் நந்தா...

"ஏய், என்ன இது ? எதுக்கு இந்த ஆர்ப்பாட்டம் ?" என்று கண்களைக் கசக்கினாள் மேகா.

சிரித்தான் நந்தா...

"முட்டாள் பெண்ணே... போன நிமிஷம் வரைக்கும் நீ பொறுப்பில்லாம இருந்திருக்கலாம்; ஆனா, இந்த நிமிஷத்துலேருந்து நீ பொறுப்புள்ளவளா மாறியாகணும் !"

"ஏன் ?"



"மணியைப் பாரு. ராத்திரி 12 மணி. இப்ப தேதி மாறியாச்சு. உனக்கு 18 வயசு பூர்த்தியாயிடுச்சி. இப்ப நீ மேஜர். ஹேப்பி பர்த்டே டார்லிங் !"

அவள் கன்னத்தில் செல்லமாகத் தட்டினாள் அனுசூயா.

"அப்பா... மேஜராயிட்டதால யாரைக் கல்யாணம் பண்ணிக்கணும்ங்கற முடிவை நானே எடுக்க முடியும் தானேப்பா ?

"அடிப்பாவி ! அதுக்குள்ள எங்க ரெண்டுபேரையும் கழட்டிவிடப் பாக்கறியா ?"

"கேள்விக்கு பதிலைச் சொல்லுங்க !"

"தாராளமா செலக்ட் பண்ணலாம். பண்ணிட்டியா, நாளைக்குக் காலைலயே ஓடிப்போகலாம் !"

"ஓடப் போறேன்ப்பா... ஆனா, எவனையோ இழுத்துக்கிட்டு இல்ல... எங்க காலேஜ்ல நாளைக்கு ஒரு எக்ஸ்கர்ஷன் போறோம் !"

"எங்க போறீங்க ?"

சென்னைக்கு அருகில் ஆந்திர எல்லையில் உள்ள அருவியின் பெயரை சொன்னாள் மேகா. இவ்வளவு பாசமுள்ள அப்பா, அம்மாவை திருமணத்திற்கு பின் பிரியணுமே என்று நினைத்தவளுக்கு தூக்கமே வரவில்லை.

திடீரென்று எங்கிருந்தோ கண்முன் குதித்ததுபோல அந்த வினோத்தின் முகம் நழுவி வந்து நிற்பதை உணர்ந்தாள் மேகா.

ஊட்டியில் படகு விபத்தில் தண்ணீரில் மூழ்க இருந்த தன்னைக் காப்பாற்றியவனை அப்புறம் பார்க்கும் சந்தர்ப்பமே வரவில்லை. திடீரென்று அவன் நினைவு ஏன்

வந்து வண்டுபோல் துளைக்கிறது ? மறுநாள் அவளுக்கு விடை கிடைத்தது.

அந்த கல்லூரி பஸ் துள்ளலையும், உற்சாகத்தையும் சுமந்துகொண்டு தமிழகத்துக்கும், ஆந்திராவுக்கும் இடைப்பட்ட பிரதேசத்திற்குள் நுழைந்தது.

முண்டும், முடிச்சுமாக இருந்த பசுமையான மலையில் திடீரென்று வெள்ளை பென்சிலால் கீறல் போட்டதுபோல அருவி ! அங்கங்கே சின்ன, சின்னக் கோடுகளாக இறங்கி, ஒன்றாகச் சேர்ந்தபின் மாபெரும் நீர் வீழ்ச்சியாக இரைச்சலிட்டு, ராட்ஷச வேகத்தில் பாறையில் மோதி சிதறுண்டு, அங்கங்கே உயரங்களால் கட்டுப்படுத்தப்பட்டு, இறுதியில் ரசிக்கப்படும் அருவியாக உருமாறியிருந்தது.

பேருந்திலிருந்து மாணவிகள் இறங்கினர். சிறு, சிறு குழுக்களாகப் பிரிந்து, கை கோத்து ஆளுக்கொரு திசையில் மலையையும் சிற்றோடைகளையும் தங்கள் பாதங்களால் அளந்தனர்.

கண்ணாடி போன்ற அருவி நீரை பார்த்ததும், "ஏய், கொஞ்சம் கால் நனைச்சுட்டு வரேன்..." என்றாள் மேகா.

கூட இருந்த தோழிகள், "வேண்டாம் மேகா. பாத்தாலே ஆபத்தா தெரியுது !" என்று பதறினர்.

"மூணடி ஆழம் கூட இல்ல தண்ணி. கடலுக்குப் போயிட்டு அலைல நிக்காம திரும்புவாங்களா ? தோப்புக்கு போய்ட்டு மாங்கா பறிக்காம வருவாங்களா ? அருவிக்கு வந்துட்டு நனையாம போவாங்களா ? வழுக்கி விழறதுக்கு இதென்ன பாசி படிஞ்ச குளத்து படிக்கட்டா ?"

மேகா பிடிவாதமானவள் என்று அவர்கள் அறிந்திருந்தனர்.



பாதங்களின் மென்மையான பகுதிகள், அங்கு புரண்டிருந்த சிறு கற்களை மிதித்து, பிடிப்பு தேடிக்கொண்டன. திடீரென்று காலுக்கடியில் இருந்த ஒரு கல் புரள நிலை தடுமாறி அவள் தண்ணீரில் விழுந்தாள்.

சாதுவாக பாய்ந்து கொண்டிருந்த நீர், அந்த இடத்தில் பள்ளம் நோக்கி திடீரென்று வேகப் பாய்ச்சலாக சீறியதால், இரக்கமில்லாமல் மேகாவைப் புரட்டி தன்னோடு இழுத்தது. கண நேரத்தில் அருவியின் விளிம்பைத் தாண்டி தண்ணீரோடு கலந்து காணாமல் போனாள் மேகா.

உயிர் போய்விட்டது என்று அவள் நினைத்த அந்தக் கணம், தண்ணீருக்குள் யாரோ பாய்வது தெரிந்தது. மூச்சை அழுந்தப் பிடித்து அவள் எழும்பப் பார்த்தபோது, மேலும், மேலும் மூச்சு முட்ட, தண்ணீருக்குள் கண்களைத் திறந்து பார்த்தாள் மேகா.

படு வேகமாக தண்ணீர் விழுந்து கொண்டிருந்த அந்த இடத்திலிருந்து, நகர்த்தப்பட்டு அவள் வெளியே இழுக்கப்பட்டாள். இரண்டு தலைகளும் அந்த தண்ணீரின் மட்டத்துக்கு மேலே ஒருசேர குபுக்கென்று வெளிப்பட்டன.

வாயைத் திறந்து மூச்சுக் காற்றை நுரையீரல்கள் கெஞ்சக், கெஞ்ச இழுத்தாள் மேகா. தன்னைக் காப்பாற்றியவனை திரும்பிப் பார்த்தவளுக்கு இனிய அதிர்ச்சி.

வினோத் ! அதே வினோத் !

கற்பனையா ? நிஜமா ?

★ ★ ★

## 11

மேகாவை இழுத்துக்கொண்டு தண்ணீரில் நகர்ந்தான் வினோத்.

பாறைப் பகுதிக்கு அவளை இழுத்து ஏற்றினான். பாறையில் பொத்தென்று அமர்ந்தாள் மேகா. அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்...

"தேங்க்ஸ் !"

அவளை நம்பிக்கையின்றிப் பார்த்தான் வினோத்...

"என்ன நினைச்சுட்டிருக்கீங்க மனசுல ? என்னோட காத்து பட்டாலே, தண்ணில குதிச்சு உயிரை விடறதுக்கு பாப்பீங்களா ? ஒவ்வொரு தடவையும் நான் வந்து உங்களை காப்பாத்திட்டிருப்பேன்னு எதிர்பார்க்கறீங்களா ?" என்று கடுமையான குரலில் கேட்டான்.

தண்ணீருக்குள் மூச்சுப் பிடித்து மூழ்கியிருந்த காரணத்தினாலோ அல்லது போக இருந்த ஓர் உயிரை மிக அருகிலிருந்து காப்பாற்றியதில் ஏற்பட்ட படபடப்பாலோ அவனுடைய குரல் புரண்டு, புரண்டு வந்தது. உயிர் பயம் விலகி சிரித்தாள் மேகா...

"விதி அப்படி இருந்தா, யாரால மாத்த முடியும் ? ஆனா, நான் ஒண்ணும் நீங்க இருக்கீங்கன்னு நினைச்சு தண்ணில குதிக்கல. நீங்க தண்ணில குதிச்சு என்னை இழுக்கலைன்னாகூட, உயிர் போயிருக்காது. ஊட்டில



தண்ணில விழுந்தபோது எனக்கு நீச்சல் தெரியாது; ஆனா இப்ப நீங்க தண்ணில தவறி விழுந்துட்டாக்கூட, உங்களை இழுத்து கரைல போடற அளவுக்கு எனக்கு நீச்சல் தெரியும் !" என்றாள்.

"சரியான நன்றி கெட்ட ஜென்மம்," என்றான் வினோத்.

"தண்ணில எப்படா நான் விழுவேன்னு என் பின்னாலயே வேவு பார்த்துக்கிட்டு வர்றீங்களா ? ஏரில விழுந்தாலும், காப்பாத்தினீங்க... அருவில விழுந்தாலும் காப்பாத்தறீங்க... பாத்ரூம்ல விழுந்தாலும் காப்பாத்துவீங்க போலிருக்கு..." என்றாள்.

சடக்கென்று நிமிர்ந்து பார்த்தான் வினோத்...

"அந்த சான்ஸ்கூட எனக்குக் கொடுப்பீங்களா ?"

தன்னையறியாமல் சிரித்தாள் மேகா.

இதற்குள் மேகாவின் தோழிகள் ஓடிவந்து அவளை சூழ்ந்துகொண்டனர்.

"மீட் மிஸ்டர் வினோத். தண்ணில எப்ப நான் விழுந்தாலும் பின்னாலயே குதிச்சு என்னைக் காப்பாத்தற ஹீரோ..." என்றாள் மேகா.

"விளையாட்டாடி ? எங்க எல்லாருக்கும் உயிரே போச்சு. உங்கம்மாவும், அப்பாவும் கேட்டா என்ன பதில் சொல்ல முடியும் ? மேடம் எங்களையில்ல போட்டு வறுத்துடுவாங்க ! கொஞ்சம்கூட பொறுப்பில்லாம சொல்லச் சொல்ல கேக்காம தண்ணில போய் விழுந்தியே... முட்டாள்..." என்று ஆளாளுக்கு மேகாவைப் பிடித்து எகிறினர்.

பிறகு வினோத்திடம், "எப்படி இங்க வந்தீங்க ?" என்றாள் மேகா.

"நானும், இன்னொரு ப்ரண்டும் பைக்ல வந்தோம்... அருவியைப் பக்கத்துல நின்னு ரசிச்சிட்டிருந்தேன்... சின்னச் சின்னதா கல்லுல்லாம் மேலருந்து உருண்டு விழுந்துட்டிருந்தது. திடீர்னு ஒரு பெரிய கல்லு மட்டும் சுடிதார்லாம் போட்டுக்கிட்டு உருண்டு வந்தது. தண்ணில குதிச்சுத் தேடினா நீங்க... வர்றீங்களா ? உடம்பெல்லாம் குளிர்ல நடுங்குது. சூடா ஒரு டீ சாப்பிடலாம்..."

"வர்றேன் !" என்றாள் மேகா.

"ஏய்... என்னடி, ஆளைப் பாத்தவுடனே எங்களைக் கழட்டிவிடறே... எங்களுக்கெல்லாம் டீ உண்டா ?"

"ஹீரோன்னு ஒருத்தரு என்னைக் காப்பாத்தி யிருக்காரு... அப்புறம் சுத்தி இருக்கற தோழிங்களுக்கு மட்டும் டீ வாங்கித்தர மாட்டாரரா ?" என்றாள் மேகா சிரித்துக்கொண்டே.

அவளை சடக்கென்று திரும்பிப் பார்த்தான்...

"கண்ட தமிழ்ப் படத்தைப் பார்த்து வீணாப் போயிருக்கிங்க..."

சிரித்தபடியே அவர்கள் அந்தப் பாறைகளில் ஈரத் தடங்களை பதித்து கீழே இறங்க ஆரம்பித்தனர்.

"பாண்டிச்சேரில உங்கப்பா என்ன பண்றாரு ?" என்று கேட்டாள் மேகா.

"போட்டோவுல சிரிச்சிட்டிருக்காரு..."

"ஐம் ஸாரி... இறந்திருப்பார்னு நெனைக்கல !"

"ஆர்மில இருந்தாரு... எனக்கு மூணு வயசானபோது, எல்லைக்குப் புறப்பட்டுப் போனாரு; திரும்பல..."

சடக்கென்று நின்றாள் மேகா...



"என்ன ஆச்சரியம் ? எங்கப்பாவும் ஆர்மில இருந்தவர்தான்... எங்கப்பாபேரு நந்தா... உங்கப்பாபேரு ?"

"கேப்டன் ராம்குமார் !"

அவளை ஒருமுறை திரும்பிப் பார்த்தான் வினோத். மேகாவின் முகத்தில் புது சந்தோஷம் கும்மாளமிட்டது...

"ராம்குமார்... மூளைல மணியடிக்குது. ஊட்டில சந்திச்சபோதே, உங்க முகம் எங்கேயோ பார்த்தமாதிரி இருக்குன்னு சொன்னேனில்ல ? உங்கப்பா போட்டோவை நான் பார்த்திருக்கேன். எங்கப்பாவும், உங்கப்பாவும் ஒண்ணா வேலை செஞ்சிருக்காங்க. நிச்சயம் நீங்க எங்க வீட்டுக்கு வரணும் வினோத் !"

"பாத்ரூம்ல விழறதுக்கு முன்னால ஒரு நோட்டீஸ் கொடுங்க... வரேன் !"

பாகிஸ்தான் -

தெற்குப் பகுதியில் அரபிக்கடலை ஒட்டி இருந்த அந்தச் சிறைக் கூடத்திற்குள் தூசு படிந்த ராணுவ ஜீப் வந்து நின்றது. பாகிஸ்தான் சிப்பாய் நீட்டிய பட்டியலை படித்தார் சிறை அதிகாரி. பக்கத்தில் இருந்த இன்னொரு சிப்பாயிடம் கொடுத்தார்...

"இந்தப் பட்டியலில் இருக்கும் இந்திய நாய்களை அழைத்து வா !"

ஐந்து நிமிடங்களில் மூன்று களைத்த உருவங்கள் அங்கு கொண்டுவந்து நிறுத்தப்பட்டன.

"உங்கள் மூவருக்கும் இன்று அதிர்ஷ்ட தினம். சிறைப் பிடிக்கப்பட்ட சில பாகிஸ்தான் ராணுவ வீரர்களை இந்திய ராணுவம் திருப்பித் தரப்போகிறது. அதற்கு பண்ட மாற்றாக, எங்கள் பக்கத்திலிருந்து இந்தியக் கைதிகளைக்

கேட்கிறது. இந்தச் சிறையிலிருந்து விடுதலையாவது நீங்கள் மூன்றுபேர் !"

இருவர் முகத்தில் உடனடியான மகிழ்ச்சி துள்ளியது.

மூன்றாமவனின் முகத்தை அதிகாரியின் முரட்டுக் கழி நிமிர்த்தியது...

"ஆறு ஆண்டுகளுக்கு முன்பே விடுதலையாகியிருக்க வேண்டியவன் நீ. இந்தியா திரும்ப உனக்கு இஷ்டமில்லை போலும். மறுபடி, மறுபடி சிறையிலிருந்து தப்பிக்க முயற்சி செய்து உன் தண்டனைக் காலம் கூடிவிட்டது. ஆனால், இனிமேல் உன்னை இங்கே வைத்திருக்க எங்களுக்கு விருப்பமில்லை... உன்னால் எந்த உபயோகமும் இல்லை... அதனால்தான் உனக்கு விடுதலை !"

"நன்றி !" உலர்ந்த குரலில் சொன்னான்.

"பாகிஸ்தானிற்குள் ஒற்றறிய வந்தபோது, நீ கொடுத்த பெயர் வாசிம். உன் உண்மைப் பெயர் ?"

"நான் ஒற்றறிய வரவில்லை... நீங்கள் நடத்தும் தீவிரவாத முகாம்களை அழிக்க வந்த குழுவில் இருந்தேன் !"

"உன் நண்பனைப் போல நீயும் புத்திசாலித்தனமாக ஒத்துழைத்திருந்தால், அன்றே விடுதலையாகி இருப்பாய்... இந்த திமிர்ப் பேச்சுதான் உன்னை 18 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் வைத்திருந்தது. இப்போது உன் இந்தியப் பெயரைச் சொல்கிறாயா ? சிறைக்குள் திரும்புகிறாயா ?"

"சங்கர் !"

"உனக்குக் கிடைத்திருக்கும் சுதந்திரத்தை ரசிக்க உன் உடலில் வலு இல்லை... போ !"

சங்கரின் இடது முழங்கால் நிரந்தரமாக சிதைக்கப் பட்டிருந்தது. காலை உயர்த்த முடியாமல், தரையோடு இழுத்து, இழுத்துத்தான் நடக்க முடிந்தது.



அவனுடைய ரத்தத் துளிகள் இந்த மண்ணில்தான் சிந்தின; உலர்ந்தன.

'என்னை சிறை வைத்திருந்த நாடே... நீ எனக்குக் கொடுத்த உறுதிக்கு நன்றி.

என் தாய்நாடே உன் புண்ணிய மண்ணில் பாதம் பதிக்கத் துடிப்புடன் காத்திருக்கிறேன். என்னை இருகரம் நீட்டி நீ வரவேற்கும் தருணத்தை எதிர்பார்த்தே இத்தனை வருடங்களை எதிரி நாட்டின் கொடும் சிறைகளில் கழித்து விட்டேன்... இதோ வருகிறேன்...'

ராணுவ ஜீப்பில் உந்தி ஏற்றப்பட்டான் சங்கர்.

காகிதங்கள் சரி பார்க்கப்பட்டன; முகங்கள் ஆராயப்பட்டன. இரு நாட்டு ராணுவக் கைதிகளும் தத்தம் எல்லைகளுக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். கண்ணீர் பெருக, இந்திய மண்ணை முத்தமிட்டான் சங்கர். இந்திய ஜீப்பில் மற்றவர்களுடன் ஏற்றப்பட்டான்.

புதுடில்லி - இந்திய ராணுவ அலுவலகம் -

டர்பன் கட்டிய அதிகாரி சங்கரைப் பார்த்த பார்வையில் நட்பு இல்லை...

"இந்திய ரெக்கார்டுகளில் உன் பெயர் 18 வருடங்களுக்கு முன்பே அடிக்கப்பட்டுவிட்டது. நீ இறந்துவிட்டதாகப் பதிவாகியிருக்கிறது," என்றார் மீசையைத் திருகியபடி.

வேதனையுடன் நிமிர்ந்தான் சங்கர்...

"இந்திய - பாக்., எல்லையில் நிறுத்திய, என்னை அவர்கள் சுட்டது உண்மைதான். ஆனால், தோட்டா என் நெஞ்சில் பாயவில்லை; இடது முழங்காலில் பாய்ந்தது. பாகிஸ்தான் ராணுவ மருத்துவமனையில் கொண்டு போட்டனர். அங்கிருந்து போர்க் கைதியாக என்னை

இழுத்து சென்று சிறையில் பூட்டினர். என்னைக் கொல்வதைவிட, சித்ரவதை செய்தால், இந்திய ராணுவத்தைப் பற்றி என்னிடம் ரகசியத் தகவல்கள் வாங்க முடியும் என்று கருதினர்.

"நான் பிடிவாதமாக எதையும் சொல்ல மறுத்தேன். இடையில் தப்பிக்கப் பார்த்தேன்; பிடிபட்டேன். தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டேன். என் தண்டனைக் காலம் நீட்டிக்கப்பட்டது !"

"கேப்டன் ராம்குமாரின் தலைமையின் கீழ் அனுப்பப் பட்டவர்களைக் காட்டிக் கொடுத்தவன் நீ. இந்தியாவில் உன் போன்ற துரோகிகளுக்கு இடமில்லை என்பதால் பாகிஸ்தானில் அடைக்கலம் தேடிக்கொண்டாய் !"

நெஞ்சில் கொதிக்கும் இரும்பைப் பாய்ச்சியதைப் போல் உணர்ந்தான் சங்கர்...

"ஐயோ இது அபாண்டம் !" என்று பதறினான்.

அதிகாரி தனக்கு எதிரே இருந்த பெரிய பழுப்பு நோட்டைத் தட்டிக் காட்டினார்...

"நானாக எதுவும் சொல்லவில்லை; ராணுவ டைரிகளில் அப்படித்தான் குறிக்கப்பட்டிருக்கிறது !"

"நான் துரோகம் செய்ததாக யார் குற்றம் சாட்டியிருக்கின்றனர் ஆபீசர் ?"

"உங்கள் குழுவிலிருந்தவர். பாகிஸ்தான் துப்பாக்கி களிலிருந்து தப்பித்து வந்த ஒரு சிப்பாய் நந்தாதான் அப்படி வாக்குமூலம் கொடுத்திருக்கிறார் !"

தீயை முகத்தில் வாரியடித்ததுபோல் திகைத்து நின்றான் சங்கர்...

"நந்தாவா ? என் உயிர் நண்பன் நந்தாவா ? அவன் இன்னும் ராணுவத்தில் பணிபுரிகிறானா ?"



"இல்லை. ராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டார் !"

"இப்போது எங்கே இருக்கிறான் ?"

அவர் சங்கரை சந்தேகத்தோடு நிமிர்ந்து பார்த்தார்...

"ஸாரி... நீ பழி வாங்கும் எண்ணத்துடன் கேட்கிறாய். உனக்கு அந்தத் தகவல்களைத் தர முடியாது !"

★ ★ ★

## 12

**தி**டுக்கிட்டான் சங்கர்...

"இல்லை, ஆபீசர்... நந்தா என் நெருங்கிய நண்பன்; ஒருக்காலும் அவன் என்மீது பொய்யாகப் பழி சுமத்தியிருக்க மாட்டான்... அவனை அழைத்து வந்து என் நேர்மையை உங்களிடம் நிரூபிப்பதற்காகத்தான் அவனுடைய இருப்பிடம் பற்றிக்கேட்டேன் !"

அவனை சாப்பாட்டில் விழுந்த பூச்சியைப் பார்ப்பது போல் பார்த்தார் அதிகாரி...

"நீயா நேர்மையானவன் ? சுயநலத்துக்காக உன்னுடன் வந்தவர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டு, கோழைபோல் ஓடிவிட்ட தேசத் துரோகி. உன் துரோகத்தை எங்களிடம் சொல்லிவிட்ட நந்தாவை உன்னிடம் காட்டிக்கொடுக்க நான் தயாரில்லை !

"உயர் அதிகாரியாக உன்னை எச்சரிக்கிறேன். மிச்ச நாட்களையாவது உண்மையான இந்தியனாக செலவழி. யார் வம்புக்கும் போகாதே. நந்தாவுக்கு எதிராக ஓரடி தவறாக எடுத்து வைத்தால்கூட, சிறையில் அடைக்கப் படுவாய். இதற்குமேல் என் நேரத்தை வீணடிக்காதே. போ !"

துப்பாக்கி பிடித்த ஒரு வீரன் வந்து சங்கரின் அருகில் நெருக்கமாக நின்றான். இன்னும் தயங்கினால், கழுத்தில் கை வைத்து வெளியே தள்ளப்பட்டாலும் தள்ளப்படலாம்.



மெல்ல வெளியே வந்தான் சங்கர்.

அவன் பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்ட போதுகூட இவ்வளவு வேதனையை அனுபவித்ததில்லை. சொந்த மண்ணில் அவன் திடீரென்று வேண்டப் படாதவன் ஆகிவிட்டான்.

'நான் நாட்டுக்கு துரோகம் செய்தேனா ? அப்படியொரு குற்றச்சாட்டை நந்தா சொன்னானா ? ஐயோ... இது என்ன விபரீதம் ? நந்தா நீ எங்கே இருக்கிறாய் ? 18 வருடங்கள் கழித்துத் தாய் மண்ணில் கால் வைப்பவனுக்கு இதுதான் வரவேற்பா ?

'பார்வையற்ற என் தாய் உயிரோடு இருக்கிறாளா? என் அன்பு மனைவி எனக்காகக் காத்திருக்கிறாளா? கடைசியாகப் பேசியபோது, அவள் கருவுற்றிருந்ததாகச் சொன்னாளே... அந்தக் குழந்தை... அந்தக் குழந்தை... முதன் முதலாக என் குழந்தையைப் பார்க்கப்போகிறேன்...'

தன் மனைவியைத் தொடர்புகொள்ள ஆசை கொண்டு, நினைவில் இருந்த பழைய தொலைபேசி எண்ணுக்கு பலமுறை டயல் செய்து பார்த்தான் சங்கர். அப்படியொரு எண் உபயோகத்தில் இல்லை என்று இயந்திரக் குரல் மறுபடி, மறுபடி சலிப்புடன் சொல்லி விட்டது.

கடந்த 18 நீண்ட கொடிய வருடங்களில் அவனுடைய சிறகுகள் ஒவ்வொன்றாக உதிர்ந்து கொண்டே வந்த நேரத்தில், உலகில் எத்தனையோ வியக்கத்தக்க மாற்றங்கள் நேர்ந்துவிட்டதை கவனித்தான் சங்கர்.

அவன் தன் கையிருப்பைச் சரிபார்த்தான். சிறைக் கூடங்களில் அவனுக்குக் கிடைத்த கூலிகளை இந்தியப் பணமாக மாற்றியிருந்ததில் 10 ஆயிரத்திற்கும் குறைவான பணம் கைவசம் இருந்தது.

டில்லியின் அந்த நவீன பல்பொருள் அங்காடியில் நுழைந்து, தன் குழந்தைக்காக எளிமையான ஒரு செல்போனை வாங்கிக்கொண்டான்.

பில்லுக்கான தொகை கொடுக்கும் இடத்தில் பின்னணியில் ஒரு தொலைக்காட்சி வைக்கப்பட்டிருந்தது. அதில் ஏதோ ஒரு செய்தியறிக்கை ஒளிபரப்பாகி கொண்டிருந்தது. தொழிலதிபர்கள் கருத்தரங்கு போன்ற அமைப்பு ஒன்றில், அமைச்சர் ஒருவர் மைக் பிடித்து பேசிக்கொண்டிருக்க, கேமரா கூடியிருந்தவர்களை நோட்டமிட்டது.

உஷாரானான் சங்கர். இரண்டாவது வரிசையில், மூன்றாவதாக கோட் அணிந்து உட்கார்ந்திருப்பது யார்? நந்தாதானே?

அவன் உன்னிப்பாகப் பார்க்கும் முன், சட்டென்று கோணம் மாறிவிட்டது. பரபரப்பானான் சங்கர்.

கருத்தரங்கு எங்கே நடக்கிறது? இதே தலைநகரில் தானா?

அந்தத் தொலைக்காட்சி சேனலில் அலுவலகம் கனாட் பிளேசில் இருந்தது. அவனைப் பார்வையாளர் பகுதியில் அமரவைத்தனர். செய்திப் பிரிவைச் சேர்ந்த ஒரு பெண் வந்து சந்தித்தாள்.

"சிறு தொழிலதிபர் கருத்தரங்கில் என்னுடைய பழைய நண்பனைக் கவனித்தேன். அவனைச் சந்திக்க விரும்புகிறேன். அந்தக் கருத்தரங்கு எங்கே நடக்கிறது?"

"ஏசியா வில்லேஜில், சிரிபோர்ட் வளாகத்தில் நடக்கிறது சார்!"

"நன்றி!"

வேகமாக வெளியே வந்து ஆட்டோ பிடித்தான் சங்கர்.



'நந்தா... என்னைப்பற்றி நீ அவதூறு சொன்னதாகச் சொன்னார்களே... உண்மைதானா? உன்னையே நான் சந்திக்கப்போகிறேனடா?'

சென்னை -

கட்டிலில் குப்புறப் படுத்திருந்தாள் மேகா. செல்போனை காதில் அழுத்திக்கொண்டிருந்தாள். முகத்தில் சந்தோஷம் பொங்கியிருந்தது.

எதிர்முனையில் வினோத்...

"ஏய்... என்ன பண்ணிட்டிருக்கே?" என்று அவன் குரல் கிசுகிசுப்பாக ஒலித்தது.

"ஜாலியாப் படுத்திருக்கேன்... நீ?"

"ஒரு ஆபீஸ்ல வெயிட்டிங் ரூம்ல உக்காந் திருக்கேன்!"

"எங்கே?"

"சென்னையிலதான்..."

"அடப்பாவி... ஊருக்கு வந்துட்டு என்னைப் பாக்காமப் போயிடுவியா?"

"ஒரு இன்டர்வியூவுக்காக வந்திருக்கேன் மேகா... என்னைக் கூப்பிடறதுக்காகக் காத்திட்டிருக்கேன். உன்கிட்ட பேசினா ஒரு உற்சாகம் கிடைக்கும்; அதுக்காகப் பேசினேன்!"

"என்ன இன்டர்வியூ?"

"படிச்சு முடிச்சாச்சு... அடுத்தது வேலைக்கான வேட்டையை ஆரம்பிக்கணும் இல்ல?"

"அதான் எங்கப்பாகிட்ட வேலையும், மகளும் தருவீங்களான்னு மொத சந்திப்புலயே கேட்டியே... அவர் தந்துட்டுப் போறார்!"

"எதை ?"

"உனக்கு எது முக்கியமோ அதை !"

"கேட்டு வாங்கறது ஒண்ணு; எடுத்திட்டுப் போறது ஒண்ணு !"

"எப்ப எடுத்திட்டுப் போகப்போறே ?"

"கழுதை... மொதல்ல படிப்பை முடி... நீ பாண்டிச்சேரிக்கு வர்றதா சொன்னது என்னாச்சு ?"

"உங்க ஊர் வீதில சைக்கிள்ல ரவுண்டு போறது எனக்கு ரொம்பப் பிடிக்கும். அழைச்சிட்டுப் போவியா ?"

"யார் கிட்ட மேகா இவ்வளவு ஜாலியாப் பேசிட்டிருக்கே ?"

தடக்கென்று அனுசூயாவின் குரல் மேகாவைக் கலைத்தது.

"ஆல் தி பெஸ்ட் டியர் !" என்று போனை வைத்தாள்.

"ஏன் மேகா போனை வெச்சிட்டே ?"

"பேசி முடிச்சாச்சு அம்மா... அதான்," என்று படுக்கையிலிருந்து புரண்டு எழுந்தாள் மேகா.

அம்மாவிடம் வினோத்தைப்பற்றிச் சொன்னால், கோபிக்க மாட்டாள் என்று அவளுக்குத் தெரியும்; ஆனாலும், காதலில் எப்போதுமே ரகசியங்கள்தான் சுவாரஸ்யமானவை.

ச்சே... போனை கட் பண்ணுவதற்கு முன்னால், எந்த ஆபீசில் இன்டர்வியுவுக்காக உட்கார்ந்திருக்கிறான் என்று கேட்டிருந்தால், அங்கே போய் திடீரென்று நின்று, வினோதை ஆச்சரியப்படுத்தி இருக்கலாம்...

"அப்பா எப்ப டில்லிலேர்ந்து திரும்பறதா சொன்னாரும்மா ?"



"கருத்தரங்குல உங்கப்பா கிட்ட சில முக்கியமான பொறுப்புகளைக் கொடுத்திருக்காங்களாம்... எப்படியும் மூணு நாள் ஆகும்னு சொன்னாரு," என்றாள் அனுசூயா, மேகாவின் நெற்றிப் பொட்டை சரி செய்துகொண்டே.

"அம்மா வினோதைப்பத்தி நீ என்னம்மா நெனைக்கறே ?"

திடீரென்று மேகா இப்படிக் கேட்டதும், வியப்பானாள் அனுசூயா...

"வினோதா ? எந்த வினோத் ?"

"என்னை ஊட்டி ஏரிலேர்ந்து காப்பாத்தினாரே..."

"ரெண்டு வருஷமாச்சே மேகா திடீர்ன்னு இப்ப எதுக்கு அவனைப்பத்திக் கேக்கறே ?"

அனுசூயாவின் கன்னத்தில் கன்னம் இழைத்துக் கொண்டாள் மேகா...

"நான் காலேஜ் தோழிங்களோட ஒரு அருவிக்கு பிக்னிக் போனேனே... ஞாபகம் இருக்காம்மா ?"

"ஆமாம் !"

"அப்ப வினோதை மறுபடி பாத்தேன்மா !"

"அங்கே வந்திருந்தானா ?"

"நான் கால் வழுக்கி அருவிலேர்ந்து தவறி விழுந்துட்டேம்மா... அப்பவும் வினோத்தான் காப்பாத்தினாரு !"

"என்னது ?" பதறினாள் அனுசூயா... "அருவிலேர்ந்து விழுந்தியா ? ஏன் இதை மொதல்லயே சொல்லலே ?"

"அப்பாவும், நீயும் எம்மேல உயிரையே வச்சிருக்கீங்கன்னு தெரியும்; இப்படி எக்கச்சக்கமா டென்ஷனாவீங்கன்னும் தெரியும்.. அதான் சொல்லல !"

மெல்ல மேகாவின் முகத்தை நகர்த்தினாள் அனுசூயா...

"ஒண்ணும் அடிகிடி படலியே..."

"அதெல்லாம் ஒண்ணுமில்லேம்மா... தண்ணில குதிச்சு வினோத் என்னை வெளியே இழுத்துட்டாரு... இன்னொரு விஷயம் சொன்னா ஆச்சரியமாயிடுவே... வினோதோட அப்பா யாரு தெரியுமா? ராம்குமார்... அப்பாகூட ஆர்மில இருந்தவரு !"

மேகாவை உன்னிப்பாகப் பார்த்தாள் அனுசூயா. வினோதைப்பற்றி பேசியபோது மேகாவின் முகத்தில் ஒளிர்ந்த வெட்கத்தை அவள் தவற விடவில்லை.

"ராட்சஸி... அவ்வளவு ரகசியமா இருக்கத் தெரியுமா உனக்கு ?"

மேகாவின் முகம் மெலிதாக சிவந்தது.

"அப்பப்ப கிசுகிசுன்னு பேசிட்டிருக்கறது அந்த வினோத்கூடத்தானா ?"

"ம்ம்..."

"என்னைத்தான் தள்ளிவச்சிருக்கே; உங்கப்பாகிட்ட யாவது சொல்லிட்டியா ?"

"சொல்லல... இப்ப உன்கிட்ட ஏன் சொல்றேன்னு கேக்க மாட்டியா ?"

"சொல்லு !"

"வினோத் சென்னைக்கு வந்திருக்காரு... நம்ம வீட்டுக்கு வரச்சொல்லலாம்மா ?"



"லவ்வா ?"

"போம்மா... நானே மெது, மெதுவா சொல்லணும்ன்னு இருக்கேன். இப்படி பொடக்குன்னு கேக்காதே... வினோத்தை வரச்சொல்லவா ?"

"நந்தா இல்லியே..."

"நீ மொதல்ல பாரேன்..."

"வரச்சொல்லு !"

பரபரப்பானாள் மேகா. செல்போனில் வினோதின் எண்ணை டயல் செய்யலானாள்.

புதுடில்லி -

சிரிபோர்ட் அரங்கத்தின் பெரிய மைதானம். கருத்தரங்கு முடிந்து எல்லாரும் வெளியே வரப்போகிற வாசலைப் பார்த்தபடி அமர்ந்திருந்த சங்கர், நந்தாவுக்காகக் காத்திருந்தான்.

★ ★ ★

# 13

புதுதில்லியின் வானம் மேகமற்று நீலமாயிருந்தது. வெயில் சற்றே கடுமையாக இருந்தது.

அரங்கத்தின் உள்ளே முழுவதுமாக குளிரூட்டப்பட்டிருந்ததால், வெயிலின் ஊசிக் குத்தல்கள் நந்தாவைத் தொடவில்லை. ஆனால், அவன் கவனம் எதனாலோ கருத்தரங்கிலிருந்து சிதறியிருந்தது. உள்ளுக்குள் இனம் புரியாத ஒரு படபடப்பு அவனை உறுத்திக்கொண்டிருந்தது.

மேகாவுக்கு ஏதாவது பிரச்னையா அல்லது அனுசூயாவுக்கு ஏதாவது துன்பமா? எதனால் இந்தப் படபடப்பு? அந்த சிறுதொழிலதிபர் கருத்தரங்கின் மதிய இடைவேளை நேரத்துக்காக அவன் தவிப்புடன் காத்திருந்தான்.

ஒருவழியாக இடைவேளைக்கான அறிவிப்பு வந்தது.

சிரி போர்ட் அரங்கத்தின் வெளியே வருவதற்கு முன் வீட்டுக்கு போன் செய்தான் நந்தா...

"ஹாய், அப்ஸ்!" என்றாள், மேகா.

"எப்படிடா இருக்கே?" கவலையுடன் கேட்டான் நந்தா.

"நீங்க ஜாலியா படுத்துக்கவேண்டிய அம்மா மடில நான் படுத்துக்கிட்டிருக்கேன்... அப்பா நீங்க ஊருக்கு வந்ததும் உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் சொல்லப்போறேன்!"



அவள் குரலில் தெறித்த உற்சாகம் அவனைத் தொற்றிக்கொள்ளவில்லை...

"அம்மா எப்படியிருக்காங்க?"

"உங்க செல்ல தேன்சிட்டுகிட்ட நீங்களே பேசுங்க!"

மேகாவிடமிருந்து போன் கைமாறி, மறுமுனையில் அனுசூயாவின் குரல் ஒலித்தது...

"டில்லி எப்படியிருக்கு, நந்தா?"

அவள் குரலிலும் சந்தேகப்படும்படியான தொனி இல்லை.

"நான் நல்லா இருக்கேன், அனு... நீங்க ரெண்டு பேரும்?"

"இங்க ஒண்ணும் பிரச்னையில்ல, நந்தா... இந்த வாலை வச்சிக்கிட்டு தனியா சமாளிக்கறதுதான் கஷ்டமா இருக்கு... இப்ப புதுசா இதுக்கு ஒரு தோஸ்த்து வேற கெடைச்சிருக்... ஆ... கிள்ளாதடி சனியனே... மேகாவே நேர்ல சொல்றாளாம்... என் வாயைப் பொத்தறா... எப்ப வருவீங்க?"

"இன்னும் ரெண்டு நாள்ல வந்துடுவேன்னு நெனைக்கறேன்!"

நிம்மதியாகி போனை அணைத்தான் நந்தா. வாட்சைப் பார்த்தான். தென்னிந்திய உணவகத்தில் இப்போது போனால், உணவு கிடைக்கும்.

தொழில்முறை நண்பர்களிடம் புன்னகையுடன் விடைபெற்று வெளியே வந்தான் நந்தா.

சற்று உயரமான இடத்தில் நின்றபடி வெளியேறும் ஆட்களை பார்வையால் மேய்ந்தான் சங்கர்.

அதோ, அதோ நந்தா.

பரபரப்பானான் சங்கர்.

தென்னிந்திய ஹோட்டலைத் தேடி சாலையைக் கடக்கும் இடத்திற்கு நந்தா வந்தபோது, அவனைப் பின்னாலிருந்து யாரோ தட்டுகின்றனரோ என்று திரும்பினான்.

நின்றிருந்தவனை சட்டென்று அவனுக்கு அடையாளம் புரியவில்லை.

"யாரு?" என்றான்.

நந்தாவை சட்டென்று கட்டிப் பிடித்தான் சங்கர்... "என்னை மறந்துட்டியாடா? உன்னோட சங்கர்!" என்றான்.

ஹைவோல்டேஜ் மின்கம்பியைத் தொட்டு விட்டவன் போல் அதிர்ந்தான் நந்தா...

"ச... ச... சங்கர்?" என்றான்...

"நீ... நீ... எப்... எப்படி...? உன்னை அவங்க துப்பாக்கியால சுடலை?"

"செத்திருப்பேன்னு நெனைச்சிட்டியா? பிழைசிட் டேன்டா... பாகிஸ்தான் சிறையில் 18 வருஷத்துக்கு மேல என்னை அடைச்சிவச்சிருந்தாங்க... அந்த விவரத்தை எல்லாம் உன்கிட்ட விவரமாப் பேசனும்டா... உன் கருத்தரங்கு எப்படா முடியும்?"

திகைப்பிலிருந்து மீள முடியாமல் சங்கரை வெறித்துப் பார்த்தான் நந்தா. அடி வயிற்றில் கலக்கம் குடிகொண்டிருந்தபோது, முகத்தில் பழைய நண்பனைப்



பார்த்த உற்சாகத்தைக் காட்டிக்கொள்ள முடியாமல் தவித்தான், பொய்யாகப் புன்னகைத்தான்...

"சாப்பிட்டியா சங்கர்?" என்றான்.

"இனிமேத்தான்!"

"வா... சேர்ந்து சாப்பிடுவோம்!"

சாலையைக் கடக்கும்போது, உணவகத்தில் மேஜையைப் பிடிக்கும்போது, உணவை ஆர்டர் செய்தபோது எல்லா நேரத்திலும் நந்தாவுக்கு உள்ளே கணக்கு ஓடிக்கொண்டேயிருந்தது.

பூமியில் புதைந்துவிட்டதாகவே அவன் தீர்மானமாய் நினைத்திருந்த சங்கர் எங்கிருந்து தடக்கென்று இப்படி எதிரே வந்து நிற்கிறான்? இந்த ஆபத்தைத்தான் உள்மனது வெகுநேரமாக எச்சரித்துக்கொண்டிருந்ததா?

"நந்தா... எங்க வீட்டுக்கு போன் பண்ணிப் பார்த்தேன்... அந்த நம்பரே மாறிடுச்சாம்... எங்கம்மாவும், மனைவியும் எங்கே இருக்காங்கன்னு உனக்குத் தெரியுமாடா?"

நந்தாவுக்குப் புரையேறியது. கண்களில் கண்ணீர் திரண்டது.

'உன் ஆசை மனைவி இப்போது என்னுடன்தான் வாழ்கிறாள்!' என்று சொன்னால், இவனால் எப்படித் தாங்க முடியும்? பதில் சொல்லாமல் இருப்பதற்காக சற்று நேரம் தண்ணீரை வாயில் வைத்திருந்தான் நந்தா.

"சங்கர்... இங்கே நாம எதுவும் பேச வேணாம்!"

"நந்தா... ராணுவ ஆபீஸ் போயிருந்தேன்டா... என்னை துரோகின்னு வாய் கூசாம சொல்றாங்க... கேட்டா, நீதான் அப்படிக் குற்றம் சாட்டினதா சொல்றாங்க... நம்பவே முடியலை... என்னடா ஆச்சு?"

சங்கர் பதைப்புடன் கேட்க, கைக்குட்டையை எடுத்து தன் முகத்தை அழுந்தத் துடைத்துக்கொள்வது போல் தன் அதிர்ச்சியை ஒளித்தான் நந்தா. அடுத்தடுத்து சங்கர் கேட்கப்போகும் கேள்விகளுக்கு பதில்களைத் தயார் செய்ய அவனுக்கு நேரம் வேண்டும்...

"சங்கர்... இது வெளியிடம்; நாம பேசறதை நூறு காது கேட்டுட்டிருக்கும்... இங்கே எதுவும் பேச வேணாம்ன்னு சொன்னேனே... சாப்பிட்டதும், நான் தங்கியிருக்கற ஹோட்டலுக்குப் போயிடுவோம்... அங்க எல்லாம் பேசலாம் !"

சாப்பிட்டு முடித்து டாக்ஸியில் பயணம் செய்த போதும் எதுவும் சொல்லவில்லை நந்தா. ஆனால், என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானித்துவிட்டான்.

கனாட் சர்க்கிளில் இருந்த அந்த ஐந்து மாடி ஹோட்டல் வாசலில் டாக்ஸி நிறுத்தத்துக்கு வந்தது. உள்ளே நுழைந்தனர்.

"இங்கேயா தங்கியிருக்கே நந்தா ?"

"ம்... சங்கர் டாக்ஸியை வெயிட் பண்ணச் சொல்லேன். அஞ்சு நிமிஷத்துல வந்திடுவேன்னு சொல்லு !"

சங்கர் டாக்ஸியைத் தேடிப்போக, அவசரம், அவசரமாக ரிசப்ஷன் கவுன்ட்டருக்குப் போனான் நந்தா.

டாக்ஸியோட்டியிடம் பேசிவிட்டு, சங்கர் திரும்பி வந்தபோது, நந்தாவின் விரலில் சாவி சுழன்றுகொண்டிருந்தது.

"வா... மூணாவது மாடிலதான் ரூம் !"

"ஏன் என்கிட்ட சரியா முகம் கொடுத்தே பேச மாட்டேங்கறே, நந்தா ?"



"சங்கர்... செத்தே போயிட்டான்னு நெனைச்சிருக்கற ஒருத்தன் பல வருஷம் கழிச்சு திடீர்ன்னு எதிர்ல வந்து நின்னா, எவ்வளவு பெரிய அதிர்ச்சியா யிருக்கும் ! நீ சங்கர்தானான்னு மனசு சந்தேகப்பட்டுக்கிட்டே இருக்கு... உண்மையான சந்தோஷத்தோட உன்னைக் கட்டிப் பிடிச்சுக்கக்கூட முடியல !"

லிப்ட் மூன்றாவது மாடியில் அவர்களை உமிழ்ந்தது.

காரிடாரின் இறுதியில் இருந்த அறைக் கதவை திறந்தான் நந்தா உள்ளே நுழைந்ததும், சங்கரை அப்படியே கட்டிப் பிடித்துத் தூக்கி, சுழற்றினான்.

சங்கர், திகைத்தான். அறைக்கு வெளியே இருந்தவரை ஒரு இடைவெளி விட்டே பழகிக்கொண்டிருந்த நந்தா, தனிமை கிடைத்ததும், தன் உணர்ச்சிகளைத் தயக்கமின்றி வெளிப்படுத்துகிறான் என்று புரிந்தது.

"ஏ, விடுடா... நான் அழுக்கா இருக்கேன்... உன் டிரஸ்ஸெல்லாம் வீணாயிடப்போகுது !" என்று பதறினான்.

"சங்கர்... இப்ப கருத்தரங்கத்துக்கு நான் ஓடணும்... இங்கேயே படுத்து ஓய்வெடு... நான் சாயந்திரம் சீக்கிரமே வந்துடறேன்... நாம சேர்ந்து பீர் சாப்பிடலாம்... சாப்பிடுவே இல்ல ?"

"பாகிஸ்தான் ஜெயில்ல அதெல்லாம் கொடுக்கல, நந்தா !"

"பாகிஸ்தான்ல உனக்கு என்னென்ன ஆச்சுன்னு நிதானமாக் கேக்கணும்டா... ஆனா, இப்ப எனக்காக கருத்தரங்கத்துல எல்லாரும் காத்திருப்பாங்க !"

"நந்தா... நான் துடிச்சிட்டிருக்கறது வேற ஒண்ணைத் தெரிஞ்சுக்கறதுக்காக... எங்கம்மா ?"

கண்களை விரல்களால் அழுத்திக்கொண்டான் நந்தா...

"இறந்துட்டாங்க, சங்கர் !"

"ஐயோ..."

சங்கரின் முதுகு அழுகையில் குலுங்கியது. மெல்ல நிமிர்ந்தான்.

"அனுசுயாவை அப்புறம் பாத்தியா, நந்தா ?"

எந்த அணுகுண்டை எதிர்பார்த்துக் கொண்டிருந்தானோ, அது மடியில் விழுந்துவிட்டது.

சங்கரைப் பார்க்காமல் ஜன்னலுக்கு வெளியே விரையும் டில்லிப் போக்குவரத்தைப் பார்த்தான் நந்தா...

"உங்கம்மா செத்தப்போ, துக்கம் விசாரிக்கப் போயிருந்தேன். அனுசுயாவை அப்பப் பாத்ததுதான், சங்கர்... மறுபடி போன போது, அவங்க அங்கே இல்ல... எங்கே போனாங்கன்னு யாருக்கும் தெரியல !"

ஒவ்வொரு பொய் வார்த்தையையும் உதிர்த்தபோது, நந்தாவின் நெஞ்சுக்கூடு உதிர்த்துவிடுவதுபோல் நடுங்கியது.

திகைத்து சடக்கென்று நந்தாவைப் பிடித்துத் திருப்பினான் சங்கர்...

"என்னடா சொல்றே ? என் மனைவி உயிரோட இருக்காளா, இல்லியான்னுகூட உனக்குத் தெரியாதா ?"

தன்னை நிதானப்படுத்திக்கொண்டு சங்கரைக் கண்ணுக்குள் பார்த்தான் நந்தா...

"தெரியாது, சங்கர்... நான் சாயந்திரம் வந்ததும் நிதானமாப் பேசலாம்டா !"

"இன்னும் ஒரே ஒரு கேள்விக்கு பதில் சொல்லிட்டுப் போ, நந்தா... பாகிஸ்தான்லேர்ந்து நாம பேசினபோது, அனு கர்ப்பமா இருந்தாளே... எனக்குப் பொறந்தது



ஆணா, பெண்ணாடா ? அதுகூடத் தெரியாத அப்பனா இருக்கேன்டா !"

அழுகையுடன் கலந்து சங்கரின் குரல் வந்தது. துப்பாக்கிகளுக்குக்கூடக் கலங்காத சங்கரா இப்படி உடைந்துபோய்விட்டான் ? நந்தாவுக்கும் பேச்சு வராமல் கலக்கமாயிருந்தது.

"பெண் குழந்தை, சங்கர்... அந்தக் குழந்தையையும், உன் மனைவியையும் நான் எவ்வளவோ இடங்கள்ல தேடிப் பாத்துட்டேன், அவங்க கிடைக்கல !" என்றான் நந்தா தடுமாறும் குரலில்.

அதிர்ந்து போயிருந்தான் சங்கர்...

அவன் குடும்பத்தின் இழைகள் எல்லாமே அறுந்து விட்டனவா ? நந்தாவின் பாக்கெட்டில் இருந்த செல்போன் ஒலித்தது, எடுத்துப் பேசிவிட்டு அவன் பரபரப்பானான்.

"நான் புறப்பட்டே ஆகணும், சங்கர்... ஓய்வெடு... சீக்கிரம் வரேன் !"

"உன் மனைவி, குழந்தைங்க, நந்தா ?"

வாட்சைத் திருப்பிக்காட்டினான் நந்தா...

"சஸ்பென்ஸோடக் காத்திட்டிரு... ஈவினிங் வந்து சொல்றேன் !"

சட்டென்று சங்கரைத் தட்டிக்கொடுத்துவிட்டு வெளியேறிவிட்டான் நந்தா.

கட்டிலில் படுத்து வெகுநேரம் விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தான் சங்கர்...

'இந்திய மண்ணில் எனக்கு யாருமே இல்லை என்று நான் மனம் உடைந்துபோக வேண்டாம். என் ஆருயிர் நண்பன் நந்தா இருக்கிறான். அவன்தான் என்மீது புகார்

கொடுத்தான் என்று ராணுவத்தில் சொல்வது தப்பாகத் தான் இருக்க முடியும். அவனுடைய உதவி கொண்டுதான் என் மனைவியையும், மகளையும் நான் தேடிப் பிடிக்க வேண்டும்..."

சங்கரின் மனதில் எண்ணங்கள் நிலையில்லாமல் தறிகெட்டு ஓடின. மனதை திசை திருப்ப சிறிது நேரம் தொலைகாட்சியைப் போட்டு இந்திய நிகழ்ச்சிகளை மேய்ந்துகொண்டிருந்தான்.

வெளியே மெல்ல வெளிச்சம் விலகியது.

நந்தாவை சந்திக்கும் நேரம் நெருங்கிவிட்டதென்று சங்கர் குளித்தான்; புத்துணர்ச்சியுடன் காத்திருந்தான்.

மாலை முடிந்து இருட்டியது.

நந்தா, சீக்கிரம் வாயேன்... சங்கர் தவிப்புடன் காத்திருக்க...

ஒரு வழியாக, இரவு ஒன்பது மணிக்கு கதவு தட்டப்பட்டது.

★ ★ ★



# 14

நந்தாவை எதிர்பார்த்து, புத்துணர்ச்சியுடன் கதவைத் திறந்த சங்கர் அங்கே ஹோட்டல் பணியாளரைப் பார்த்ததும் ஏமாற்றமடைந்தான்.

வந்தவன் அகலமாகப் புன்னகைத்தான்...

உங்கள் இரவு உணவை அறைக்கே கொண்டுவரவா அல்லது கீழே உணவு விடுதிக்கு வருவீர்களா?" என்று இந்தியில் கேட்டான்.

"நான் என் நண்பனுக்காகக் காத்திருக்கிறேன். அவன் வந்ததும் உணவுக்கு ஆர்டர் கொடுக்கிறேன்," என்றான் சங்கர்.

"காத்திருக்கும் நேரம் பீர் அல்லது விஸ்கி?"

மாலை நிதானமாக ஒரு பீரை உறிஞ்சிக் கொண்டே பேசலாம் என்று நந்தா சொன்னது நினைவுக்கு வந்தது.

"அதுவும் என் நண்பன் வந்தபின்தான்..."

"நல்லது சாப்," என்று அவன் விலகிப் போனான்.

நந்தா... சீக்கிரம் வருவதாகச் சொன்னாயே... ஏன் இவ்வளவு தாமதமாகிறது? இங்கே ஹோட்டல் அறையில் காத்திருப்பதைவிட ஒழுங்காக சிரிபோர்ட் அரங்கத்துக்கு வெளியே காத்திருக்கலாமோ!

'நந்தா வந்ததும், அவனுடன் உட்கார்ந்து என் குடும்பத்தைக் கண்டுபிடிப்பது பற்றி தெளிவாகத் திட்டமிட்டுக்கொள்ள வேண்டும்... ச்சே... அவசரத்தில் நந்தாவின் தொலைபேசி எண்ணை வாங்கிக்கொள்ளாமல் போய்விட்டேனே... வாங்கியிருந்தால், தொடர்பு கொண்டாவது பேசியிருக்கலாம்!'

இரவு பத்து மணிக்குமேல் பொறுமையிழந்தான் சங்கர்.

அறையில் நந்தாவின் டைரி, குறிப்பேடு ஏதாவது இருக்கலாம்... அதில் அவனுடைய தொலைபேசி எண் கிடைக்கலாம். மற்றவர் பொருட்களை அவர்கள் இல்லாதபோது, தொடுவதும், கையாள்வதும் தவறு என்ற சின்னத் தயக்கம் இருந்ததால், அதுவரை அலமாரியைத் திறக்காமலேயே இருந்தவன் திறந்து பார்த்ததும், அதிர்ந்தான்.

நந்தாவின் உடைகள் ஒன்றுகூட அங்கே இல்லை. அறையின் மற்ற எல்லாப் பகுதிகளிலும் தேடினான். அவன் கொண்டு வந்திருந்த பொருட்களைத் தவிர வேறு எதுவும் அந்த அறையில் இல்லை. நந்தாவின் பயணப்பெட்டி எங்கே? மற்ற உடைமைகள் எங்கே?

ஒருவேளை வேறு அறையில் அவன் தங்கியிருக்கிறானா?

பரபரப்பான சங்கர் கீழே இறங்கிவந்து ரிசப்ஷனில் விசாரித்தான்...

"மிஸ்டர் நந்தா என்று இங்கே எந்த அறையும் பதிவாகவில்லையே சார்?"

"நான் இப்போது தங்கியிருக்கும் அறை நந்தா என்ற பேரில்தானே இருக்க முடியும்?"



பதிவேட்டைப் புரட்டி அவன் காட்டினான்... "இன்று மதியம் சங்கர் என்ற பெயரில்தான் அந்த அறை எடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு நாட்களுக்கான வாடகை முன்பணமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் நாளை வரை இங்கே தங்கிக்கொள்ளலாம், சார்!"

குழம்பினான் சங்கர்.

ஹோட்டல் பதிவேட்டில் ஏதோ தவறு நடந்து விட்டது என்றுதான் முதலில் நினைத்தான். அப்புறம் மேனேஜரிடம் பேசியபோது, நந்தா மதியம் அவனுடன் வந்த நேரத்தில்தான் அறையை எடுத்திருக்கிறான் என்பது புரிந்தது.

தன் அறை என்று சொல்லி மாலை வரை தங்கச்சொன்னானே... புதிதாக எதற்கு அறை எடுத்திருக்கிறான்? ஒருவேளை அலுவலக நண்பர்களுடன் அவன் தங்கியிருப்பதால், தனக்கென தனி அறை பிடித்துக்கொடுத்திருக்கிறானா? அப்படித்தான் இருக்கும்.

அப்போது அந்த ஹோட்டலுக்குள் நுழைந்த வடக்கத்திய நபரைப் பார்த்ததும் சங்கரின் முகத்தில் ஒரு நிம்மதி வந்தது. இவர்கூட கருத்தரங்கில் கலந்துகொண்டவர்தானே!

அவரை மறித்துத் தன்னை அறிமுகம் செய்து கொண்டான்.

"கருத்தரங்கு இன்னும் முடியவில்லையா?" என்று விசாரித்தான்.

அவர், அவனை வியப்புடன் பார்த்தார்...

"கருத்தரங்கு மாலை ஐந்து மணிக்கே முடிந்து விட்டதே!"

"என் நண்பன் நந்தா இன்னும் திரும்பவில்லை. அவனைப்பற்றி ஏதாவது தகவல் தெரியுமா ?"

"இருநூறு பேருக்கு மேல் கலந்துகொள்ளும் கருத்தரங்கு அது. எல்லாரையும் அறிந்து வைத்திருப்பது இயலாத விஷயம். நந்தா என்று யாரையும் எனக்குத் தெரியாது, சார் !"

அதற்குமேல் அங்கே நின்று பேசும் பொறுமையின்றி அவர் சட்டென்று விலகி நடந்துவிட்டார்.

சங்கருக்கு யோசிக்க, யோசிக்கக் குழப்பமாயிருந்தது. ஹோட்டல் பதிவேட்டில் தன் தொலைபேசி எண்ணையோ, முகவரியையோ நந்தா குறித்திருக்கிறானா என்று பார்த்தான்.

இல்லை... சங்கரின் பெயரும், 18 வருடங்களுக்கு முந்திய அவனுடைய பழைய கிராம முகவரியும்தான் அங்கே குறிக்கப்பட்டிருந்தன. என்ன அர்த்தம் இதற்கு ?

'ஏன் நந்தா ? எதற்காக உன் முகவரியைக் கொடுக்காமல் தவிர்த்துவிட்டாய் ? என்னைப் பார்க்காமல் திடீரென்று ஏன் மறைந்துவிட்டாய் ?'

திணறினான் சங்கர். அதே சமயம் அவன் முற்றிலும் நம்பிக்கை இழக்க விரும்பவில்லை. நந்தா எப்போது வேண்டுமானாலும் தடாலென்று வந்து நிற்கலாம்.

'டேய், சங்கர்... உன்னை இங்கே உட்கார வைத்ததையே மறந்துவிட்டு செக்கு மாடு போல் நான் தங்கியிருக்கும் இடத்திற்குப் பழையபடி போய்விட்டேன்டா !' என்று சொல்லிச் சிரிக்கலாம்.

எப்படியானாலும், இந்த அகால இரவில் நந்தாவைத் தேடி எங்கே போகமுடியும் ? காலை கருத்தரங்கு ஆரம்பிக்கும் முன்பே போய்ப் பிடித்தால்தான் உண்டு.



சென்னை -

கண்களில் கறுப்புத் துணி போட்டு மூடிப் படுத்திருந்தாள் அனுசூயா. தூங்கிப் போயிருந்த அம்மாவின் இடுப்பில் காலைத் தூக்கிப் போட்டு கொக்கி போல் வளைத்துப் பிடித்திருந்தாள் மேகா. கையில் வைத்திருந்த ஆங்கில நாவலிலிருந்து தூக்கம் மோதிய கண்கள் நழுவிக்கொண்டேயிருந்தன.

அழைப்பு மணி ஒலித்தது. கடிகாரத்தைப் பார்த்தாள். இரவு மணி பத்தைத் தாண்டியிருந்தது.

"இந்த நேரத்துல எந்த முட்டாள் பெல் அடிக்கிறான் ?" முனகிக்கொண்டே எழுந்தாள் மேகா.

வாசல் கதவைத் திறந்தவள் சந்தோஷத்தில் அதிர்ந்தாள்...

"அப்ப்ப்ப்பா..." என்று கூவினாள்.

'ஹாய்டா' ஈடுபாடில்லாமல் சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தான் நந்தா. யாராலோ துரத்தப்படுபவன் போல் அவன் முகத்தில் பதட்டம். அவசரமாகக் கதவைச் சாத்தினான்.

ஒலி கேட்டு, படுக்கையறையிலிருந்து வெளியே தூக்கக் கலக்கத்துடன் வந்தாள் அனுசூயா. அவனைக் குழப்பத்துடன் பார்த்தாள்...

"மத்தியானம் பேசினப்ப, முக்கியமான வேலை இருக்கு. திரும்பி வர ரெண்டு நாளாகும்ன்னு சொன்னீங்க... திடீர்னு வந்து நிக்கறீங்க ? என்ன நந்தா... உடம்புக்கு ஏதாவது ?" என்று பதறினாள் அனுசூயா. அவன் கழுத்தில் புறங்கையை வைத்துப் பார்த்தாள்.

அந்தக் கையை மெல்ல விலக்கிக்கொண்டே, "நாம நாளைக்குக் காலைல பெங்களூர் கௌம்பறோம்...

தேவையானதை ராத்திரிக்குள்ள 'பேக்' பண்ணிக்குங்க !" என்றான் நந்தா.

"என்னது ? பெங்களூரா ? என்னப்பா திடீர்னு ?"

"சொன்னா சொன்னதைச் செய்... சும்மா கேள்வி கேட்டுத் துளைக்காதே !"

திடீரென்று பொறுமையிழந்து கத்தினான் நந்தா. அவளிடம் அவன் இப்படி மிரட்டிப் பேசியதே இல்லை என்பதால் அதிர்ந்தாள் மேகா.

"நந்தா திடீர்னு புறப்பட்டா, நம்ம கம்பெனியை யார் பொறுப்புல விட்டுட்டுப் போக முடியும் ?" என்று கேட்டாள் அனுசூயா.

"இப்ப நைட் ஷிப்ட் நடக்குது இல்ல ? நான் நேர்ல போய் சூப்பர்வைசர் கிட்ட பேசி, அதுக்கெல்லாம் ஏற்பாடு பண்ணிக்கறேன்," என்று செல்லிவிட்டு கார் சாவியை எடுத்தவன் நின்றான்.

"முன்னே பின்னே தெரியாதவங்க யார்கிட்டயும் என் செல் நம்பரைத் தரவேண்டாம்... புரியுதா ?" என்றான்.

"நந்தா... என்ன பிரச்னை ? எங்ககிட்ட சொல்லக் கூடாதா ?"

"மேல கேள்வி கேக்காம ரெண்டுபேரும் தயாராகுங்க !"

நந்தா விருட்டென்று வெளியேறிப் போவதைப் பார்த்து அனுசூயாவும் மேகாவும் அதிர்ந்து நின்றனர்.

இரவு முழுவதும் உறங்காத சங்கரின் கண்கள் சிவந்திருந்தன.

சிரிபோர்ட் வளாகத்துக்குக் காலையிலேயே வந்துவிட்டான். கருத்தரங்கில் கலந்துகொள்ள வந்திருப்பவர்களை



ஹோட்டல்களிலிருந்து அழைத்து வரும் மினி பேருந்துகளை இயக்குபவர்களுடன் பேசினான். உறுப்பினர்கள் மூன்று வெவ்வேறு ஹோட்டல்களில் தங்க வைக்கப்பட்டிருப்பதை அறிந்தான். கருத்தரங்கச் செயலாளரை சந்தித்தான்.

டையை சரி செய்துகொண்டு அவர், அவனை அமரச் சொன்னார்.

தன்னை நந்தாவின் நண்பன் என்று அறிமுகம் செய்துகொண்டான். முந்தின நாள் சந்தித்த நண்பனை மீண்டும் சந்திக்க விரும்புவதைச் சொன்னான்.

"உங்களுக்குத் தெரியாதா சங்கர் ? நந்தா இங்கே முக்கியமான பொறுப்பில் இருந்தார். திடீரென்று எல்லாவற்றையும் உதறிவிட்டு அவசரமாக நேற்று மதியம் புறப்பட்டுப் போய்விட்டார் !" என்றார்.

ஆச்சரியமானான் சங்கர்.

"நான் அவனுடைய மிக நெருங்கிய நண்பன். 18 வருடங்கள் கழித்து இருவரும் சந்தித்தோம்... கருத்தரங்கு முடிந்து வருவதாகச் சொன்னவன், வராமலேயே போய்விட்டான்... அப்படியானால், அவனுக்கு ஏதாவது அவசர வேலை எதிர்பாராமல் வந்திருக்க வேண்டும். அவனை நான் மறுபடி பார்க்க வேண்டும்... அவனுடைய போன் நம்பர், முகவரி இவை கிடைக்குமா ?"

"ஒரு நிமிடம்..." என்றார். கம்ப்யூட்டரில் ஒரு குறிப்பேட்டைப் பார்த்தார்.

நந்தாவின் எண்ணுக்கு போன் செய்தார்...

"நந்தா... உங்கள் நண்பர் ஒருவர் வந்திருக்கிறார்... உங்கள் முகவரி கேட்கிறார்... தரலாமா ?" என்றவர் சங்கரைப் பார்த்து நிமிர்ந்தார்.

"உங்கள் பெயர் என்னவென்று சொன்னீர்கள் ?"

"சங்கர்... போனை என்னிடம் கொடுங்கள்... நந்தாவிடம் நான் பேசுகிறேன் !"

அவர் போனைத் தராமல் நந்தாவிடம் பேசினார். சங்கரை மேலும், கீழும் பார்த்தார். தொடர்பைத் துண்டித்தார்.

"உங்களுக்கும், நந்தாவுக்கும் ஏதாவது பிரச்னையா சங்கர் ?"

"ஏன் ?" என்றான் குழப்பத்தோடு.

"தன்னைப்பற்றிய எந்த விவரத்தையும் உங்களுக்குத் தரக்கூடாது என்று நந்தா தெளிவாகச் சொல்லிவிட்டார்... மன்னியுங்கள் !"

சங்கர் கண்மூடி நடந்து போய் கல்சுவரில் நேரடியாக மோதிவிட்டதுபோல் அதிர்ந்தான்.

'நந்தாவா... என் நந்தாவா அப்படிச் சொல்லி விட்டான் ?'

அவன் தலை சுற்றியது.

★ ★ ★



# 15

**த**ன்னைப்பற்றிய எந்த விவரத்தையும் சங்கருக்குத் தரக்கூடாது என்று போனில் செயலாளரிடம் நந்தா சொன்னதை நம்ப முடியாமல் தவித்தான் சங்கர்.

எங்கோ, ஏதோ தவறு நடந்திருக்கிறது. பலப்பல நீண்ட வருடங்கள் கழித்து உயிருக்குயிரான நண்பனை சந்திக்கும்போது, அவனைத் தவிர்க்க வேண்டும் என்ற எண்ணம் நந்தாவுக்கு வருமா என்ன ?

முந்தின நாள் தன்னைப் பார்த்ததும் நந்தாவின் முகத்தில் ஆச்சரியத்தை விட அதிர்ச்சிதானே அதிகம் புலப்பட்டது ? இறந்ததாக நினைத்திருந்தவன் திடீரென்று எழுந்து வந்தால், யாராயிருந்தாலும் அதிர்ச்சிதான் தாக்கும் என்று அப்போது சமாதானம் செய்தானே... அது பொய்யா ? ஒருவேளை, நந்தாவின் இறுக்கத்திற்கு பின்னணியில் வேறு காரணங்கள் இருந்திருக்குமோ ?

யோசிக்க, யோசிக்க சங்கருக்குக் குழப்பம் நீங்கி கொஞ்சம் தெளிவாவதுபோல் இருந்தது.

சங்கரை துரோகி என்று உண்மையறியாமல், நந்தா குற்றம் சாட்டியிருக்கலாம். அதைப்பற்றி விளக்கம் கேட்பானே என்று பயந்து விலகி ஓடியிருக்கலாம்.

அட முட்டாள் நந்தாவே... அப்படியே நீ என்னை துரோகி என்று தவறாக நினைத்திருந்தாலும், உன் கருத்தை நான் மாற்றக்கூட வாய்ப்பளிக்காமல் ஏன் ஓடிப்போனாய் ?

நந்தாவின் முகவரியைக் கண்டுபிடிப்பது அவ்வளவு கடினமாக இருக்காது என்று நினைத்தான் சங்கர். ஆனால், கருத்தரங்கில் கலந்துகொள்ள வந்திருந்தவர்கள் தங்கியிருந்த மூன்று ஹோட்டல்களில் சென்று விசாரித்ததில் தோல்வியே மிஞ்சியது.

திடீரென்று நந்தாவின்மீது கோபம் பெருகியது. என்னைப் பார்க்காமல் ஓடிப்போகிறாயா ? போய்க்கொள். என் அனுசூயாவையும், பெயர் தெரியாத என் மகளையும் உன் உதவியுடன் தேடிப் பிடிக்கலாம் என்று நினைத்தேன். நீ உதவி செய்ய மறுத்துவிட்டதால், நான் ஓய்ந்து விடமாட்டேன்... அவர்களைக் கண்டுபிடிப்பதுதான் என் முதல் வேலை.

தன் அறையைக் காலி செய்தான் சங்கர்.

பெங்களூர் -

மல்லேஸ்வரத்தில் அந்த ஹோட்டல் வாசலில் கார் நிறுத்தத்துக்கு வந்தது.

"இங்கேதான் தங்கப்போறோம்... எறங்குங்க..." என்றான் நந்தா.

ஐந்து மணி நேரங்கள் தொடர்ந்து காரை ஓட்டி வந்திருந்ததில் களைத்திருந்தான் நந்தா. விடிவதற்கு முன்பாகவே சென்னையை விட்டுப் புறப்பட்டனர். இடையில் ஒன்றிரண்டு முறை அனுசூயா ஏதோ கேட்க முற்பட்டபோது, பிடிவாதமாக அவளைத் தடுத்துவிட்டான் நந்தா.

எந்த கேள்விக்கும் ஒரே பதில்தான் : 'எம்மேல நம்பிக்கை இருக்கு இல்ல ? நேரம் வரும்போது நானே சொல்லுவேன் !'

மேகாதான் மிகவும் காயப்பட்டிருந்தாள்.



வினோத் பற்றி அம்மாவிடம் எப்படியோ பகிர்ந்துகொண்டுவிட்டாள். அப்பாவிடம் சொல்வதற்காகத் துடிப்பாகக் காத்திருந்தாள். அதற்கு வாய்ப்பே கொடுக்காமல், இப்படி திடீரென்று தடாலடியாக அவர் பெங்களூருக்கு இழுத்து வந்துவிட்டார்.

அவர்களை அறையில் இருக்கச் சொல்லிவிட்டு நந்தா புறப்பட்டு எங்கோ வெளியே போனதும், அனுசூயாவைப் பிடித்துக்கொண்டாள் மேகா...

"என்னம்மா ஆச்சு, அப்பாவுக்கு ? இப்படி நடந்துக்கவே மாட்டாரே... டில்லில யாரையாவது கொலை, கிலை பண்ணிட்டு ஓடிவந்துட்டாரா ?"

அவள் தலையில் பட்டென்று தட்டினாள் அனுசூயா...

"ஏய் லூசு... நானே பதட்டமா இருக்கேன்... கொலை, கிலைன்னு உளறி இன்னும் டென்ஷன் ஏத்தாதே !"

"அப்பா நல்ல மூடுல வருவாரு... வினோத் பத்தி சொல்லலாம்ன்னு நெனைச்சேனே... எல்லாத்தையும் வீணாக்கிட்டாரும்மா !"

மேகாவின் குரலில் வருத்தம் தோய்ந்திருந்தது. அவளை வருடிக்கொடுத்தாள் அனுசூயா...

"ஏன் அவசரப்படறே மேகா ? நிதானமா சொன்னாப் போச்சு... எப்பவும் அந்த வினோத் நெனைப்புதானா ?"

"வினோத் நேத்து வீட்டுக்கு வந்திருந்தாரே... உனக்கு அவரைப் பார்த்ததும் என்னம்மா தோணிச்சு ?"

மேகா அழைத்ததால், வேலைக்கான இன்டர்வியூ முடிந்து அவளது வீட்டுக்கு வந்திருந்தான் வினோத்.

அவனைப் பார்த்ததுமே அனுசூயாவுக்குப் பிடித்துப் போனது.

மரியாதை தெரிந்தவனாக இருந்தான். வாழ்க்கையில் பல உயரங்களைத் தொட வேண்டும் என்று துடிப்புள்ளவனாகத் தெரிந்தான். கலகலப்பாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் புறப்பட்டுப்போனான்.

அவன் இருந்த நேரம் மேகா கள் குடித்தவள் போல் கிறக்கத்துடன் காணப்பட்டதை கவனிக்கத் தவறில்லை அனுசூயா.

"பாத்தா நல்லவனாத் தெரிஞ்சான்... அவனை உன்கிட்ட மாட்டிவிடறதுக்கு என் மனசாட்சி எடம் கொடுக்குமா தெரியலை, மேகா..." என்று புன்னகையுடன் சொன்னாள் அனுசூயா.

"கொன்னுடுவேன்... நான் ஊட்டிக்குப் போனா, அங்க வரான்... நான் அருவில விழுந்தா, அங்க வந்து நிக்கறான். இப்ப பெங்களூருக்கு வரப்போறான்... எனக்கும், அவனுக்கும் எவ்வளவு முடிச்சு போட்டிருந்தா, பிளான் பண்ணாமலேயே திடீர்னு நாம பெங்களூர் புறப்பட்டு வருவோம்?"

"ஆமா, இல்ல? அவனும் இன்னிக்கு பெங்களூர் வருவான் இல்ல?" ஆச்சரியத்துடன் கேட்டாள் அனுசூயா.

"நேத்து கம்பெனில இன்டர்வியூவில தேர்வாயிட்டதை மொதல்ல நம்ம கிட்டதானேம்மா சொன்னான்!"

"எப்பலேர்ந்து பெங்களூர்ல பயிற்சின்னு சொன்னான்?"

"நாளைலேர்ந்து பயிற்சி... இன்னிக்குக் காலை ரயில்ல புறப்பட்டுவரப்போறதா அவன் சொன்னான். நாம அவனுக்கு முன்னாலேயே பெங்களூர் வந்துட்டோம்!"



"ஒருவேளை உங்கப்பாவும், அவனும் இங்கேதான் சந்திக்கணும்னு இருக்கோ, என்னவோ?"

"நான் வினோதைப்பத்தி சொல்றதுக்கு முன்னால, அப்பா மூடை நீதாம்மா மாத்தணும்!"

"அவர் இவ்வளவு இறுக்கமா இருந்ததேயில்ல... என்ன பிரச்சினைன்னு தெரியலையே..." என்று தவிப்புடன் சொன்னாள் அனுசூயா.

அந்த எஸ்.டி.டி., பூத்தின் கதவை சாத்திக் கொண்டான் நந்தா.

டில்லி ஹோட்டல் எண்ணுக்கு போன் செய்தான். அறை எண்ணைச் சொன்னான்.

"அவர் உங்களுக்காகக் காத்திருந்துவிட்டு ஒருமணி நேரத்துக்கு முன்னால்தான் காலி செய்தார், சார்... நீங்கள் கட்டிய முன்பணத்தில் பாக்கி இருக்கும் தொகையைக் கொடுத்த போது வாங்க மறுத்துவிட்டார். உங்கள் முகவரி கொடுத்தால், அனுப்பிவிடுகிறோம், சார்!"

மேற்கொண்டு பேசாமல் தொடர்பைத் துண்டித்தான் நந்தா.

சங்கர், டில்லியிலிருந்து புறப்பட்டுவிட்டானா? தன்னைத் தேடி வந்துகொண்டிருக்கிறானா?

நெருப்புத் துண்டத்தை விழுங்கிவிட்டதைப் போல உணர்ந்தான் நந்தா.

மெல்ல ஹோட்டல் அறைக்குத் திரும்பினான் நந்தா.

ரயில் ஜன்னலுக்கு வெளியே பார்வையைப் பதித்திருந்தான் சங்கர்.

கடந்து போகும் மரங்களும், வயல்களும், குன்றுகளும், தண்ணீர் பரப்புகளும்...

எத்தனை அழகு என் தாய்த் திருநாடு. இந்த மண்ணுக்கா நான் துரோகம் செய்வேன்? பாகிஸ்தான் கேட்ட தகவல்களைக் கொடுத்திருந்தால், நான் இன்னும் முன்பாகவே விடுதலை செய்யப்பட்டிருப்பேனே!

தன் சுகத்தை விட தாய்நாட்டின் ரகசியங்கள்தான் மேலானவை என்று கருதியதால்தானே இத்தனை வருடங்கள் கொடும் சிறைகளில் கழித்தேன்! என்னைப்போய் இந்திய ராணுவமும், என்னுடைய நெருங்கிய தோழனும் துரோகி என்று முத்திரை குத்திவிட்டனரே...

"அவனையறியாமலேயே கண்களில் கண்ணீர் தளும்பியது. அவனுடைய மனைவியும், மகளுமாவது அவனைப் புரிந்துகொள்வரா?"

முகம் தெரியாத மகளுக்காக வாங்கியிருந்த பரிசுப் பொருளை அவன் ஆசையுடன் வருடிக்கொடுத்தான்.

'நீ எப்படி இருப்பாய் மகளே? என்னைப் போலவா? இல்லை, என் அன்பு அனுசூயாவைப் போலவா? உன்னை நான் எங்கே கண்டுபிடிக்கப் போகிறேன்? எப்படிக் கண்டு பிடிக்கப் போகிறேன்? ரயிலே... இன்னும் சீக்கிரமாக என்னைக் கொண்டு தமிழ்நாட்டில் சேர்த்துவிடேன்...'

ரயில் அதன் உச்சபட்ச வேகத்தில் தமிழ்நாடு நோக்கி விரைந்தது.

ஹோட்டல் பால்கனி சுவரில் கையூன்றி வெளியே பார்வையைப் பதித்திருந்தான் நந்தா.

அவன் தோளில் அனுசூயாவின் கை பதிந்தது. திரும்பினான் நந்தா...



"நந்தா... எதுக்கு இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம்? எதையோ மனசுல சுமந்துக்கிட்டு வெளிய சொல்ல முடியாமல் தவிக்கிறீங்க..."

எச்சிலைக் கூட்டி விழுங்கினான் நந்தா...

"அப்படில்லாம் இல்ல, அனு!"

"டில்லி கருத்தரங்கத்துல கலந்துக்கறதுக்காக நீங்க எத்தனை ராத்திரி முழிச்சு உழைச்சீங்கன்னு பக்கத்துலயே இருந்து பார்த்தவ நான். அங்கே முக்கியப் பொறுப்புல இருந்தவர், எல்லாத்தையும் உதறிட்டு, தடால்னு கௌம்பி வந்து நிக்கறீங்கன்னா... நிச்சயமா, அதைவிட முக்கியமான காரணம் இருக்கணும்... எனக்கும், உங்களுக்கும் நடுவுல எந்த ரகசியமும் இல்லைன்னு நெனைச்சிட்டிருக்கேனே... தப்பா நந்தா? என்னைத் தள்ளி வச்சித்தான் நீங்க பாக்கறீங்களா?"

தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தான் நந்தா. கண்களில் கிலி தெரிந்தது.

இந்த அருமையான மனைவியையும், உயிருக்குயிரான மகளையும் திடீரென்று பலி கொடுக்கப்போகிறேனா? படைத்தவனே வந்து கேட்டாலும், அவர்களை அவனுடன் பகிர்ந்துகொள்ள மறுத்திருப்பேனே!

திடீரென்று சங்கர் இவர்களுக்கு எதிரில் வந்து நின்றால் என்ன ஆகும்? முதலில தாலி கட்டியவன் உயிருடன் இருப்பது தெரிந்தால், அனுசூயா எப்படி உணர்வாள்? இரவல் தந்தையிடம் வளர்ந்த மேகா சொந்த அப்பாவைப் பார்த்தால் எப்படி தவித்துப்போவாள்?

"சொல்ல மாட்டீங்களா அப்பா?"

அனுசூயாவையும், தவிப்புடன் தன் முகத்தையே பார்த்துக்கொண்டிருக்கும் மேகாவையும் மாறி, மாறிப் பார்த்தான் நந்தா.

எத்தனை நாட்களுக்கு இவர்களிடம் மறைக்க முடியும்?

"அனு... மேகா... ஒருவேளை என்னைவிட முக்கியமான ஒருத்தர் வந்து உங்களைக் கூப்பிட்டா, என்னைவிட்டுட்டுப் போயிடுவீங்களா?"

'அப்பா யாரைச் சொல்கிறார்? வினோத் பற்றி அறிந்துகொண்டுவிட்டாரா? அவரை விட்டு விட்டு வினோத் பின்னாலேயே போய்விடுவேன் என்று பதறுகிறாரா? அப்படியேயானாலும், அம்மாவையும் அதே போல் கேட்பதன் அர்த்தம் என்ன?' குழம்பினாள் மேகா.

பொறுமையிழந்தாள் அனுசூயா...

"நந்தா... எங்க வாழ்க்கைல அப்படி யார் உங்களை விட முக்கியமான ஆள் திடீர்னு வந்து புகுந்துட முடியும்?"

நெஞ்சைக் கல்லாக்கிக்கொண்டு மெல்ல அந்த வார்த்தைகளை உதிர்த்தான் நந்தா...

"அவன் வந்துட்டான்!"

குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள் அனுசூயா...

"எவன்?" என்றாள்.

"சங்கர்... செத்துட்டான்னு நெனைச்சிருந்தோமே, சங்கர்... அவன் டில்லில என்னைத்தேடி வந்துட்டான் அனு!"

★ ★ ★



# 16

அனுசூயாவுக்கு நந்தா சொன்னது முதலில் புரியவேயில்லை...

"யாரைச் சொல்றீங்க?" என்று மறுபடியும் கேட்டாள்.

"பாகிஸ்தான்காரங்க சுட்டதுல செத்துட்டதாத்தான் எல்லாரும் நெனைச்சிருந்தோம்... ஆனா, அவன் உயிர் பிழைச்சிருக்கான்!"

நந்தா சொல்லச் சொல்ல அதிர்ந்து போன அம்மாவை அணைத்துப் பிடித்துக்கொண்டாள் மேகா...

"நான் போட்டோல பாத்தேனே, அந்த சங்கரா?" என்றாள்.

'ஆம்' என்று தலையசைத்தான் நந்தா.

"இத்தனை நாள் எங்கே இருந்தாராம்?"

நந்தா பார்வையை அவளிடமிருந்து நகர்த்திக் கொண்டு சொன்னான்:

"இந்தியாவுக்கு துரோகம் பண்ணினவன் உடனே நாட்டுக்குத் திரும்பிவர முடியுமா? பாகிஸ்தான்லயே

வாழ்ந்திருக்கான். இப்ப அங்கே என்ன பிரச்னையோ ? திடீர்னு இந்தியாவுக்குத் திரும்பிட்டான். டில்லில என் முகத்தை, 'டிவி'ல பார்த்திருக்கான். விசாரிச்சு என்னைத் தேடிட்டு வந்துட்டான் !"

"அவரைப் பார்த்து பயந்தா கருத்தரங்கைப் பாதில விட்டுட்டு வந்துட்டீங்க ?"

"ஆமா... மேகா... அவன் நாட்டுக்கு துரோகம் பண்ணினது எனக்குத் தெரியும். அதை நான் கர்னல்கிட்ட சொல்லிட்டதால அவனுக்குக் கெடைக்க வேண்டிய பென்ஷன் பணம்கூட கெடைக்கல... அந்த கோபம் என்மேல இருக்கு... நீங்க ரெண்டுபேரும் என்கூட வாழறது தெரிஞ்சா, அவன் நம்மை நிம்மதியா விடமாட்டான்...

"இப்பக்கூட என்னைத்தான் வெறியோடத் தேடிட்டிருக்கான்... நம்ம இடத்தைக் கண்டுபிடிச்சுக்கிட்டு வர அவனுக்கு எத்தனை நாளாயிடப்போகுது ?"

மேகாவின் பிடியிலிருந்த அனுசூயா சற்றே விறைத்தாள். தண்ணீரை எடுத்து கடக், கடக்கென்று குடித்தாள். பின்னர் தெளிவு பெற்றவள் போல் நிமிர்ந்தாள்...

"சங்கரைப் பார்த்ததும், நானும், மேகாவும் அவர் பக்கம் போயிடுவோமோன்னு உங்களுக்கு பயம் வந்துருச்சா நந்தா ?"

அவள் முகத்தைப் பார்க்க முடியாமல் தலை குனிந்தான் நந்தா...

"என்ன இருந்தாலும்..." என்று இழுத்தான்.

"என்ன இருந்தாலும், அவர்தானே மொதல்ல கழுத்துல தாலி கட்டினவருன்னு நெனைச்சு, நான் அவர் பின்னால நாய்க்குட்டி போலப் போயிடுவேன்னு கவலைப்படறீங்களா ? என்னைப்பத்தி இவ்வளவு மட்டமா நெனைச்சிட்டீங்களா நந்தா ?"



அனுசூயாவின் கண்ணோரங்கள் ஈரமாயின.

"அனு..."

"நந்தா... ஒரு பொண்ணோட கழுத்துல தாலி கட்டறதால மட்டுமே ஒருத்தன் முழுமையான கணவன் ஆயிட முடியாது. அவ பக்கத்துல இருந்து சுக-துக்கங்களைக் பகிர்ந்துக்கணும்... தேவையானபோது அவளுக்குப் பக்கபலமா இருக்கணும். எதிர்பார்ப்பில்லாம அன்பை வாரிக்கொட்டணும்... இது அத்தனையையும் கொடுத்தது சங்கர் இல்ல... நீங்கதான் ! சங்கர்கூட நான் வாழ்ந்தது 18 நாள் கூடக் கெடையாது... உங்க கூட 18 வருஷத்துக்கு மேல வாழ்ந்திருக்கேன் நந்தா !"

அனுசூயாவின் ஒவ்வொரு வார்த்தையும் உணர்ச்சிகரமாக ஒலித்தது.

"அவர் தேசத்துக்கு துரோகம் பண்ணினாருன்னு தெரிஞ்சதும், அவங்கம்மாவே அவரை சொந்தமில்லைன்னு மனசுலேர்ந்து தூக்கி எறிஞ்சிட்டாங்க... உங்களைத்தான் கடைசி வரைக்கும் அவங்க மகனா ஏத்துக்கிட்டாங்க... உங்க கையாலத்தான் கொள்ளி வாங்கிக்கிட்டாங்க...

"நானும் மனசார உங்களை என் கணவனா ஏத்துக்கிட்டு இத்தனை வருஷம் வாழ்ந்திருக்கேன்... ஒருநாள் கூட உங்களுக்கு சொந்தமானதுக்காக நான் வருத்தப்படலை... என்னைப் பொறுத்தவரைக்கும் சங்கர்

முடிஞ்சுபோன ஒரு அத்தியாயம்; இனி எந்த சங்கர் வந்தாலும் என் மனசு மாறாது !"

சிலிர்ப்புடன் அவளைப் பார்த்தான் நந்தா.

அவனை நெருங்கி அப்படியே அணைத்துக் கொண்டாள் மேகா...

"அம்மா சொன்ன அத்தனை வார்த்தையும் நானும் சொல்றதுதான் அப்பா... என் உயிர் இருக்கறவரைக்கும், நீங்கதான் எனக்கு அப்பா... பாகிஸ்தான்ல சுகமா இருந்துட்டு, திடீர்னு என்னைத் தேடி வந்து மகள்ன்னு சொந்தம் கொண்டாடப் பார்த்தா, அந்தாளை அசிங்கமாக் கேள்வி கேட்டு வெரட்டியடிப்பேன்... எந்தக் கோர்ட்டுக்குப் போனாலும், அவரால உங்ககிட்டேர்ந்து எங்களை அபகரிக்க முடியாது !"

அப்படியே அனுசுயாவின் மடியில் தலையைப் புதைத்துக்கொண்டான் நந்தா...

'சங்கர்... என்னை மன்னித்துவிடு. நீ வந்து இவர்களைத் தட்டிப் பறித்துப் போய்விடப் போகிறாயே என்ற அச்சத்தில் உன்னைப்பற்றிக் கொஞ்சம் அவதூறாகப் பேச வேண்டியிருக்கிறது !'

"சங்கர் அவ்வளவு சுலபமா விட்டுக்கொடுக்க மாட்டான் அனு. தான் துரோகியில்லன்னு பொய் சொல்லி உங்க மனசை மாத்தப் பார்ப்பான் !"

"யாராலயும் இனிமே என் மனசை மாத்த முடியாது நந்தா !" என்றாள் அனுசுயா.

"என் சொத்து, பிசினஸ் எதை வேணும்ன்னாலும் இழக்கத் தயாராயிருக்கேன் அனு. ஆனா, உங்களை இழக்கத் தயாரில்ல. நாம புதுசா வேற ஊருக்குப் போய் செட்டிலாயிட்டா என்ன ?" தவிப்புடன் கேட்டான் நந்தா.



"வேணாம்... யாருக்காகவோ பயந்து எல்லாத்தையும் விட்டுட்டு, நாம எதுக்கு ஓடணும் ? எங்களை நம்புங்க நந்தா... நீங்க நெனைக்கறமாதிரி நாங்க கோழைங்க இல்ல... எந்தச் சூழ்நிலையையும் தைரியமா சமாளிப்போம்," அவன் தலையை அழுத்திக்கொடுத்தாள் அனுசுயா.

மனம் விட்டுப் பேசியதால், பாரமாக நினைத்ததுகூட ஒன்றுமில்லாததாகப் போய்விட்டதை கவனித்தான் நந்தா. அனுசுயாவும், மேகாவும் என்றைக்கும் அவனைவிட்டு விலகமாட்டார்கள் என்ற தைரியம் வந்ததும், மெல்ல மெல்ல சகஜ நிலைக்குத் திரும்பினான்.

"சங்கரைப்பத்தி யார்கிட்டயும் நாம பேச வேணாம் !" என்றாள் அனுசுயா...

"மேகா... நீ உன் பிரெண்ட்ஸ் கிட்டலாம் பழைய கதைங்களை சொல்லிட்டிருக்காதே !"

"நீ யாரைக் குறிப்பிடறேன்னு புரியுதும்மா... நான் வாயைத் திறக்க மாட்டேன் !"

"அப்ப இன்னிக்கே நாம சென்னைக்குத் திரும்பிடலாம்ன்னு சொல்றீங்களா ?" என்றான் நந்தா.

அவன் முகத்தில் பழைய களை திரும்பியதைப் பார்த்ததும் தான் அனுசுயாவுக்கும், மேகாவுக்கும் நிம்மதி வந்தது.

சற்றே சிணுங்கினாள் மேகா...

"வேணாம்ப்பா... வந்ததுதான் வந்தோம்... ரெண்டு நாள் மைசூர் ஊட்டின்னு ஜாலியா சுத்திட்டுப் போலாம்," என்றாள்.

அனுசுயாவின் நெஞ்சின் அடிவாரத்தில் சங்கர் பற்றிய செய்தி இன்னும் சலசலத்துக்கொண்டிருந்தது. அதை அவள் வலுக்கட்டாயமாக மறக்க நினைத்தாள்...

"இந்தக் கழுதை உங்ககிட்ட ஒரு விஷயத்தை சொல்லணும்ன்னு துடிச்சிட்டிருக்கு நந்தா," என்று பேச்சை மாற்றினாள்.

"என்ன ?"

நாவால் உதடுகளை ஈரம் செய்து கொண்டாள் மேகா...

"வினோதை உங்களுக்கு ஞாபகம் இருக்காப்பா ?" என்று ஆரம்பித்தாள்.

பெங்களூரின் அந்த உயர்தர உணவு விடுதியில் அவர்கள் கூடியிருந்தனர். நந்தா, அனுசூயா, மேகா, வினோத்.

வினோதை ரயில் நிலையத்திலேயே போய் ஆச்சரியப்படுத்தி அழைத்து வந்திருந்தாள் மேகா. அந்தக் கணத்திலிருந்து அவள் இதயத்தில் படபடப்பு கூடியிருந்தது; ரத்தத்தில் விறு, விறுப்பு அதிகரித்திருந்தது.

தங்களுக்கான உணவை ஆர்டர் செய்துவிட்டு, விரல் சொடுக்கினாள் மேகா...

"எதுக்காக எல்லாரும் பேய் படத்துல வர்ற மாதிரி இவ்வளவு சைலன்ட்டா இருக்கீங்க ?"

வினோதை ஆழமாகப் பார்த்துக்கொண்டிருந்தான் நந்தா...

கம்பீரமான உயரம், எளிமையாயிருந்தாலும், நேர்த்தியான உடைகள், ஊன்றிக் கவனித்தால், கேப்டன் ராம்குமாரின் சாயல் அங்கங்கே பிரதிபலித்தது.

அந்த ஊடுருவும் பார்வையால், கூச்சமாகி நிமிர்ந்தான் வினோத்...

"என்ன அங்கிள் ?" என்றான்.



"எனக்குப் பழைய ஞாபகம்லாம் வருது... ராணுவத்துல நான் ரொம்பவும் மதிச்ச ஒரு அதிகாரி ராம்குமார்... அநியாயமா அவர் பாகிஸ்தான்ல உயிரை விடும்படியான சூழ்நிலை வந்தது... ஆனா, அவரோட குடும்பப் பின்னணி பத்தி எனக்கு அப்ப சரியா தெரியாது... நீங்க அவரோட மகன்னு மேகா சொன்னா... நாம நெருங்கி வந்துட்டோம் !"

"எங்கப்பாவோட போட்டோ உங்க வீட்ல இருக்கிறதா மேகா சொன்னா..."

"ஆமா வினோத்; என் போட்டோகூட உங்க வீட்டுல இருக்கலாம் !"

"இருக்கலாம், அங்கிள்... எங்கம்மாவைக் கேட்டாத் தெரியும்..."

"உங்களுக்கு அண்ணன், தம்பி, தங்கைங்க யாராவது ?"

"அப்பா பாகிஸ்தான் போயிருந்தபோது, எனக்கு மூணு வயசு. அதுக்கப்புறம் அவர் திரும்பவேயில்லை... எனக்கு நோ தம்பி; நோ தங்கை; எங்கம்மாவுக்கு நான் ஒரே பிள்ளை !"

"அப்ப வீட்ல நீங்களும், உங்கம்மாவும் மட்டும்தானா."

"என்மேல உயிரையே வச்சிருக்கற ஒரு அத்தை இருக்காங்க ! அம்மாவை விட அத்தைதான் உங்களைப் பாத்தா சந்தோஷப்படுவாங்க !" வினோத் அர்த்தம் பொதிந்த வார்த்தைகளை உதிர்ப்பது போலிருந்தது.

"ஏன் ?"

"அவங்களுக்கு எங்கப்பா மேல அவ்வளவு பாசம்... மரியாதை... அப்பாவோட வேலை பார்த்தவங்ககிட்ட பேசறதுல அவ்வளவு பிரியம் !"

தன் அத்தைபற்றி வினோத் பேசுகையில் அவன் கண்களில் கூடுதலாக ஒரு வெளிச்சம் மின்னுவதை கவனித்தான் நந்தா.

"உங்கத்தைக்கு உங்கப்பாமேல இருக்கற அதே மதிப்பும், பாசமும் உனக்கு உங்கத்தை மேல இருக்கும் போலத் தெரியுது !" என்றாள் மேகா.

"நீ எங்க அத்தையை வந்துபாரு... அசந்துருவே," என்றான் வினோத். பின்னர் நந்தாவைப் பார்த்துத் திரும்பினான்...

"அங்கிள்... இவளை பெங்களூர் ஏரியில போட்டிங் அழைச்சிட்டுப் போயிடாதீங்க... காப்பாத்த நான் இருக்க மாட்டேன் !"

சிரித்தனர்.

தமிழ்நாட்டில், அவனுடைய தாய் மண்ணில் சங்கரை இறக்கிவிட்டது அந்தப் பேருந்து.

அது புறப்பட்டுப் போனபின், புழுதி அடங்கும்வரை அங்கேயே நின்றிருந்தான் சங்கர். விடை தெரியாத பல கேள்விகளுடன் தமிழ் மண்ணில் பாதங்களைப் பதித்தான்.

★ ★ ★



# 17

தமிழ்நாட்டு மண்ணில் பாதங்களைப் பதித்ததும் சிலிர்த்தான் சங்கர், பார்வை சுற்றிலும் இருந்ததை யெல்லாம் ஆர்வத்துடன் பருகியது.

இங்கே... இங்கேதானே அவனுடைய பள்ளிப் பருவம் கழிந்தது ? பார்வையில்லாத அம்மாவைக் கைப்பிடித்து இந்த தோப்பு வழியாகத்தானே திருவிழாவுக்கு அழைத்துப் போவான் ?

அங்கே ராட்டினங்கள் சுற்றுவதையும், கணகட்டு வித்தைகள் நடப்பதையும், மாயாஜாலக் காட்சிகள் நடைபெறுவதையும், கடைகளில் விற்பனைக்கு வண்ணப் பொருட்கள் அடுக்கப்பட்டிருப்பதையும் அம்மாவுக்கு அவன்தானே விவரிப்பான் ! அவள் பார்க்க முடியாத வற்றையெல்லாம் அவனுடைய சிறிய விழிகளால்தானே பார்த்துப் பார்த்து அவள் மகிழ்வாள் !

சங்கரின் நினைவு அம்மாவிடமிருந்து அனுசுயா மீது தாவியது.

ராணுவப் பணியிலிருந்து விடுப்பில் வந்து அவசரம், அவசரமாகத் திருமணம் புரிந்து, ஸ்கூட்டரில் அனுசுயாவை ரவுண்டு அடித்தது இங்கேதானே ! மண் பாதையிலிருந்து தார்ச்சாலையில் வண்டி ஏறியபோது, அந்தக் குலுக்கலில் சற்றே அச்சத்துடன் அவனை இறுக்கிப் பிடித்துவிட்டு உடனே, வெட்கத்துடன் கையை விலக்கிக்கொண்டாளே,

அந்தப் புது மனைவி, இப்போது தாயாகவும் மலர்ந்தபின் அதே வெட்கம் அவளிடம் இருக்குமா?

அவனுடைய நினைவடுக்குகளில் அவளுடைய வாசம் முழுமையாகப் பதியும் முன், இரக்கமற்ற ராணுவம் அவர்களைப் பிரித்து திசைக்கொருவராகப் பந்தாடி விட்டது.

கொத்துக் கொத்தாக இளநீர்களை பரப்பி வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தவனை நெருங்கினான் சங்கர்...

"ரத்னசாமி... என்னை அடையாளம் தெரியுதா?" என்றான்.

கண்களைச் சுருக்கிக்கொண்டு பார்த்தான் இளநீர் விற்பவன்...

"யாருன்னு தெரியலையே?" என்றான்.

"கூட இருந்த நண்பனுக்கேத் தெரியலை... எப்பவோப் பாக்கற உனக்கு எப்படி ஞாபகம் இருக்கும்? சங்கர்... தேசியக் கொடி வீட்டு சங்கர்!

இளநீர் விற்பவனின் சுருக்கங்கள் நிறைந்த முகம் பிரகாசமானது. அப்படியே எழுந்து வந்து சங்கரின் கைகளைப் பற்றிக்கொண்டான்...

"நம்ம ராணுவ சங்கரா? தம்பி... போர்க்களத்துல உயிர் போயிடுச்சின்னு இல்ல உங்கம்மா சொன்னாங்க? பொழைச்சிக்கிட்டீங்களா?"

"ஆமா, ரத்னசாமி!"

"உங்கப்பா ராணுவத்துக்குப் போயிட்டு திரும்பவே இல்லை. இருந்தாலும், துணிஞ்சு மகனையும் ராணுவத்துக்கு அனுப்பினாங்க உங்க அம்மா. கல்யாணத்துக்காக



வந்திட்டுப் போனதுதான் நீங்க... அப்புறம் திரும்பவே இல்ல... உங்கம்மா எப்படி ஏங்கிப் போனாங்க தெரியுமா?"

"எங்க குடும்பம் இன்னும் இங்கேயேதான் இருக்கா, ரத்னசாமி?"

ரத்னசாமியின் பதிலுக்காக அவன் உதடுகளையே ஆவலுடன் பார்த்தான் சங்கர்.

"இல்லியே தம்பி... அவங்க ஊரை விட்டுப் போயி பல வருஷமாச்சே... உங்களுக்குத் தகவல் வரல்லியா?"

"நான் உயிரோட இருக்கறது எங்க வீட்டுல யாருக்கும் தெரியாது. நான் எதிரி நாட்டு சிறையில இருந்துட்டு வரேன் ரத்னசாமி..."

சங்கரின் தலையை ஆதரவாக வருடினான் ரத்னசாமி...

"பரவால்லை தம்பி... இருக்க இடமில்லேன்னு நெனைக்காதீங்க... நீங்க நம்ம வீட்டுல தங்கிக்கலாம்!"

கிராமத்தில் இருப்பவர்களுக்கு வசதிகள் குறைவு என்றாலும் மனசு மிக விசாலமானது என்பதற்கு எத்தனை வாழும் உதாரணங்கள்?

"எங்கம்மாவும், மனைவியும் இப்ப எங்கே?"

"உங்க நண்பர் ஒருத்தர் வந்திருந்தார், தம்பி!"

"யாரு? நந்தாவா வந்திருந்தான்?"

"உங்க நண்பரை நான் அதுக்கு முன்னாலப் பாத்ததில்லை. பேரு நெனைவில்ல தம்பி... ஆனா அவர்தான் உங்கம்மாவையும், சம்சாரத்தையும் கண்ணும், கருத்துமாப் பாத்துக்கிட்டாரு... அப்புறம் இங்க இருந்த வீட்டை வித்துட்டு அவர்கூடவே புறப்பட்டு அவங்க நகரத்துக்குப் போயிட்டாங்க!"

"அவங்க நகரத்துல இருக்கற முகவரி கிடைக்குமா ?"

"போஸ்ட் ஆபீஸ்ல கேட்டுப்பாருங்க தம்பி !"

அஞ்சல் அலுவலகத்தில் தலைமைப் பொறுப்பில் இருந்தவரும் ராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர்தான். சங்கரை அன்புடன் வரவேற்றார்...

'உங்க குடும்பம் இருந்த ஊரைவிட்டுப் போயி, 18 வருஷத்துக்கு மேல ஆகுது சங்கர். அவங்க அப்புறம் இங்கே வரவேயில்ல... அவங்களோட புது முகவரி கிடைக்க வாய்ப்பேயில்ல... ஆனா, மூணு வருஷத்துக்கு முன்னால உங்க குடும்பத்தைப்பத்தி இதேபோல விசாரிச்சிக்கிட்டு வேறொரு பையன் வந்திருந்தான்... தகவல் கிடைச்சா தெரிவிக்கச் சொல்லி, தன்னோட முகவரியைக் கொடுத்துட்டுப் போயிருக்கான்... அது உபயோகமா இருக்குமா பாருங்க !"

தன் பழைய மர மேஜையைத் திறந்து, நைந்து போன ஒரு நோட்டு புத்தகத்தை எடுத்தார் அதிகாரி. ஒரு குறிப்பிட்ட பக்கத்தைத் திறந்தார்.

அந்தப் பெயரை வாய்விட்டுப் படித்தான் சங்கர்...

"வினோத்னு போட்டிருக்கு... இது யார்ன்னு தெரியலியே..."

"பாண்டிச்சேரி முகவரி கொடுத்திருக்காரே... போய் விசாரிச்சுப் பாருங்களேன், சங்கர் !"

"நன்றிங்க !"

வினோத் யார் ? எதற்காகத் தன்னுடைய குடும்பத்தைப்பற்றி அவன் விசாரித்தான் ? தன்னுடைய இறந்த காலத்திற்கும், நிகழ்காலத்திற்குமான ஒரே சங்கிலித் தொடர்பு அவன்தானா ?



நம்பிக்கையிழக்கத் தயாராயில்லை சங்கர்.

சென்னை -

தொழிற்சாலையில் இயங்காமல் நின்றுவிட்ட ஓர் இயந்திரம் பழுது பார்க்கப்பட்டுக் கொண்டிருந்தது. அதை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தான் நந்தா.

அவனுடைய உதவியாளன் எதிரில் வந்து நின்றதும் நிமிர்ந்தான்...

"சார், உங்களைத் தேடி ஒருத்தர் வந்திருக்கார்... உங்க பழைய நண்பன்னு சொல்றாரு... உங்க ரூம்ல உக்கார வச்சிருக்கேன் !"

இதயம் ராட்சஸக் கையால் பிசையப்பட்டதுபோல் திடுக்கிட்டான் நந்தா.

எங்கெங்கோ அலைந்து தன் முகவரியைக் கண்டு பிடித்துத் தேடி வந்துவிட்டானா ? அப்படி வந்திருந்தால், அவனை என்ன செய்வது ? வங்கிக் கணக்கில் இருக்கும் பணத்தையெல்லாம் எடுத்துக்கொள் என்று ஆசை காட்டலாமா அல்லது ஆள்வைத்து அடித்துக் கொன்றே போட்டுவிடுவேன் என்று மிரட்டித் துரத்தலாமா ?

யோசிக்க, யோசிக்க சில விநாடிகளில் உடல் வியர்த்து, உடைகளை நனைத்துவிட்டது.

பதற்றத்துடன் தன் அறைக்கு வேகமாக நடந்தான் நந்தா.

அங்கே காத்திருந்தவரைப் பார்த்ததும், அப்படியே குன்றிப் போனான். ச்சே... சில கணங்களில் எண்ணம் எப்படியெல்லாம் தறிகெட்டு ஓடிவிட்டது ?

அவன் இந்தத் தொழிற்சாலை துவங்கியபோது, ஆரம்ப காலத்தில் அவனுக்குப் பல விதங்களில் உதவிய வங்கி அதிகாரி அங்கே அமர்ந்திருந்தார்.

வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டதாகவும், அவர் மகன் பொறியியல் கல்லூரியில் படிப்பதாகவும் சொன்னார்.

"அவன் ஏதோ ஒரு தொழிற்சாலையில போய்ப் பயிற்சி எடுத்துக்கணுமாம்... நம்ம தொழிற்சாலைக்கு அனுப்பலாமான்னு கேக்கத்தான் வந்தேன் !"

அவரை உபசரித்து அவர் மகனுக்காகக் கேட்ட அனுமதி கடிதத்தை வழங்கிவிட்டு தன் பணிக்குத் திரும்பினான் நந்தா.

இனி எப்போதும் இப்படித்தானா ? யார் அவனைத் தேடி வந்தாலும், சங்கர் வந்துவிட்டதாகப் பதறி, நெஞ்சம் படபடக்கப் போகிறதா ? அவனுடைய பதற்றமே அவனைக் காட்டிக்கொடுத்துவிடப் போகிறதா ?

தன்னிச்சையாக வீட்டுக்கு போன் செய்தான்.

"என்ன நந்தா ?" என்றாள், அனுசூயா மறுமுனையில்.

"யாரும் தேடி வரல்லியே, அனு ?"

"என்ன ஆச்சு நந்தா உங்களுக்கு ? எதுக்காக எப்பவும் பயந்து, பயந்து வாழறீங்க ? யார் வந்தாலும் என்னை ஒண்ணும் பண்ண முடியாதுன்னு நான் சொன்னதை நீங்க நம்பலைதானே ? சங்கர் நம்ம பாக்டரிக்குத் தேடிவந்தாலும் வந்துருவார்ன்னு சொல்லி என்னை ஆபீஸ் பக்கமும் வர வேண்டாம்னு தடுத்திட்டீங்க... எல்லா வேலையையும் நீங்களே இழுத்துப்போட்டுக்கிட்டுத் தள்ளாடிட்டிருக்கீங்க... இன்னும் ரெண்டு நாள்தான் நான் பொறுத்துப்பேன்... அப்புறம் உங்ககூடத்தான் நான் இருப்பேன்..."

அவளுடன் பேசி முடித்த வேகத்திலேயே மேகாவுக்கு போன் செய்தான் நந்தா...

"நீங்க கேக்கறதுக்கு முன்னாலேயே சொல்லிடறேன்... என்னை யாரும் காலேஜ்க்குத் தேடி வரலை. அந்த சங்கர் என்னைத் தேடி வந்தாலும் மூஞ்சில அறைஞ்ச மாதிரிப் பேசித் திருப்பி அனுப்பிடுவேன்னு சொல்லியிருக்கேன் இல்ல ! என்னை நம்புங்கப்பா !"



"அதுக்கில்லடா... எனக்கு..."

"பயமாயிருக்கு... பேசாம இந்த வீட்டை வித்துட்டு வேற வீட்டுக்குப் போயிடலாம்... யார் கிட்டயும் முகவரி கொடுக்க வேணாம், இதைத்தானே தினம் சொல்லிட்டிருக்கீங்க ? நீங்க பயப்படற மாதிரி எதுவும் நடக்காதுப்பா !"

"ஒரு மணி நேரத்துக்கொருதடவை நீ எனக்கு போன் பண்ணிட்டிரு கண்ணா..."

போனை அணைத்தான்.

நந்தாவுக்கு உடல் உதறியது.

சங்கர்... எங்கேடா இருக்கிறாய் ?

குறுக்கும், நெடுக்குமாய் நேர்க் கோடுகளை வரைந்தது போல் வீதிகள் கொண்ட பாண்டிச்சேரி.

பேருந்து நிலையத்திலிருந்து ஆட்டோ பிடித்திருந்தான் சங்கர்.

முகவரியை சரி பார்த்துவிட்டு, பயணப் பையைத் தோள் மாற்றிக்கொண்டான்; இறங்கினான்; கதவைத் தட்டினான்.

கதவு திறந்தது.

எதிரில் நின்றவளுக்கு 50 வயதிருக்கலாம்; கண்ணியமான தோற்றம்; கச்சிதமான நூல் புடவை; வட்டமான கண்ணாடி; நெற்றியில் தெரிந்தும், தெரியாமலும் பென்சிலால் வைத்தது போன்ற சிறு பொட்டு; காதோரம் முதல் நரை எட்டிப்பார்த்திருந்தது.

"வினோன்னு ?" இழுத்தான் சங்கர்.

"நீங்க ?"

"என் பேரு சங்கர். வினோ எங்க ஊருக்கு வந்து, எங்க குடும்பத்தைப்பத்தி விசாரிச்சாராம்..."

அவள் முகத்தில் சிறு திகைப்பு.

கதவைச் சற்று அகலமாகத் திறந்தாள்.

ஹால் சுவரில் பெரிதாக மாட்டப்பட்டிருந்த புகைப்படம் கண்ணில் பட்டது.

சங்கரின் உடல் விறைத்தது. தன்னிச்சையாக கை உயர்ந்து நெற்றியில் பதிந்து ராணுவ சல்யூட் அடித்தது.

"நீங்க... நீங்க கேப்டன் ராம்குமாரோட...?" என்ற போது அவன் குரல் தடுமாறியது.

"உள்ள வாங்க!"

கதவு இன்னும் அகலமாகத் திறந்தது.

ஹாலில் போடப்பட்டிருந்த சுத்தமான சோபாக்களில் உட்காரவே அவனுக்குக் கூச்சமாக இருந்தது.

"வினோத் என் மகன்தான். இப்ப பெங்களூர்ல இருக்கான்... நீங்க பாகிஸ்தான்லேர்ந்து எப்ப வந்தீங்க? அங்கே சிறையில நிறைய கொடுமைகளை அனுப விச்சீங்களா ?" அவள் குரல் அதிராமல் வந்தது.

ஆச்சரியமானான் சங்கர்.

"நான் செத்துட்டதாத் தான் எல்லாரும் நெனைச்சிட்டிருக்காங்க... நான் பாகிஸ்தான் சிறையில அடைபட்டுக் கிடந்தது இந்திய ராணுவத்துக்குக்கூடத் தெரியல... உங்களுக்கு எப்படித் தெரியும் ?"

★ ★ ★



## 18

திகைப்புடன் ராம்குமாரின் மனைவியை நிமிர்ந்து பார்த்தான் சங்கர்.

நந்தா மட்டுமல்லாமல், அத்தனைபேரும் அவன் எல்லையில் இறந்துவிட்டதாக நம்பிக்கொண்டிருக்க, அவன் பாகிஸ்தான் சிறையில் அடைப்பட்டுக் கிடந்த விவரம் இவளுக்கு மட்டும் எப்படி தெரியும் ?

"பாகிஸ்தான்ல உண்மையில என்ன நடந்ததுன்னு ராம்குமாரோட தங்கைதான் சொன்னாங்க..." என்றாள் ராம்குமாரின் மனைவி.

"கேப்டன் ராம்குமாரோட தங்கையா ? அப்படி யாரையும் நாங்க பாகிஸ்தான்ல பார்க்கலியே..." என்றான் சங்கர் வியப்புடன்.

"பாத்திங்க... அவங்களை இப்ப நீங்க பார்க்க விரும்பறீங்களா ?"

ஆர்வம் தூண்டப்பட்டவனாக தவிப்பானான் சங்கர்...

"நிச்சயமா..." என்றான்.

"அவங்களும் உங்களைப் பாக்கத்தான் காத்திட்டிருக்காங்க... வாங்க..." அவள் அவனைப் பக்கத்து அறைக்கு அழைத்துப் போனாள்.

"சங்கர் வந்திருக்காரு !" என்று அறிவித்தாள்.

அங்கே ஜன்னலைப் பார்த்து முகம் திருப்பி யிருந்தவள் குரல் கேட்டுத் திரும்பினாள்.

"வணக்கம் !" என்று புன்னகைத்தாள்.

அதிர்ந்து நின்றுவிட்டான் சங்கர்...

"சாபிரா...!" என்றான்...

"உன்னைத்தான் ராம்குமாரோட தங்கைன்னு இவங்க சொன்னாங்களா ?"

"நீங்க எல்லாருமே என்னைத் தங்கையாத் தானே பாத்தீங்க என்னை நெனைவிருக்கா சங்கர் அண்ணா ?"

அவளுக்கு இப்போது 30 வயதிருக்கலாம். வயது கூடியிருந்தாலும், அவளுடைய அந்தக் குழந்தைத்தனமான முகத்தை அவனால் மரணத்துக்கு அப்பாலும் மறக்க இயலாதே !

அவனையறியாமல் சங்கரின் கண்களில் நீர் துளிர்த்தது...

"மறக்கற முகமா இது ? எங்களுக்கு பாகிஸ்தான்ல அடைக்கலம் கொடுத்த சையது பாஷாவோட அன்பு மகளாச்சே நீ ! 'அண்ணா, அண்ணா'ன்னு வாய் நிறைய கூப்பிடுவியே... பார்வையில்லாம நீ நடமாடினப்பல்லாம் எனக்கு ஊர்ல இருந்த எங்கம்மாதானே நினைவுக்கு வருவாங்க !"

சாபிராவுக்கு எதிரில் அமர்ந்தான் சங்கர், அவள் கைகளை அன்புடன் பற்றிக்கொண்டான்.

ராம்குமாரின் மனைவி இருவருக்கும் கொண்டுவந்து வைத்த தேநீர் கவனிக்கப்படாமல் இருந்தது.



"சங்கர் அண்ணா, எனக்கு இப்ப கண்ணு நல்லாத் தெரியுது... இந்தியாவுக்கு வந்ததும் சென்னைல ஒரு ஆபரேஷன் பண்ணிக்கிட்டேன்... இப்ப உங்களை துல்லியமாப் பார்க்க முடியுது !"

"கேக்கவே சந்தோஷமாயிருக்கு சாபிரா... எப்ப இந்தியாவுக்கு வந்தே ? எப்படி வந்தே ?

"நான் இங்கே வந்து ஆறு வருஷத்துக்கு மேல ஆகுது... எப்படி வந்தேன் ? அது பெரிய கதை... நீங்க என்னைக் கடைசியாப் பார்த்த தினம் ஞாபகம் இருக்கா அண்ணா ?"

ஐயோ... மறக்கக்கூடிய தினமா அது ? நரக வேதனைகளை அள்ளிக்கொட்டிய அந்த தினத்தின் ஒவ்வொரு நொடியும் அவன் நினைவில் அடித்து இறக்கப்பட்ட ஆணி போல் பதிந்துவிட்டிருந்ததே !

"உங்களுக்குப் பாதி தெரியும்... நந்தாவுக்குப் பாதி தெரியும்... அன்னிக்கு என்ன நடந்ததுன்னு எனக்குத்தான் முழுசாத் தெரியும் அண்ணா !"

பழைய நினைவுகளை கனத்த நெஞ்சுடன் புரட்டினாள் சாபிரா.

அன்று

சங்கரும், நந்தாவும் இந்தியாவுக்கு போன் செய்து முடித்து சையது பாஷாவின் வீட்டுக்குத் திரும்பியிருந்தனர்.

சுவிட்சைத் தட்டியதும் அரையிருளாக இருந்த அறை வெளிச்சமாக மாறியது.

அவர்கள் பார்த்த காட்சி திடுக்கிடச் செய்தது... 12 வயது சாபிரா ஒருபக்கம் நாற்காலியுடன் கட்டிப் போடப்பட்டிருந்தாள்.

'சாபிரா... சாபிராவை ஏன் கட்டிப்போட்டிருக்கிறீர்கள் ?' பதறினான் சங்கர்.

'சில உண்மைகளை உங்களிடமிருந்து வரவழைப்பதற்காக..' என்றான், நெடு, நெடுவென்றிருந்த பாகிஸ்தான் சிப்பாய், துப்பாக்கி முனையால் சங்கரின் முகவாயை நிமிர்த்தி.

பதறி ஓரடி முன்னால் வைத்தான் நந்தா. குறுக்கிட்ட துப்பாக்கி அவனை நிறுத்தியது. நந்தா, சங்கர் இருவரிடமிருந்தும் ஒளித்து வைத்திருந்த ஆயுதங்கள் பறிக்கப்பட்டன.

'கதவு தட்டப்பட்டபோது, நீங்கள்தான் வந்திருக்கிறீர்கள் என்று நினைத்து இந்த அயோக்கியர்களுக்குக் கதவைத் திறந்துவிட்டுவிட்டேன் அண்ணா... இந்தக் குருட்டுப் பெண்ணை மன்னியுங்கள்!' என்று அழுதாள் சாபிரா.

'எங்கள் வீட்டில் புகுந்து கலாட்டா செய்கிறாயே, யார் நீ ?' என்றான் சங்கர்.

'பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவன் போல் நாடகமாடிக்கொண்டிருக்கும் இந்திய நாயே... அது நான் கேட்க வேண்டிய கேள்வி!'

பாகிஸ்தான் ராணுவ அதிகாரியின் வலுவான புறங்கை சங்கரின் கன்னத்தில் ஓங்கி அறைந்தது.

'நீங்கள் எங்கோ தவறு செய்கிறீர்கள். அனாவசியமாக எங்களைப் பிடித்துவைத்து கேள்விகள் கேட்கிறீர்கள்...' என்று தைரியமாகச் சொன்னான் சங்கர்.

உயரமாயிருந்தவன் சாபிராவின் பின்னால் போய் நின்றான். அவளுடைய இரு காதுகளையும் பற்றித் திருக ஆரம்பித்தான். வலியில் அவள் கதறினாள்.



'என்ன ரகசியமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறீர்கள்? இவள் காதுகளைப் பிய்க்கும் முன் உண்மைகளைக் கக்கிவிடுங்கள் ?

'சாபிராவை விடுங்கள். அவள் ஒன்றும் அறியாதவள்...' என்று அவளுக்குப் பின்னால் நின்றிருந்தவன் மீது பாய்ந்தான் சங்கர். அந்த வேகத்திலேயே ரைபிளின் கட்டைப் பகுதி அவன் தோளில் புயலாய் மோதியது.

சுருண்டு கீழே சரிந்தான் சங்கர்.

'அவளைக் கேட்கக்கூடாது என்றால், நீ சொல்... உங்களை அனுப்பியது யார்? இங்கே நீங்கள் செய்து முடித்திருக்கும் காரியங்கள் என்னென்ன? செய்யத் திட்டமிட்டிருக்கும் விஷயங்கள் என்னென்ன ?'

'எனக்கு நீங்கள் பேசுவதே புரியவில்லை!'

ரைபிளின் முனையில் இருந்த கத்தி, சங்கரின் கன்னத்தில் கோடிழுத்தது...

'உன்னைத் துண்டங்கள் போடும் முன், உண்மைகளைச் சொல்லிவிடு!'

மறுத்தான் சங்கர்... தனக்கு எதுவும் தெரியாது என்று மறுபடி, மறுபடி மறுத்தான். ஒவ்வொரு பதிலுக்கும் அவன் மேனியில் ரத்தக் கோடுகள் புதிதாக இழுக்கப்பட்டன. ஒரு கட்டத்தில் வலியில் நினைவிழந்தான் சங்கர்.

'என் நண்பனைக் காயப்படுத்தாதீர்கள்!' அலறினான் நந்தா.

குரல் கேட்டு அவர்கள் கவனம் நந்தாவின் பக்கம் திரும்பியது. சங்கரைத் தாக்கிக்கொண்டிருந்தவன் அவனைக் காலால் எத்தினான்...

'இவனைத் தூக்கிப் பக்கத்து அறையில் தள்ளுங்கள்!'

தரையெங்கும் சங்கரின் இந்திய ரத்தம் கோடிழுக்க, அவன் அங்கிருந்து இழுத்துப் போகப்பட்டான். அந்த ஒலி கேட்டு குலுங்கி, குலுங்கி அழுதாள் சாபிரா.

நந்தாவின் முகத்தில் செல்லமாகத் தட்டினான் நெட்டையன்...

'நீயாவது உண்மைகளைச் சொல்லப்போகிறாயா?'

'எனக்கு... எனக்கும் எந்த உண்மையும் தெரியாது!'

'உண்மைகளைச் சொல்லாத இவனுக்கு எதற்குப் பத்து விரல்கள்? ஒவ்வொரு விரலாக உடைத்து எறியுங்கள்!' என்றான் நெட்டையன். அவனுடைய கண்களில் தெரிந்த வெறி காட்டு விலங்குகளை நினைவூட்டியது.

கைப்பற்றப்பட்டான் நந்தா. அச்சத்துடன் திமிறினான். அடக்கப்பட்டான்.

ஒரு பக்கம் சாபிரா அலற, அலற...

அவன் பாத்ரூமுக்கு இழுத்துப் போகப்பட்டு, வெள்ளைப் பளிங்குக் கல்லில் அவனுடைய கையை ஒருவன் பூட்ஸ் காலால் மிதித்து தரையோடு அழுத்திக்கொள்ள, இன்னொருவன் ஒரு விரலை மளுக்கென்று முறித்தான்.

வலியில் அலறினான் நந்தா...

'ஐயோ... சொல்லி விடுகிறேன்... என் பெயர், நந்தா... என் நண்பன் பெயர் சங்கர்... நாங்கள் இந்தியர்கள்... இங்கு உளவறிய வந்தோம்!'

'அண்ணா... எதுவும் சொல்லாதீர்கள்!' என்று அலறினாள் சாபிரா.

'உங்களுடன் வேறு யார், யார் வந்தார்கள்?'



'அதெல்லாம் எனக்குத் தெரியாது... என்னை விட்டுவிடுங்கள்!' நந்தாவின் அலறல் சாபிராவின் செவிகளைத் துளைத்தது.

அவனுடைய இரண்டாவது விரலும் பறிபோனது தைரியமிழந்த நந்தா, அழுதான்...

'சொல்கிறேன்... சொல்கிறேன்... ராம்குமார் என்பவரின் தலைமையில் நாங்கள் வந்தோம்!'

'அவர்கள் எல்லாரும் எங்கே ஒளிந்திருக்கின்றனர்?'

'அந்த விவரம் எனக்குத் தெரியா... ஆஆஆ...'

மூன்றாவது விரல் மடக்கப்பட்டது.

'சொல்... இந்திய நாயே... எல்லா உண்மைகளையும் சொல்!'

உறுதியிழந்த நந்தா, அடுத்த விரலையும் பறிகொடுக்க விரும்பாதவனாக அலறினான்...

'சொல்கிறேன்... எல்லாவற்றையும் சொல்லி விடுகிறேன்... ஆனால், என்னை உங்கள் நண்பனாக நினைத்து உயிரோடு விட்டுவிட வேண்டும்... இந்திய எல்லைக்குள் போய்விட அனுமதிக்க வேண்டும்... கண் தெரியாத சாபிராவையும் மன்னித்துவிட வேண்டும்!'

'அண்ணா... நீங்கள் இந்திய தேசத்துக்கு துரோகம் செய்து என்னைக் காப்பாற்ற வேண்டாம்!' என்று கோபமாக அலறினாள் சாபிரா.

அவள் கதறும் குரலை அலட்சியம் செய்த நந்தா, அவர்களுடைய ரகசியத் திட்டத்தின் அத்தனை விவரங்களையும் ஒன்று விடாமல் கொட்டினான்.

'இந்த துரோகிகளுக்கு இடமளித்த சையது பாஷாவின் தலை எனக்கு இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் வேண்டும்!' என்றான் பாகிஸ்தான் கேப்டன்.

இயலாமல் அழுதாள் சாபிரா.

'இவளை என் ஜீப்பில் தூக்கிப் போடுங்கள்!'

ஒரு திறந்தவெளி ஜீப்பில் சாபிராவை ஏற்றிக் கட்டிப்போட்டனர். பகலிலேயே என்ன நடக்கிறது என்பதைத் தெளிவாகப் பார்க்க முடியாதவள் அவள். அந்த இருட்டில் முற்றிலுமாகச் செயலிழந்து கிடந்தாள். அவள் காலடியில் கொண்டுவந்து போடப்பட்டது சங்கர் என்று புரியவே அவளுக்குச் சற்று நேரம் பிடித்தது.

சங்கரின் கன்னத்தை இருட்டில் வருடினாள் சாபிரா...

'கடைசிவரை உறுதியாக இருந்த உங்களிடமிருந்து நந்தா கற்றுக்கொள்ளக்கூடாதா? நம் எல்லாரையும் காட்டிக்கொடுத்துவிட்டாரே...' என்று அழுதாள்.

சங்கரிடமிருந்து அசைவில்லை.

'சாபிரா...?'

நந்தாவின் குரல் அவள் காதருகில் கிசுகிசுத்தது...

'சங்கர் மயக்கமாயிருக்கிறான்!'

'துரோகி...' - நந்தா இருந்த திசை பார்த்து அவள் துப்பினாள்...

'இந்தியர்கள் எங்களுக்கு என்னென்ன நன்மைகள் செய்திருக்கின்றனர் என்பதை என் அப்பா எடுத்துச் சொல்லியிருக்கிறார். பாகிஸ்தானில் பிறந்திருந்தாலும், நியாயத்தின் பக்கம் இருக்க வேண்டும் என்று சொல்லிச் சொல்லி வளர்த்திருக்கிறார். எங்கள் உயிர்களைப் பணயம் வைத்துத்தான் இந்தியர்களுக்கு நாங்கள் உதவிக் கொண்டிருக்கிறோம்... எங்கள் உயிருக்குப் பயந்து இந்தியர்களுக்கு துரோகம் செய்ய மாட்டோம்... ஆனால், நீ?'



'சாபிரா... நிலைமை புரியாமல் பேசுகிறாய்... உன்னைக் காப்பாற்றுவதற்காகத்தான் நான் உண்மைகளை ஒத்துக்கொண்டேன்!'

'ச்சீ... உன்னிடம் நான் பிச்சை கேட்டேனா? என்னைக் காப்பாற்றுவதற்காகத்தான் உன்னை இந்திய எல்லைக்குள் உயிரோடு கொண்டுவிட்டு விட வேண்டும் என்று பேரம் பேசினாயா?'

'சாபிரா... என் விரல்களை அவர்கள் உடைத்துவிட்டனர் தெரியுமா?'

'விரல்களை அல்ல... உன் தைரியத்தை... உன் உறுதியை... என்னுடன் பேசாதே!'

ஜீப் உறுமிப் புறப்பட்டது.

'நந்தா... ராம்குமார் ஒளிந்திருக்கும் இடத்திற்கு இப்போது நீ வழிகாட்டப்போகிறாய்!' என்று பாகிஸ்தானியனின் குரல் கேட்டது.

வழி சொல்ல ஆரம்பித்தான் நந்தா.

★ ★ ★

# 19

அந்த இரவில் பாகிஸ்தானின் ராணுவ ஜீப் நந்தா காட்டிய வழியில் பயணமானது. அவனுடைய விரல்கள் உடைக்கப்பட்ட பகுதியில் கட்டப்பட்டிருந்த வெள்ளைத் துணி சிகப்பாகிக்கொண்டேயிருந்தது. வழிநெடுக அழுதுகொண்டே வந்தாள் சாபிரா.

'நிறுத்துங்கள். அதோ... அந்த வீட்டில்தான் ராம்குமார் தங்கியிருக்கிறார் !' என்றான் நந்தா.

பத்து நிமிடங்களுக்குள், ராம்குமாரும், மற்ற இந்திய நண்பர்களும் சுற்றி வளைக்கப்பட்டனர். அவர்களுக்கு ஆதரவாக இடம் கொடுத்திருந்த சையது பாஷாவும் அடித்து இழுத்து வரப்பட்டார். சிறிய போராட்டத்துக்குப் பின்னர், அவர்கள் வெவ்வேறு ஜீப்களில் திணிக்கப்பட்டனர்.

* * *

அந்த ராணுவ வாகனங்கள் எல்லைப்பகுதியை நோக்கி சீறி விரைந்தன.

'சாபிரா...' பரிவான அந்தக் குரலைக் கேட்டதும், பொங்கி அழுதாள் சாபிரா.

'அப்பா...'

'நாம் பிடிபட்டுவிட்டோம்... பரவாயில்லை... இந்தியாவுக்காக என்றைக்காவது இந்த உயிரைப் பரிசாகக் கொடுக்க வேண்டும் என்று நினைத்திருந்தேன்... நம்மையெல்லாம் இந்திய எல்லைக்கு அருகில் வைத்து



சுடப் போகின்றனராம்... நம் உடல்களாவது இந்திய மண்ணை முத்தமிட்டால் மகிழ்வேன் !'

'முட்டாள்...' முன்னால் உட்கார்ந்திருந்த ராணுவ டிரைவர் சிரித்தான்.

'நீ இந்த இந்திய நாய்களுடன் உயிரை விடுவது தப்பில்லை... உன் அழகான மகளும் உயிரை விடவேண்டும் என்று எதிர்பார்க்கிறாயே... அவள் எங்கள் கேப்டனுக்குக் கிடைத்திருக்கும் பரிசு ! பாகிஸ்தான் ராணுவ தளபதியின் இளவரசியாக வாழப் போகிறாள் !'

ஒரு எளிமையான கட்டடத்தின் முன்பு நிறுத்தப்பட்டது ஜீப்.

கதறக் கதற ஜீப்பிலிருந்து இறக்கப்பட்டாள் சாபிரா.

சொல்லிக் கொண்டிருந்த சாபிராவின் குரல் உணர்ச்சிகளால் உடைந்தது.

"அதுக்கப்புறம் எல்லைப் பகுதில என்ன நடந்ததுன்னு அப்போ எனக்குத் தெரியாது !' என்றாள் சாபிரா.

"எனக்கு தெரியும்..." என்ற சங்கர் சொல்லத் துவங்கினான்.

ஜீப்பில் கிடத்தப்பட்டிருந்த சங்கரின் நினைவுகள் அலை, அலையாகத் திரும்பின. அவன் மீண்டும் கண்களைத் திறந்தபோது மேலே வானத்தில் சிதறிக் கிடந்த நட்சத்திரங்கள் இரக்கமில்லாமல் அவனைப் பார்த்துக் கண்ணடித்தன.

அவனுடைய உடலின் வெவ்வேறு பகுதிகள் வலியில் தவித்தன, துடித்தன. பல இடங்களில் ரத்தம் ஊறி, ஊறி, உடைகள் சிகப்பாகிக்கொண்டிருந்தன. ஜீப்பின் இன்னொரு புறம் உட்கார்ந்திருந்தான் நந்தா. இரண்டு கைகளிலும் முகத்தைத் தாங்கியிருந்தான்.

அவர்களைத் தாக்கியவன் தன் மடியில் ஒரு இயந்திரத் துப்பாக்கியை வைத்திருந்தான். சங்கரைப் பார்த்து கோணலாகப் புன்னகைத்தான்...

'உன் பெயர் சங்கர், இவன் பெயர் நந்தா. கேப்டன் ராம்குமார் தலைமையில் தீவிரவாத முகாம்களை அழிப்பதற்காக இந்திய ராணுவத்தால் ரகசியமாக அனுப்பப்பட்டிருக்கிறீர்கள். எல்லா விவரங்களும் எங்களுக்குத் தெரிந்துவிட்டன !'

'யார் சொன்னார்கள் ?'

'சாகப் போகும் நேரத்தில் அவன் பெயரைத் தெரிந்துகொண்டு என்ன செய்வாய் ? பணத்துக்குப் பணிபவர்கள் சிலர் இருக்கின்றனர்; பயத்தில் பணிபவர்கள் சிலர் இருக்கின்றனர் !'

'இந்திய ராணுவத்தில் பயந்தவர்கள் யாரும் இல்லை !'

'இருக்கிறான். உங்கள் குழுவில் ஒரு நண்பன் இருக்கிறான்... அவன் மூலம்தான் எல்லாத் தகவலும் எங்களுக்குக் கிடைத்தன !'

அப்போதுகூட நந்தாவை சந்தேகமில்லாமல்தான் பார்த்தான் சங்கர்...

'சாபிரா எங்கே ?' என்றான்.

'அவளை மற...'

'அவள் அப்பா ?'

'பாகிஸ்தானில் வாழ்ந்துவிட்டு, நாட்டுக்கு துரோகம் செய்தவருக்கு மன்னிப்பில்லை... எல்லைக்குப் போனதும், முதல் தோட்டா அவருக்குத்தான் !'

அந்த ராணுவ ஜீப் இந்தியாவையும், பாகிஸ்தானையும் பிரித்த அந்த எல்லை அருகில் சென்று நின்றது.



கேப்டன் ராம்குமாரும், மற்றவர்களும் அங்கே இழுத்து வரப்பட்டிருந்தனர். எல்லாருடைய கைகளும் பின்புறம் கட்டப்பட்டிருந்தன.

ஒவ்வொரு தோட்டாவாக வெடித்தது; ஒவ்வொரு உடலாக மண்ணில் குப்புறடித்தது.

சங்கரின் துரதிர்ஷ்டம் தோட்டா அவன் இதயத்தில் பாயாமல் இடுப்பருகில் பாய்ந்துவிட்டது. உயிரை வாங்காமல் கீழே சாய்த்துவிட்டது.

அவன் மறுபடி கண் விழித்தபோது, பாகிஸ்தானின் சிறையைச் சேர்ந்த மருத்துவமனையில் இருந்தான்.

அன்றிலிருந்து தினம் சித்ரவதைதான். அவனிடம் ஏதாவது தகவல் கிடைக்குமா என்று அவர்கள் குடைந்து எடுத்தனர். இடையில் இரண்டு, மூன்று முறை சிறையிலிருந்து தப்பிக்கப் பார்த்து பிடிபட்டான். அவன் தண்டனைக் காலம் கூடிக்கொண்டே போனது.

அன்றைய தினங்களுக்கே போய்விட்டது போல் உடல் சிலிர்த்தான் சங்கர்...

"என்னால எந்தப் பயனும் இல்லன்னு கடைசியா 18 வருஷத்துக்கப்புறம்தான் விடுதலை செய்ஞ்சாங்க !" சொல்லி நிறுத்தினான் சங்கர்.

"இந்தியாவுக்குள்ள வந்தா, எனக்கு அதிர்ச்சிக்கு மேல அதிர்ச்சி என்னை துரோகின்னு இந்திய ராணுவம் சொல்லுது. கேட்டா, நந்தாதான் அப்படிச் சொன்னான்னு சொல்றாங்க... எங்களைெல்லாம் சுட்ட போது, நந்தாவையும் சுட்டுட்டாங்கன்னுதான் நான் நெனைச்சிருந்தேன்... அவன் மட்டும் எப்படித் தப்பிச்சு இந்தியாவுக்குள்ள வந்தான், என்னை ஏன் துரோகின்னு சொன்னான்னு இப்பல்ல புரியுது... அவன் செஞ்ச

துரோகத்துக்கெல்லாம் எம்மேல பழி போட்டுட்டான் சாபிரா !"

"நீங்க இறந்துட்டீங்க, திரும்பி வர மாட்டீங்கன்னு நெனைச்சு நந்தா அப்படி செய்ஞ்சிட்டார் போலருக்கு !"

"அவனை எவ்வளவு நெருக்கமான நண்பனா நெனைச்சிருந்தேன் தெரியுமா ? அவன் இப்படிச் செய்யலாமா ?"

சிறிது நேரம் கலங்கி அமர்ந்திருந்தான் சங்கர்...

"என் குடும்பம் எங்கே இருக்குன்னு தெரியாம தவிச்சபோது, அதிர்ஷ்டவசமா டில்லில நந்தா என் கண்ணுல மாட்டினான்..."

டில்லியில் சங்கர் நந்தாவைச் சந்தித்தது, அவன் இவனை ஏமாற்றிவிட்டு சொல்லாமல், கொள்ளாமல் புறப்பட்டுப் போனது எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னான்.

"நந்தா ஏன் அப்படி செஞ்சான்னு எனக்கு இப்ப இல்லத் தெரியுது ?"

எதையோ சொல்ல சாபிரா தயங்குவதுபோல் இருந்தது. கண்களைத் துடைத்துக்கொண்டான் சங்கர்; பேச்சை மாற்ற விரும்பினான்...

"நீ எப்படி இங்கே வந்தே, சாபிரா ?"

சாபிராவின் விழிகளில் கண்ணீர் திரண்டது. ஆனால், விளிம்பைத் தாண்டாமல் நிறுத்திக்கொண்டாள்.

"பாகிஸ்தான் கேப்டன் அன்வர் வீட்டுல கிட்டத்தட்டக் கொத்தடிமையா இருந்தேன்... முதல் நாலு வருஷம் என்னை வேலைக்காரியா மட்டுமே நடத்தினான். அப்புறம்..."



அவள் உடல் அழுகையில் குலுங்கியது.

"வேண்டாம்... சொல்லாதே !" என்றான் சங்கர். சாபிராவைத் தன் நெஞ்சோடு அணைத்துக்கொண்டான். சற்று நேரத்தில் அடங்கினாள் சாபிரா...

"எனக்கு 24 வயசானபோது, அன்வர் வீட்டுக்கு ஒரு பெரியவர் வந்திருந்தாரு... ராணுவத்துல அவனுக்கு வேற ஏதோ பிரச்னைலாம் இருந்தது... அதுக்கெல்லாம் காரணம் என்னோட சாபம்ன்னு அவர் சொன்னாரு... அவனுக்கு புத்தி சொன்னாரு. என்னை விட்டுடச் சொன்னாரு. அவனுக்கு என்ன தோணிச்சோ... எங்கே போகணுமோ சொல்லு... அங்கே உன்னைக் கொண்டுபோய் விட்டுடறேன்'ன்னு சொன்னான். நான் உடனடியா இந்தியாவுக்குப் போக விரும்பறதாச் சொன்னேன்.

"என்னை இந்திய எல்லைக்குள்ள விட்டான் அன்வர். அங்கே என்னை இந்திய சிப்பாய்ங்க பிடிச்சாங்க... இந்திய ராணுவ அலுவலகத்துக்கு அழைச்சிட்டுப் போனாங்க... கர்னல் ஜான் செம்பருத்தி என்னைச் சந்திச்சாரு... அவருக்கு என் அப்பாவைப்பத்தித் தெரியும்... என்னைப்பத்தியும் தெரிஞ்சிருந்தது !"

"இந்தியர்களுக்கு பாகிஸ்தான்ல உதவி செய்திட்டிருந்த குடும்பம்ன்னு தெரிஞ்சதால, எனக்கு இந்தியக் குடியுரிமை வாங்கித்தர ஏற்பாடு செஞ்சாரு... இந்தியாவுல எங்கே போக விருப்பம்ன்னு கேட்டாரு...

"ராம்குமார் ஏற்கனவே பலமுறை பாகிஸ்தான் வந்து எங்க கூடத் தங்கியிருந்திருக்காரு... அதனால், அவரோட முகவரி கிடைக்குமான்னு கேட்டேன்... கொடுத்தாரு... சங்கர் துரோகம் பண்ணலைன்னு நான் சொல்லியிருக்கலாம்... ஆனா, எந்த ஆதாரமும் இல்லாம நான் பேசினா எடுபடாது... அதனால, நந்தாவைச் சந்திச்சு

அவர்கிட்ட முஞ்சிக்கு நேரப் பேசணும்ன்னு முடிவு பண்ணினேன்...

"இங்கே வந்து சேர்ந்தேன். என்னைப்பத்தி ராம்குமார் தன்னோட குடும்பத்தில சொல்லியிருந்தார். அவரோட மனைவி என்னைப் பாசத்தோடத் தன்னோட சகோதரியாவே ஏத்துக்கிட்டாங்க... அதுக்கப்புறம் இன்னி வரைக்கும் நந்தாவை சந்திக்கற சரியான சந்தர்ப்பம் அமையல... சென்னையில் ஒரு பெரிய கண் ஆஸ்பத்திரிக்கு அழைச் சிட்டுப் போயி, என்னோட பார்வையை மீட்டுத்தந்தது இவங்கதான் !"

சாபிராவின் பக்கம் திரும்பினான் சங்கர்...

"நான் பாகிஸ்தான் சிறையில இருந்தது உனக்கு எப்படித் தெரியும் ?"

"கேப்டன் அன்வர் எல்லாம் சொல்வான். நந்தா தான் துரோகின்றதை மட்டும்தான் நேர்ல நானே பார்த்தேன்... நீங்க உயிர் பொழைச்சதது, உங்களை சிறையில தூக்கிப்போட்டது எல்லாம் அவன் சொன்னான்... என்னிக்காவது ஒருநாள் நீங்க திரும்பி வருவீங்கன்னு இவங்க கிட்ட சொல்லிட்டேயிருப்பேன்... ராம்குமாரோட மகன் வினோதை விட்டு உங்க ஊர்ல விசாரிச்சிட்டு, நீங்க வந்தா, உங்களுக்கு புதுச்சேரி முகவரியைக் கொடுக்கற துக்குக்கூட அதனாலதான் ஏற்பாடு செஞ்சேன் !"

ஊரைப்பற்றிப் பேசியவுடன் சங்கரின் முகம் களையிழந்தது...

"எங்க அம்மா இறந்துட்டாங்களாம் சாபிரா... எனக்கு ஒரு மகள் பிறந்தாளாம்... என் மனைவியும், மகளும் எங்கே போனாங்கன்னு யாருக்கும் தெரியல... நந்தா கிட்டக்கூடக் கேட்டேன்... அவனும் தெரியாதுன்னு சொல்லிட்டான் !"



"உங்க மகளை நீங்க பார்க்கவேண்டுமா சங்கர் அண்ணா ?"

சடாரென்று கேட்டாள் சாபிரா.

சங்கர் குலுக்கப்பட்டவன் போல் நிமிர்ந்தான்...

"அவ எங்கே இருக்கான்னு உனக்குத் தெரியுமா, சாபிரா."

அவனை இரக்கத்துடன் பார்த்தாள் சாபிரா...

"உங்க மகளும், உங்க மனைவியும் எங்கே இருக்காங்கன்னு நான் விவரம் தரேன்... ஆனா, அதுக்கு முன்னால, நீங்க எனக்கு ஒரு சத்தியம் செஞ்சு தரணும் !"

பரபரத்தான் சங்கர்...

"கேளு... என்ன சத்தியம் வேணும்ன்னாலும் பண்ணித்தரேன்... என் மனைவியையும், மகளையும் நான் பார்க்கணும் !"

★ ★ ★

## 20

சங்கரின் கண்களில் தெரிந்த பரபரப்பை கவனிக்கத் தவறவில்லை சாபிரா. அவனைத் தன் அருகில் அமரச் சொன்னாள்...

"நீங்க பயப்பட்ற மாதிரி உங்க மனைவியும், உங்க மகளும் அனாதரவா நடுத்தெருவுக்கு வந்துடலை. உங்க அம்மாவைத் தன்கூட வச்சிக்கிட்டு சொந்த மகன் போல பாத்துக்கிட்ட ஒரு நல்லவரு இருக்கார். உங்க மனைவியைத் தவிக்கவிடாம, முழுசாத் தன் பொறுப்புல எடுத்துக்கிட்டு, அவங்களுக்குத் தேவையான அத்தனை உதவிகளையும் அவர்தான் செஞ்சாரு...

"அவங்களுக்கு ஒரு மகள் பிறந்தவுடன் அதைத் தன்னோட மகளாவே ஏத்துக்கிட்டு, இன்னிவரைக்கும் அவளோட அப்பாவாகவே வாழ்ந்துட்டிருக்காரு... அவரைப் பார்த்தா, என்ன செய்வீங்க சங்கர் அண்ணா ?"

"கால்ல விழுந்து கும்பிடுவேன்.... சாகற வரைக்கும் நன்றியோட இருப்பேன்... யாரு ? யாரு அது ?"

"யாரை நீங்க நண்பன்னு நெனைச்சீங்களோ, அவர்தான் எதிரியானாரு... யாரை இப்ப எதிரியாப் பாக்கறீங்களோ, அவர்தான் உண்மையான நண்பனாவும் இருக்காரு !"

திகைத்தான் சங்கர்...



"நந்தாவா . எங்க எல்லாரையும் காட்டிக்கொடுத்த அதே நந்தாவா ?"

"ஆமா, சங்கர் அண்ணா... அவர் செஞ்சது தப்புதான். அந்தக் குற்ற உணர்ச்சிக்குப் பரிகாரமா, பார்வையில்லாத உங்க அம்மாவையும், ஆதரவில்லாம கர்ப்பமா இருந்த உங்க மனைவியையும் அவர் தன் குடும்பமா ஏத்துக்கிட்டாரு... உங்க மனைவிக்குப் பிறந்த மகளைத் தனக்கு பொறந்த மகளாத்தான் இன்னி வரைக்கும் பாத்துக்கிட்டிருக்காரு !"

"எப்படி . எப்படி உனக்கு இந்த விவரம்ல்லாம் தெரியும் சாபிரா ?"

"ராம்குமாரோட மகன் வினோத்தான் எனக்காக எல்லா விவரங்களையும் சேகரிச்சுக் கொடுத்தான்... நந்தாவோட கறுப்புப் பக்கத்தை மட்டும் பார்த்திருந்த எனக்கு, அவரோட பெருந்தன்மையைப் பாத்து அவர்மேல ஒரு மரியாதைகூட வந்தது. இன்னொரு விஷயம் தெரியுமா சங்கர் ? தனக்குன்னு ஒரு குழந்தை பிறந்தா, மேகா பேர்ல இருக்கற பிரியம் குறைஞ்சிடுமோன்னு உங்க மனைவி மூலமா அவர் இன்னொரு குழந்தைகூட பெத்துக்கலை !"

கண்களை மூடிக்கொண்டான் சங்கர். மூடிய இமைகளிலிருந்து கண்ணீர்திரண்டு கன்னத்தில் இறங்கியது...

"என் நந்தா ரொம்ப நல்லவன். அன்னிக்கு ராத்திரி பாகிஸ்தான்ல இருந்தபோது, ஏதோ ஒரு பிசாசு பிடிச்சு அவனை ஆட்டிவெச்சுருக்கு. அதனாலதான் அப்படி முட்டாள்தனமா நடந்துக்கிட்டான்... எனக்கு ஒரே ஒரு வருத்தம்தான். டில்லில என்னைப் பார்த்தபோது அவன் உண்மைகளையெல்லாம் சொல்லியிருக்கலாம். நான்

அவனைக் கட்டிப் பிடிச்சு பாராட்டியிருப்பேன். எதுக்காக என்னைக் கண்டு பயந்து ஓடி ஒதுங்கினான் ?"

பதில் எதுவும் சொல்லவில்லை சாபிரா.

"அனுசூயா அவன்கூட சந்தோஷமா இருக்காளா சாபிரா ?"

"உங்க மனைவியையும் மகளையும் நீங்களே போய்ப் பாருங்க சங்கர் அண்ணா. அவங்க ஒரு அன்பான குடும்பமா, சந்தோஷமா, நிம்மதியா வாழ்ந்துட்டிருக்காங்க. நாம அதுல கல்லெறியறதே, கத்தி வீசறதோ சரியா இருக்காது... அதனால தள்ளி நின்னு வேடிக்கை பார்த்திட்டு வந்திருங்க... நீங்க யாருன்னு அவங்ககிட்ட காட்டிக்க மாட்டேன்னு சத்தியம் பண்ணித்தாங்க !"

அவள் கையைப் பிடித்து அழுத்திக் கொடுத்தான் சங்கர்.

சென்னை -

விடிவதற்கு இன்னும் நேரமிருந்தது. இருள் விலகாத அதிகாலைப் பொழுது. மரங்களில் பட்சிகள் தூக்கம் விழித்து காலைக் கதிரவனின் முதல் கிரணங்களுக்காக ஆவலோடு காத்திருந்தன.

செய்தித்தாள்களைச் சுமக்கும் சைக்கிள்கள், பால் கேன்களைச் சுமக்கும் டெம்போக்கள், கறிகாய் மூட்டை களைச் சுமக்கும் மார்க்கெட் வேன்கள் என்று நகரம் சுறு சுறுப்பாகிக்கொண்டிருந்தது.

அந்த பள்ளிக்கூட மைதானம் தூங்கிக்கொண் டிருந்தது. அதன் சுற்றுச் சுவரில் அமர்ந்திருந்தான் சங்கர். கையில் ஒரு செய்தித்தாள் வைத்திருந்தான். அவன் அமர்ந்திருந்த இடத்திலிருந்து நந்தாவின் வீட்டு பின்புறம் தெளிவாகப் புலப்பட்டது. அசைவில்லாமல் அங்கேயே



பார்த்துக்கொண்டிருந்தான் சங்கர். அந்த வீட்டின் பின் கதவு திறக்கப்படுவது கண்டு சிலிர்த்தான்.

கலைந்த கூந்தலைச் சரி செய்தபடி கொல்லைப் புறத்தில் அடியெடுத்து வைத்தவளை விழி விலகாமல் பார்த்தான். அதோ... அனுசூயா ! என் அனுசூயா ! இல்லையில்லை, என்னுடையவளாய் இருந்த அனுசூயா !

நிழலுருவமாக முதலில் தென்பட்டாள். சூரியன் உயர, உயர வெளிச்சம் அவள் முகத்தில் தோய்ந்தது. விழிகள், உதடுகள், கழுத்து, அதில் ஊசலாடும் தாலி என்று ஒவ்வொன்றாக உருப்பெற்றது. சொற்ப நாட்கள் மட்டுமே அவளை அண்மையில் தரிசித்திருந்தபோது அவளிடம் தெரிபடாத அழகில் இப்போது மெருகு கூடியிருந்தது.

புறங்கையால் தன் கூந்தலை சரி செய்துகொண்டே புடவையை இழுத்து இடுப்பில் செருகிக்கொண்டாள். தோட்டத்துச் செடிகளுக்கு நீர் ஊற்றினாள்.

பின்கதவு மீண்டும் திறந்தது...

அதோ... 18 வயதில் பூந்தென்றல் போல தோட்டத் திற்குள் ஓடி வருகிறாளே... அதுதான் என் மகளா ? மேகாவை உந்தித் தள்ளி நந்தா இறங்கியதும் சங்கரின் சந்தேகம் முற்றிலும் தீர்ந்தது. நந்தா, மேகா, அனுசூயா எல்லாரையும் இருந்த இடத்திலிருந்து விழிகளால் பருகினான்.

ஓடிவந்து தடாலென்று தன் அம்மாவை பின்புற மிருந்து கட்டிப்பிடித்துக்கொண்டாள் மேகா. சட்டென்று திரும்பி மகளை செல்லமாக கன்னத்தில் தட்டினாள் அனுசூயா.

அனுசூயாவின் தலையில் உதிர்ந்திருந்த ஒரு இலைத் துணுக்கை எடுத்து எறிந்தான் நந்தா. அனுசூயா திடீரென்று உதறிக்கொண்டு கண்களைப் புறங்கையால்

கசக்கினாள். மேகாவிடம் அவள் ஏதோ சொல்வதும், மேகா நந்தாவை அருகில் இழுத்து, 'கவனி' என்று கட்டளையிடுவதும் புலப்பட்டது.

நந்தா, அனுசூயாவின் முகத்தைக் கையில் தாங்கி, அவளுடைய வலது இமையை சற்றே விரலால் உயர்த்திப் பிடித்து, தன் உதடுகளை மிக நெருக்கத்தில் கொண்டுபோய் ஊதுவதை கவனித்தான் சங்கர்.

அனுசூயாவின் கண்களில் விழுந்த தூசி இங்கே சங்கரின் கண்களில் உப்பாகக் கரித்தது. என்னவோ, அவர்களுக்கு மத்தியில்தானும் நின்றிருப்பதுபோல அவர்களுடைய செய்கைகள் அவனுடைய முகத்தில் சிறு புன்னகையைக் கொண்டுவந்தன.

என்னுடைய அனுசூயா ! என்னுடைய நந்தா ! என்னுடைய மேகா ! அவர்கள் அத்தனைபேரும் எனக்குச் சொந்தம்; ஆனால், அவர்கள் யாருக்கும் நான் சொந்தமில்லை. என்ன விதி இது ?

நாட்டின் எல்லையில் எத்தனையோ இரவுகள், அவன் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளாமல் ஒளிந்திருந்து எதிரிகளை வேவு பார்த்திருக்கிறான். இப்போது அவனுடைய சொந்தங்களையே, ஒளிந்திருந்து வேவு பார்ப்பது என்னவொரு அபத்தம் !

வெகு தற்செயலாக சங்கர் இருந்த திசையில் நந்தா நோக்கியதும் சட்டென்று காம்பவுண்டு சுவர் தாண்டி மறுபுறம் இறங்கிவிட்டான் சங்கர்.

நந்தா அவனை எதிர்பார்த்து, உஷாராக இருப்பான். சட்டென்று கண்டுபிடித்துவிடக்கூடும். மெல்ல, மெல்ல தன் முகத்தை உயர்த்தி மறுபடி நந்தாவின் வீட்டை சங்கர் பார்த்தபோது, உலர்த்தப்பட்டிருந்த துணிகளை கொல்லைப் புறக் கொடியிலிருந்து உருவிக்கொண்டிருந்தாள் அனுசூயா.



அவள் உள்ளே போய் மறைந்த பின்பும், அதே சுவரில் அமர்ந்திருந்தான் சங்கர்.

பிறகு, பக்கத்துத் தெருவில் புகுந்து சுற்றிக்கொண்டு வந்தான். நந்தாவின் வீடு இருக்கும் வீதியில், ஒளிந்து கொள்வதற்கு வசதியான இடம் எதுவும் இல்லை. தொலைபேசி இணைப்புகளை உள்ளடக்கியிருக்கும் தொலைபேசி ஜங்ஷன்பாக்ஸ் ஒன்று மட்டும் எதிர்ப்புறம் இருந்தது. அவன் பின்னே நின்றுகொண்டான். நந்தாவின் வீட்டு வாசலையே பார்த்துக்கொண்டிருந்தான்.

ஒரு வழியாக நந்தாவின் வீட்டுக் கதவு திறந்தது. மேகா வெளிப்பட்டாள். சிகப்பும், மஞ்சளும் கலந்த சுடிதாரில் எவ்வளவு ரம்யமாக இருக்கிறாள் என் மகள் ! வாஞ்சையுடன் அவளைப் பார்த்தான் சங்கர்.

"அப்பா..." என்று அவள் குரல் கொடுத்ததும் சிலிர்த்தான்.

ஆனால், அவள் அழைத்தது நந்தாவை. நந்தா வெளிப்பட்டான். மேகாவின் ஸ்கூட்டியை கேட்வரை கொண்டுவந்து கொடுத்தான். சட்டென்று அவன் கன்னத்தில் இதழ்களைப் பதித்தாள் மேகா.

"மேகா ! மறந்துடாதே. ஒருமணி நேரத்துக்கு ஒரு தடவை எனக்கு போன் பண்ணிட்டே இருக்கணும்," அவள் வண்டியை உதைத்துக் கிளப்பிக்கொடுத்தான் நந்தா.

அவளுடைய ஸ்கூட்டி புறப்பட்டு சங்கரைக் கடந்து விரைந்தது. நந்தா சற்று நேரம் வாசலில் தயங்கி நின்றுவிட்டு உள்ளே திரும்புவது தெரிந்தது. ஒளிந்திருந்த இடத்திலிருந்து வெளிப்பட்டான் சங்கர்.

தெருமுனையில் ஒரு காய்கறி வண்டி திரும்பியது. அதைப் பார்த்ததும் சங்கரின் உள்ளம் துள்ளியது. கறிகாய் வாங்குவதற்காக வெளியே அனுசூயா வரமாட்டாளா ?

அவசரம், அவசரமாக மீண்டும் பழைய இடத்தில் வந்து மறைந்து நின்றுகொண்டான். அவன் எதிர்பார்த்தப்படியே வெளியே வந்தாள் அனுசூயா.

பள்ளிக்கூடச் சுவரில் இருந்து பார்த்ததைவிட இப்போது சற்று நெருக்கமாக அவளைப் பார்க்க முடிந்தது. அவளுடைய வடிவான அந்த முகத்தைப் பார்த்ததும் அவனுள் அவனை அறியாமல் ஒரு ஏக்கம் பீறிட்டது. இனி அவள் அவனுக்கு இல்லை என்ற துக்கம் நெஞ்சை அழுத்தியது.

சட்டென்று அவள் எதிரே போய் நின்று, 'என்னை நினைவிருக்கிறதா?' என்று ஒரே ஒரு கேள்வி கேட்டால் என்ன?

மறைந்திருந்த இடத்திலிருந்து வெளிப்பட்டான் சங்கர்.

★ ★ ★



# 21

**அ**னுசூயாவைப் பார்த்ததும் தன் கட்டுப்பாட்டை மீறி செயல்படுவதை திடுக்கிடலோடு கவனித்தான் சங்கர்...

'ஐயோ, என்ன செய்யவிருந்தேன்!'

சாபிராவுக்கு செய்துகொடுத்த சத்தியம் அவன் கால்களைச் சிறைப்படுத்தியது. மீண்டும் நிழலில் பதுங்கினான்.

அனுசூயா அதிக நேரம் நிற்காமல் இரண்டொரு காய்களை வாங்கிகொண்டு சட்டென்று வீட்டுக்குள் திரும்பிவிட்டாள். அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது. மீண்டும் எப்போது அனுசூயா வெளியே வருவாள் என்று காத்திருந்தான் சங்கர்.

நந்தாதான் முதலில் வெளிப்பட்டான்...

"அனு, பத்திரமா வீட்டைப் பூட்டி வெச்சுக்கோ!" என்று சொன்னான்.

நந்தாவின் கார் வீட்டைவிட்டு வெளிப்பட்டதும், கேட்டை மூடிவிட்டு வீட்டுக்குள் திரும்பினாள் அனுசூயா.

சங்கர் தவித்தான். இப்போது அனுசூயா தனியாக இருக்கிறாள். அவள் வீட்டுக் கதவைத் தட்டலாமா?

'நான் உன் ஞாபகத்தில் இருக்கிறேன். அந்த சந்தோஷத்திலேயே மிச்ச வாழ்நாட்களைக் கழித்து விடுவேன்...' என்று சொல்லலாமா?

போகலாமா, வேண்டாமா என்று குழம்பி, அவன் தயங்கி வெளியே வருவதும், மீண்டும் ஒளிவதுமாக இருந்தபோது அவன் தோளில் ஒரு கை விழ, திடுக்கிட்டு நிமிர்ந்தான். அந்தப் பகுதியில் வசிக்கும் காவல்துறை அதிகாரி...

"ரொம்ப நேரமா உன்னைப் பாத்துட்டிருக்கேன். வடநாட்டு கொள்ளைக்கூட்டத்தைச் சேர்ந்தவன்தானே நீ?" என்று பிடரியில் ஒரு அடி விழுந்தது.

நந்தாவின் தொலைபேசி ஒலித்தது.

தொழிற்சாலையின் எல்லா இயந்திரங்களின் சப்தத்தையும் மீறி, "போலீஸ் ஸ்டேஷன்லேர்ந்து பேசறோம்... நம்ம தெருவுல ஒருத்தரைக் கைது பண்ணியிருக்கோம். அவர் உங்க நண்பர்ன்னு சொல்றாரு. தயவுசெஞ்சு ஸ்டேஷனுக்கு வரீங்களா?"

நந்தாவின் ரத்தம் வேகம் பிடித்தது. அவனுடைய ஒவ்வொரு மயிர்க்காலும் சிலிர்த்தது.

'ஐயோ! சங்கர் வந்துவிட்டானா?'

காவல் நிலையம் -

பெஞ்சில் உட்காரவைக்கப்பட்டிருந்தான் சங்கர். நந்தாவைப் பார்த்ததும் பதைத்து எழுந்தான். நந்தாவைப் பார்த்ததும் பரிச்சயமாப் புன்னகைத்தார் காவல் அதிகாரி...

"சார்! நம்ம தெருவுல இந்த ஆள் ஒளிஞ்சு நின்னுக்கிட்டு ஒவ்வொரு வீடா வேவு பாத்துட்டிருந்தான். கேட்டா, உங்களைப் பாக்க வந்ததா சொல்றான். இவனை உங்களுக்குத் தெரியுமா?"

சங்கரை மேலும், கீழும் பார்த்தான் நந்தா...



"ஸாரி சார்... இவனை முன்னே பின்னே பார்த்ததில்லை!" என்றான்.

அங்கிருந்து வெளியேறி, காரின் கதவைத் திறந்தவன் தயங்கி நின்றான். இதயம் வலித்தது. உள்ளே திரும்பினான். அவனைப் பார்த்ததும், காவல் அதிகாரி புருவங்களை உயர்த்தினார்.

"ஆபீசர்! அவனை எனக்குத் தெரியும்!"

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தெரியாதுன்னு சொன்னீங்க!"

"சொன்னேன். எங்களுக்குள்ள ஒரு சண்டை இருந்தது. அந்தக் கோபத்துல அப்படிச் சொன்னேன். அவனை விட்டுருங்க!"

அதிகாரியிடம் கை குலுக்கிவிட்டு நந்தா, சங்கரை அழைத்துக்கொண்டு வெளியே வந்தான். கார் கதவைத் திறந்தான்.

"நீ திரும்பி வருவேன்னு நான் நினைக்கல நந்தா," என்றான் சங்கர், மெல்லிய குரலில்.

"ஏன்?"

"அனுபவம்!"

வயிற்றில் குத்தப்பட்டதுபோல் உணர்ந்தான் நந்தா. "நீ... நீ... உனக்கு எப்படி சங்கர் என் வீட்டு முகவரி கிடைச்சுது?"

"உலகம் சின்னது, நந்தா. எங்கே போய் ஒளிஞ்சுக்க முடியும்? பயப்படாதே, நான் உன் வாழ்க்கைல குறுக்கிட மாட்டேன்!"

காரைச் செலுத்தினான் நந்தா.

மெல்லிய குரலில் தொடர்ந்தான் சங்கர்...

"என் நிலைமைய கொஞ்சம் யோசிச்சுப் பாரு நந்தா... 18 வருஷம்! இரும்புக் கதவையும், அதைப் பூட்டற பூட்டையும், முரட்டு ஆளுங்களையும் தவிர, நான் வேற எதையும் பாக்கலை. நசுங்கின அலுமினியத் தட்டையும், உடைஞ்ச பீங்கான் கிண்ணங்களையும் தவிர, நான் எதையும் கையாளலை...

"என் காதுல ஒலிச்சதெல்லாம் பாகிஸ்தான் ராணுவத்தோட, டாக், டாக்குங்கற பூட்ஸ் ஒலிதான். கனவுலயும் வந்து என்னை துரத்தினதெல்லாம் அந்த முரட்டு ஆளுங்களோட முகம்தான். 18 வருஷம் உயிரோட்டமே இல்லாம மரத்துப்போயிருந்த எனக்கு என் குடும்பத்தைப் பாக்கணும்ன்னு ஆசை இருக்காதா?

"டில்லிக்கு வந்து உன்னைப் பாக்கற வரைக்கும் எனக்குப் பொறந்தது ஆணா, பெண்ணான்னு கூடத் தெரியாது. எவ்வளவோ பெருந்தன்மையா என் குடும்பத்தை உன் பொறுப்புல எடுத்துக்கிட்ட நீ, நடந்ததை நடந்தபடி எங்கிட்ட சொல்லிருக்கக்கூடாதா? அனாதரவா டில்லில நடுரோட்டுல நிக்கவெச்சுட்டு வந்துட்டியே...?"

நந்தாவின் கண்கள் கலங்கின. கன்னங்களில், கண்ணீர் உருண்டு வழிந்தது...

"பயம் சங்கர், பயம்! அனுவையும், மேகாவையும் நான் இழந்துடப்போறேனோன்னு பயம்... அந்த பயத்துல, தெரிஞ்சே தப்பு பண்ணிட்டேன். என்னை மன்னிச்சுடு சங்கர்!"

"நந்தா! இப்ப நான் இங்க வந்திருக்கறது அனுசூயாவையோ, மேகாவையோ என்கிட்ட திருப்பிக் கொடுன்னு கேக்கறதுக்காக இல்ல. விதையைப் போட்டுட்டு, காணாமப் போனவன்நான். தோட்டமா அது



வளர்ந்தவுடனே அது என்னோடதுன்னு சொந்தம் கொண்டாடறது நியாயமில்லேன்னு எனக்கும் தெரியும். எனக்கு அனுவையும், மேகாவையும் பக்கத்தில இருந்து பாக்கணும். அவங்ககூட நாலு வார்த்தை பேசணும். அந்த ஏக்கம்தான் என்னை இங்கே கொண்டுவந்து நிறுத்திருச்சி!"

காரை நிறுத்தி, அவனைத் தயக்கமாகப் பார்த்தான் நந்தா...

"உனக்கு இருக்கற அதே உறுதி அனுவுக்கு இருக்குமான்னு தெரியலியே சங்கர்?"

"நான் இதே முகத்தோட வந்தாதானே அவர்களுக்கு அடையாளம் தெரியும்? நம்ம ஆர்மி குரூப்ல தயான்சிங் இருந்தானே... அவன் வந்திருக்கறதா சொல்லு, நான் யாருன்னு அவங்ககிட்ட சொல்லமாட்டேன், நந்தா. என்னை நம்பு ப்ளீஸ்..."

மாலை -

அரை இருளான உணவு விடுதி... காரை பார்க் பண்ணிவிட்டு நடக்கும்போது அவனுடைய இடுப்பிலிருந்து மேகாவின் கையை விலக்கினான் நந்தா...

"நாம சந்திக்கப்போற நண்பனுக்குக் குடும்பம் இல்ல. நாம ரொம்ப நெருக்கமா இருக்கறதைப் பாத்தா பொறாமைப்படுவான். அதனால, கொஞ்சம் விலகியே வா..."

நந்தாவின் இடுப்பைச் சுற்றிப் பிடித்திருந்த கையை விலக்க மறுத்தாள் மேகா...

"அந்தாளுக்கு குடும்பம் இல்லேன்னா, அது அவன் தலையெழுத்து, எனக்கு எங்கப்பா இருக்காரு; எங்கம்மா இருக்காங்க. நான் இப்படித்தான் ஜாலியாக வருவேன்!"

அவர்கள் ஒருவருடன் ஒருவர் இழைந்து நடந்து வருவதைப் பார்த்து கண்ணாடித் தடுப்புக்குப் பின் உட்கார்ந்திருந்த சங்கர் உடல் சிலிர்த்தான். ஒட்டியிருந்த தாடி, மீசை, அணிந்திருந்த தலைப்பாகை அத்தனையையும் கண நேரத்தில் துறந்துவிட்டு அனுசூயாவின் முன்போய் நிற்க வேண்டும் போன்ற துடிப்பு வந்தது.

'அனு! உன் சங்கர் வந்திருக்கேன்!' என்று அவள் முன் மண்டியிடத் தவித்தான். தன்னையே அதட்டிக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

அவர்கள் அருகில் வந்துவிட்டனர்.

சற்றே செயற்கையாகச் சிரித்தான் நந்தா...

"தயாள்! இது என் மனைவி அனுசூயா; இது எங்கள் மகள் மேகா!"

'என்', என்பதிலும், 'எங்கள்' என்பதிலும் அவன் கொடுத்த அழுத்தத்தை கவனிக்கத் தவறவில்லை சங்கர். அனுசூயாவைப் பார்த்து கைகளைக் கூப்பினான்...

"ஹாய் அங்கிள்! நைஸ் டு மீட் யூ..." என்று கையை நீட்டினாள் மேகா.

அங்கிள்! பெற்ற அப்பனை மகள் அழைக்கும் வினோதமான விளிச் சொல்!

மேகாவின் மிருதுவான கையைப் பிடித்ததும் தனக்குள் மின்சாரம் பாய்வதை உணர்ந்தான் சங்கர். நந்தாவின் விழிகள், சங்கரின் விழிகளைச் சந்திக்காமல் கூண்டுக்குள் பறக்கும் பறவைபோல் இங்கும், அங்குமாக தத்திக்கொண்டே இருந்தது.

"மேகா, இது உனக்கு..." என்று நீட்டினான் சங்கர். குரல் சீராக இல்லாமல் தடுமாறியது.



பரிசுக் காகிதம் சுற்றப்பட்டிருந்த அந்தப் பொட்டலத்தை வாங்கியவுடன் பரபரப்பாக பிரித்தாள் மேகா. உள்ளே ஒரு மொபைல் போன்!

"தாங்க்யூ, அங்க்கிள். ஆனா போனை மட்டும் வாங்கிக் கொடுத்தா போதுமா? இதுக்குப் புது கனெக்ஷன் வாங்கிக் கொடுத்து, மாசாமாசம் பில்லையும் நீங்க கட்டிட்டா நல்லாயிருக்கும்!"

உடனடியாக மேஜை மேலிருந்த அவள் புறங்கையை ஓங்கித் தட்டினாள் அனுசூயா...

"ஏய் கழுதை! எடுத்தவுடனே எப்படிப் பேசற?"

"அவளைத் தடுக்காதீங்க... எனக்கு இவளோட துடிப்பு ரொம்பப் பிடிச்சிருக்கு," என்றான் சங்கர்.

அவனுடைய விழிகளை சந்திக்க முடியாமல் பார்வையை நகர்த்திக்கொண்டாள் அனுசூயா...

"உங்களை எங்கேயோ, எப்பவோ பார்த்த மாதிரி இருக்கு," என்றாள்.

நந்தா பரபரப்பாக, "அன்னிக்கு ஆர்மி போட்டோ எல்லாம் காட்டினேனே... அதுல ஏதாவது குரூப்ல இவனோட முகத்தை நீ பாத்திருக்கலாம்!" என்றான்.

தன்னுடைய கண்கள் நனைவதை உணர்ந்தான் சங்கர். பொது இடத்தில் சத்தியத்தை மீறி தன்னை காட்டிக் கொடுத்துக் கொள்வோமோ என்ற அச்சம் வந்ததும் மனதை உறுதிப்படுத்திக்கொண்டான்...

"நான் கிட்டத்தட்ட 18 வருஷமா இந்தியாவுலயே இல்ல..." என்றான்.

"பொண்டாட்டி, குழந்தைங்க?"

"அவங்களையும் தொலைச்சுட்டேன்!"

"அவங்க பொம்மைங்களா என்ன, திருவிழாவுல கொண்டுபோய் தொலைக்கறதுக்கு! ஒரு வேளை, உங்க தாடி பிடிக்காம விலகிப் போயிட்டாங்களோ, என்னவோ?" என்றாள் மேகா குறும்பாக.

கோபத்துடன் திரும்பினான் நந்தா...

"மேகா! எதுல ஜோக்கடிக்கறதுன்னு ஒரு விவஸ்தையே கிடையாதா? ப்ளீஸ்! கொஞ்சம் ஒழுங்கா நடந்துக்க!"

"அவளை எதுவும் சொல்லாதே நந்தா," என்றான் சங்கர்...

"நம்மாலதான் முடியலை... அவளாவது ஒளிவு - மறைவு இல்லாம மனசுல தோணறதை வெளிப்படையா பேசட்டுமே!"

"மேகாவின் பக்கம் திரும்பினான் சங்கர்...

"உனக்கு மேகான்னு ஏன் பேர் வெச்சாங்க தெரியுமா?"

"ஆண் குழந்தை பிறந்தா, மேகநாதன்; பெண் குழந்தையா இருந்தா, மேகான்னு பேர் வெக்கணும்ன்னு குழந்தை வயத்துல இருந்தப்பவே முடிவாயிடுச்சு," என்றாள், அனுசூயா.

"மனுஷங்கதான் ஒரு நாட்டுக்கும், இன்னொரு நாட்டுக்கும் நடுவுல எல்லைக்கோடு போடறாங்க... எந்த வித்தியாசமும் இல்லாம, எல்லா இடத்துக்கும் மேகம்போல போய் வரணும்ன்னு எங்கப்பா ஆர்மில இருந்தபோது, என்பேரை முடிவு பண்ணினாராம்," என்றாள் மேகா.

'அந்த அப்பா நான்தான் கண்ணே!"

- சங்கரின் உள்ளம் கதற நந்தாவை நிமிர்ந்து பார்த்தான்.

★ ★ ★



## 22

மேகாவை பார்த்துப் புன்னகைத்தான் சங்கர்...

"உண்மைதான், மேகா. நமக்குத்தான் குறுகின மனசு. இது என்னோடது, அது உன்னோடதுன்னு பிரிக்கறோம்... நமக்குச் சொந்தம்னு நினைக்கிறதை விட்டுக்கொடுக்க முடியாம இறுக்கமா பிடிச்சுக்கறோம்... யாராவது தட்டிப் பறிச்சுடுவாங்களோன்ற பயத்துல எப்பவும் காவலுக்கு இருக்கோம்... பக்கத்துல வர்றவனைக்கூட எதிரியா நெனைக்கறோம்!"

சங்கரின் ஒவ்வொரு வார்த்தையிலும், வேறு ஒரு உள்ளர்த்தமும் பொதிந்து இருப்பதைக் கவனிக்கத் தவறவில்லை நந்தா.

"அட போங்கப்பா... இந்தமாதிரி ஒரே சென்டிமென்டலா பேசற மீட்டிங்னு சொல்லியிருந்தா, நான் வந்திருக்கவே மாட்டேன்... ஏதோ ஜாலியா கொஞ்ச நேரம் சாப்பிடுவோம், அப்புறம் ஒரு டிஸ்கோ ஆடுவோம்ன்னு நினைச்சு வந்தேன்!"

- சிரித்துக்கொண்டே சொன்னாள் மேகா. அந்தச் சூழ்நிலையை இயல்பாக்க நினைத்து சங்கரும் அந்தச் சிரிப்பில் கலந்துகொண்டான்...

"உன்னைப்போல ஒரு மகள் இருந்தா, நான் வாழ்க்கைல் வேற எதையுமே எதிர்பார்க்க மாட்டேன் மேகா," என்றான் சங்கர்.

"தயாள் சார் ! எங்கப்பா அப்பவே சொன்னாரு. நாம பாக்கப்போறோமே, அவரு தனி ஆள். குடும்பமா இருக்கறதைப் பார்த்தா, பொறாமைல வெந்துபோயிடுவாரு, ஜாக்கிரதையா தள்ளியே உக்காருன்னு சொன்னாரு !"

"ஏய், ஒழுங்கா என்ன வேணும்னு பாத்து ஆர்டர் பண்ணு..." என்று சற்றே கடுப்பாக சொன்னாள் அனுசூயா.

"தயாள் சார் ! உங்களுக்கு ?"

"மண்ணும், கல்லும் கலந்த சாப்பாடைக்கூட சாப்பிட்டு ஜீரணம் பண்ணிப் பழகிட்டேன்மா. நீ எது ஆர்டர் பண்ணினாலும், சந்தோஷமா சாப்பிடுவேன் !"

சப்ளையரை அருகில் கூப்பிட்டாள் மேகா.

இரவு -

அந்த வாடகை அறையில் மூடப்பட்ட ஜன்னல் வழியே தெரு விளக்கின் வெளிச்சம் கசிந்து கொண்டிருந்தது. கட்டிலின் முனையில் அமர்ந்திருந்தான் சங்கர். தாடியும், மீசையும் மேஜை மீது கிடந்தன. கண்களை மூடினான். மறுபடி, மறுபடி இமைகளுக்குள் நர்த்தனமாடினாள் மேகா.

"நான் என்ன ஆயுள் கைதியா ? மரண தண்டனை விதிக்கப்பட்டவனா ? உலகில் யாரும் செய்யாத கொடும் பாவங்களைச் செய்துவிட்ட பாவியா ? என் மகளிடம் என் முகத்தைக் காட்ட முடியாதவனாகிவிட்டேனே ! அவளை இன்னும் ஒரே ஒருமுறை நான் பார்க்க வேண்டும்..."

"வேண்டாம்... வேண்டாம்..." என்று உள்ளுணர்வு ஒருபுறம் எச்சரித்தபோதும், பாசமும், ஆசையும், சபலமும் சங்கரை வதைத்தன.

"ஏய் அனு !"



மேகாவின் குரல் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினாள் அனுசூயா.

"ஏய், கொரங்கு... அம்மாவை பேர் சொல்லிக் கூப்பிடறே ? என்றான் நந்தா.

"ஏன் ? எங்கம்மாவை பேர் சொல்லிக் கூப்பிடற உரிமை எனக்கில்லையா ? அனு, அனு, அனு ! இன்னிக்கு ஒரு ஆளைப் பாத்தியே... தயாள் ! அவர் தாடியைப் பாத்தியா ?"

"ஏன் ? அந்த தாடிக்கு என்ன ?"

"அதைப் பார்த்தா, ஒட்ட வெச்சுட்டு வந்த மாதிரி இல்ல ?"

"மேகா !" அதட்டினான் நந்தா.

"தேவையில்லாம உளறிட்டிருக்காதே... வேற வேலையிருந்தாப் பார். போய்ப் படு..."

அனுசூயா காதில் ஏதோ கிசு கிசுத்தாள் மேகா.

நந்தாவிடம், "அந்த வினோத் நாளைக்கு அவங்க அம்மாவைப் பாக்கறதுக்காக பாண்டிச்சேரி வர்றானாம். அவங்கம்மாவுக்கு இவளை அறிமுகப்படுத்தணும்ன்னு கூப்பிட்டிருக்கான். போகறதுக்கு அனுமதி கேக்கறா," என்றாள் அனுசூயா.

"தனியாவா ? இப்ப இருக்கற சூழ்நிலைல உன்னை எங்கேயும் தனியா அனுப்பனும்னா, பயமாயிருக்கு !"

"ஆரம்பிச்சுட்டாரு... என்னை யாரும் கடத்திட்டுப் போயிட மாட்டாங்கப்பா !"

சற்று யோசித்தான் நந்தா...

'சங்கர் நல்லவன். செய்து கொடுத்த சத்தியத்தை அவ்வளவு எளிதாக மீறமாட்டான் !'

"சரி ! ஆனா, சாயந்தரம் ஆறு மணிக்குள்ள வீடு திரும்பிடணும். புரிஞ்சுதா ?"

"தாங்க்யூ டாடி... தாங்க்யூ. இனிமே எதுவா இருந்தாலும் நேரடியா உங்ககிட்டயே அப்ளிகேஷன் போடறேன். குறுக்கே இந்த அம்மாவைக் கூப்பிட்டா, ரொம்ப, 'ஷோ' காட்டறாங்க..." என்று அனுசூயாவிற்கு பழிப்பு காட்டினாள்.

மறுநாள் -

பாண்டிச்சேரி பஸ் நிறுத்தத்திலேயே காத்திருந்தான் வினோத்.

ஓடிப்போய் அவன் கைகளைப் பற்றிக்கொண்டாள் மேகா...

"பார்க்கறதுக்குக் கொஞ்சமாவது டீசன்ட்டா. இருக்கேனா ?"

"ஒரிஜனல் மூஞ்சியை அப்படி மாத்த முடியுமா என்ன ?" என்று சிரித்தான் வினோத்.

அவள் கையைப் பற்றி பாண்டிச்சேரி வீதியில் நடந்தான் வினோத்.

தெருத் திருப்பத்தில் சட்டென்று நின்றாள் மேகா. வினோத்தை நிழலுக்குள் இழுத்தாள்.

"ஒரு ஆள் என்னை சென்னைலேர்ந்தே 'பாலோ' பண்ணிட்டு வர்றான் வினோத்..."

அவளை எதிர்பாக்காமல், அந்தத் தெருமுனைக்குள் நுழைந்தான் சங்கர். அவன் வழியை மறித்து நின்றாள் மேகா...

"ஹல்லோ... யார் சார் நீங்க ? எதுக்காக என் பின்னாலேயே வர்றீங்க ?"



திடுக்கிட்ட சங்கர், தடுமாறினான்...

'ஐயோ ! என்னை அடையாளம் கண்டுகொண்டு விடுவாளா ?'

சட்டென்று முகத்தை திருப்பிக்கொண்டு நகரப் பார்த்தான்.

அவன் கையைப் பற்றினாள் மேகா...

"நில்லுங்க ! உங்களை எங்கயோ பாத்திருக்கேன்..."

அவள் கையை உதறிவிட்டு வேகமாக திரும்பி நகர்ந்துவிட்டான் சங்கர்.

விரல்களைச் சொடுக்கினாள் மேகா...

"வினோத் ! இது யாருன்னு எனக்குத் தெரியும்..."

"யாரு ?" என்றான் வினோத்

"இவன் பேர் சங்கர். எங்கப்பாகூட ஆர்மில வேலை பாத்தவன்; சொந்த நாட்டுக்கு துரோகம் பண்ணின மோசக்காரன். ஏதோ ஒரு விதத்துல எனக்குச் சொந்தமாகணும். அடுத்த தடவை அவன் துரத்தினா, நடு வீதில நிக்க வெச்சு என் செருப்பாலயே அவனை அடிப்பேன். ராஸ்கல் !"

குமுறிப் பேசினாள் மேகா.

"யாரைப்பத்தியும் அவசரப்பட்டு முடிவு செய்யாதே மேகா," என்ற வினோத், "எங்கம்மாவைப் பார்க்கும்போது, மூஞ்சியை இப்படி கோபமா வச்சிக்காதே !" என்றான்.

சங்கர் போன திசையைப் பார்த்துவிட்டு, முகத்தை இயல்பாக்கிக்கொண்டாள் மேகா. வினோதுடன் நடக்க ஆரம்பித்தாள்.

மேகாவைப் பார்த்ததும், அவளை ஆசையுடன் கட்டிப்பிடித்து நெற்றியில் முத்தமிட்டாள் ராம்குமாரின் மனைவி...

"நீ ரொம்ப அழகா இருக்கே... எங்க வினோத் பொதுவா பொண்ணுங்க பக்கம் திரும்பிப் பாக்காதவன். அவனையே ஒரேயடியா சாய்ச்சிட்டியே... வினோதோட அத்தை உன்னைப் பாக்கணும்ன்னு துடிச்சுட்டிருக்காங்க..." என்றாள்.

உள் அறையில் அமர்ந்திருந்த சாபிரா எழுந்து வெளியே வந்தாள். மேகாவைப் பார்த்ததும் அவள் கண்களில் பிரகாசம்...

"மகளே ! வினோத் ரொம்ப நல்ல பையன். நீயும், அவனும் பல வருஷம் சந்தோஷமா வாழணும்..." என்று மேகாவை அணைத்து முத்தமிட்டாள்.

மேகா, அவள் கால்களைத் தொடக் குனிந்தபோது தோள்களைப் பிடித்துத் தடுத்தாள்...

"வேண்டாம்... மரியாதை மனசுல இருந்தாப் போதும் !"

பாகிஸ்தானிலிருந்து வந்தவள், வினோதின் மீது அபாரப் பிரியம் வைத்திருப்பவள் என்று சாபிராவைப் பற்றி ஏற்கனவே மேகாவிற்கு எடுத்துச் சொல்லியிருந்தான் வினோத். சற்று நேரம் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர்.

திடீரென்று பொறுப்புடன் பேசினாள் மேகா...

"உங்ககிட்ட வினோத் சொல்லிட்டாரா தெரியலை... எங்கப்பா இருக்காரே நந்தா... அவருக்கு நான் பொறக்கலை !"

"தெரியும், மேகா ! நந்தா, சங்கர் ரெண்டுபேரும் என் கணவர் ராம்குமார் தலைமைலதான் பாகிஸ்தானுக்குப்



போனாங்க... அங்கே நடக்கக்கூடாதது நடந்துடுச்சு... சங்கர் திரும்பிவரலை. நந்தாதான் உங்களைப் பொறுப்பாப் பாத்துக்கிட்டாருன்னு தெரியும் !"

"ஆமா ஆன்ட்டி... என்னைப் பொறுத்தவரைக்கும் நந்தாதான் எங்கப்பா; எங்கம்மாவை முதல்ல கல்யாணம் பண்ணிக்கிட்ட சங்கர் தேசத்துரோகி... ஒருவேளை, அவன் எங்க கல்யாண நேரத்துல வந்து ஏதாவது கலாட்டா பண்ணினா, நீங்க கலங்கிப் போயிடக்கூடாது !"

மேகாவின் தோளைத் தொட்டு அழுத்தினாள் சாபிரா...

"அவன், இவன்னு ஏம்மா மரியாதை இல்லாம பேசற ? என்ன இருந்தாலும் சங்கர் உங்கப்பா இல்லையா ?"

"இல்லை, அந்த ஆளு எங்கப்பா இல்லை. தேசத்துக்கு துரோகம் பண்ணினவனை ஒருக்காலும் நான் மன்னிக்கத் தயாராயில்ல !"

"வினோத்... இவ ரொம்ப சூடா இருக்கா... இவளை ஷாப்பிங் அழைச்சுட்டுப் போகணும்ன்னு சொல்லிட்டிருந்தியே..."

முகத்தை இயல்பாக்கிக்கொண்டாள் மேகா...

"ஹை ! எனக்கு என்ன வாங்கித் தரப்போறே, வினோத் ?"

"ஒரு சமோசா," என்றான் வினோத் சிரிக்காமல்.

சற்றே குழப்பத்துடன் பாண்டிச்சேரியின் வீதிகளில் காரைச் செலுத்தினான் நந்தா. திடீரென்று அவனுக்கு ஒரு போன் வந்திருந்தது.

"நான் வினோதோட அம்மா பேசறேன். மேகாவோட கல்யாண விஷயமா உங்ககிட்ட நான் மனசு விட்டுப் பேச

வேண்டியிருக்கு. தயவு செஞ்சு நீங்க மட்டும் தனியாப் புறப்பட்டு வாங்க, உங்க மனைவி வேண்டாம். அவங்ககிட்ட சொல்லவும் வேண்டாம்..."

'என்னவாக இருக்க முடியும்?' குழப்பமான கவலையுடன் வினோதின் முகவரியைத் தேடினான் நந்தா.

★ ★ ★



## 23

**பா**ண்டிச்சேரி -

வினோதின் முகவரியைக் கண்டுபிடித்து, காரை நிறுத்தினான் நந்தா.

அழைப்பு மணியை அழுத்த, கதவைத் திறந்த வினோதின் அம்மாவிடம் வாங்கி வந்திருந்த பழங்களைக் கொடுத்தான். கைகளைக் கூப்பினான்.

"ராம் குமாருக்குக் கீழே நான் வேலை செஞ்சிருக்கேன்!" என்றான்.

"தெரியும், உள்ளே வாங்க..."

உள்ளே நுழைந்ததும், "என்னை அடையாளம் தெரியுதா?" என்று குரல் வர, நிமிர்ந்தான்.

கேட்டவளை மேலும், கீழும் பார்த்தான்.

"எங்கேயோ பார்த்திருக்கேன்... ஆனா..."

"பழகின முகங்கள்லாம் உங்களுக்குச் சீக்கிரம் மறந்துபோயிடுது நந்தா அண்ணா..."

அந்த, 'நந்தா அண்ணா' என்ற உச்சரிப்பு அவனை நிமிர்த்தியது.

"ஏய்! சாபிரா! நீ எப்படி இங்கே?"

'அவன் முகத்தில் ஒரு பூரிப்பு வந்தது. உடனே அதை அழுத்திக்கொண்டு அச்சம் வந்தது... என் இறந்த காலம் பற்றி அறிந்தவளாயிற்றே இவள்!'

"உக்காருங்க அண்ணா... மேகாவும், வினோதும் வெளியே போயிருக்காங்க... நான்தான் உங்களைப் பார்க்கணும்ம்னு சொன்னேன்!"

அவர்களுக்குப் பழச்சாறு வந்தது.

அடுத்த சில நிமிடங்களில் கேப்டன் அவ்வருடன் வாழ்ந்த கசப்பான காலம் பற்றியும், பிற்பாடு இந்திய எல்லைக்குள் கொண்டுவந்து விடப்பட்டது பற்றியும் சுருக்கமாகச் சொன்னாள் சாபிரா.

"வினோத் ஆசைப்படறது உங்க மகள்ன்னு தெரிஞ்சதும், உங்களை சந்திக்கணும்ம்னு தோணிச்சு, நந்தா அண்ணா!"

"சென்னைக்கு வா, சாபிரா..."

"நந்தா அண்ணா... ரொம்ப நாளா என்னைப் போட்டு குடைஞ்சுட்டிருக்கற ஒரு கேள்விக்கு எனக்கு பதில் தெரியணும்... அன்னிக்கு ஏன் அப்படிப் பண்ணினீங்க?"

வெகு திடீரென்று சாபிரா கேள்வியை வீசினாள்.

கலக்கத்துடன் வினோத்தின் அம்மாவைப் பார்த்தான் நந்தா...

"அதையெல்லாம் இப்ப பேசணுமா, சாபிரா?" என்றான்.

"ஆமா... பேசியே ஆகணும்!"

நந்தா, தடுமாறினான். சட்டென்று முகத்தைப் பொத்திக்கொண்டான். வலது கையில் இரண்டு விரல்களே இல்லாத இடைவெளி வழியே அவன் முகம் தெரிந்தது.



"என் விரலை உடைச்ச மாதிரி உன்னை ஏதாவது பங்கப்படுத்திடுவாங்களோன்னு பயந்துதான் நான் அப்படி ஈனத்தனமா நடந்துக்கிட்டேன்... ஆனா, அதனால நீ மோசமான நரகத்துல வாழ்வேன்னு நெனைக்கல!"

"உங்க மனைவிக்கோ, மகளுக்கோ உண்மை தெரியுமா?"

"தெரியாது சாபிரா. என்னை ஒரு ஹீரோவாவே மேகா நினைச்சுட்டிருக்கா. உயிருக்குப் பயந்து, என்கூட இருந்தவர்களை காட்டிக்கொடுத்தவன்னு என்னைப்பத்தி அவளுக்குத் தெரிஞ்சிட்டா, என்மேல இருக்கற மதிப்பும், மரியாதையும் போயிடும்!"

நந்தாவின் குரல் சுருதி தப்பித் தழுதழுத்தது.

"உங்க கணவருக்கும் நான் துரோகம் பண்ணிட்டேன்!" என்றான், ராம்குமாரின் மனைவியிடம்.

"எந்த மனுஷனுக்கும் ஏதோ ஒரு கட்டத்துல தைரியம் போயிடும். அன்னிக்கு உங்களுக்குப் போயிருச்சு. அதுகூடப் பரவாயில்ல... ஆனா, இந்தியாவுக்குள்ள வந்த பிறகு எதுக்கு அனாவசியமா சங்கர்தான் துரோகம் பண்ணினாருன்னு பொய் சொன்னீங்க?"

"அந்த விஷயத்துல நான் சறுக்கிட்டேன் சாபிரா... தன்னோட உயிர் போனாக்கூட இந்தியாவுக்கு எதிரான தகவல் தரமாட்டேன்னு சொன்னான் சங்கர். எல்லைல வச்சி, அவனை சுட்டதும், அவன் செத்துட்டதா நெனைச்சேன்... மறுத்துப் பேச அவன் வரமாட்டான்கற தைரியத்துல, பழியை அவன் மேலத் தூக்கிப் போடலாம்ன்னு நெனைச்சிட்டேன்.

"ஆனா, அந்த நிமிஷத்துலேர்ந்து என்னுடைய நிம்மதி போச்சு. நான் சொன்ன பொய் எனக்குள்ள போய் உக்காந்து குளவி மாதிரி குடைஞ்சுது. சங்கரோட

மனைவியையும், அவனோட மகளையும் மனசார ஏத்துக்கிட்ட பிறகுதான் சமாதானம் ஆச்சு!"

கண்கலங்கியிருந்தான் நந்தா.

"பதினெட்டு வருஷத்துக்கு முன்னால நீங்க தைரிய மில்லாம இருந்திருக்கலாம் நந்தா அண்ணா. ஆனா, இப்ப நீங்க ஒரு மகளுக்கு அப்பா. வாழ்க்கைல எத்தனையோ ஏற்ற, இறக்கங்களைப் பாத்துப் பக்குவப்பட்டிருப்பீங்க. இப்ப வெளிப்படையாக நீங்க பண்ணின தப்பை ஒத்துக்க முடியுதான்னு தெரிஞ்சுக்க ஆசைப்பட்டேன்!"

"என்னால உங்ககிட்ட வெளிப்படையா பேச முடியும் சாபிரா; ஆனா, என் மனைவிக்கோ, மகளுக்கோ சொல்ல முடியாது. அவங்க என்னைப்பத்தி வெச்சிருக்கற கண்ணாடி பிம்பம் நொறுங்கிடும்... அனுசூயா, மேகா ரெண்டுபேரையும் என் உயிருக்கு மேலா நெனைச் சிருக்கேன்... இப்ப நாங்க சந்தோஷமான குடும்பமா இருக்கோம் சாபிரா. நான் பண்ணின தப்புக்கு என் மகளுக்கு தண்டனை குடுத்துடாதீங்க!

சாபிராவின் எதிரில் மண்டியிட்டு நந்தா அழ ஆரம்பித்தான். ராம்குமாரின் மனைவி அவன் தோளைத் தொட்டாள்...

"நந்தா சார்... தப்பை உணர்ந்துட்டாப் போதும். அதைவிடப் பெரிய பரிகாரம் எதுவும் இல்ல. உங்களுக்கு ஒரு உறுதி நான் தர்றேன். நீங்க செஞ்ச தவறுக்காக உங்க மகளை ஒருநாளும் நாங்க பழிவாங்க மாட்டோம்!"

"ரொம்ப நன்றிம்மா!" என்று கண்களைத் துடைத்துக்கொண்டான் நந்தா!

"நாம சந்திச்சதைப் பத்தி மேகாகிட்ட நீங்க சொல்ல வேண்டாம்!" என்றான்.



ராம்குமாரின் மனைவியும் சாபிராவும் பார்வைகளைப் பரிமாறிக்கொண்டனர்.

"சரி! தைரியமா போயிட்டு வாங்க," என்றாள் சாபிரா.

மனதில்லாமல் அவர்களிடமிருந்து விடைபெற்றான் நந்தா.

**சா**பிராவிடம் நந்தா சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் கேட்டுக்கொண்டு உள்ளே அமர்ந்திருந்தாள் மேகா. அமில ஊற்றில் நனைந்து வந்தவள் போல முகம் விதிர்த்துப் போயிருந்தது. அவள் முகத்தில் வழக்கமாகக் காணப்படும் துடிப்பும், குறும்பும், வேடிக்கையும் காணாமல் போயிருந்தன.

வெள்ளாளத் தெருவில் இருந்த ஒரு டி.வி.டி., கடையில் வினோதுடன் வெவ்வேறு திரைப்படங்களின் குறுந்தட்டுகளை புரட்டிக்கொண்டிருந்தபோது, சாபிராவிட மிருந்து அழைப்பு வந்துவிட்டது.

'மேகா! அத்தை போன் பண்றாங்க... வீட்டுக்குப் போகலாம். ஒரு முக்கியமான விருந்தாளி வர்றார்...'

'யாரு?' என்றாள் மேகா.

'சஸ்பென்ஸ்!' என்று சொல்லி அழைத்து வந்தான், வினோத் உள்ளறையிலேயே இருப்போம் என்று அவளைத் தன்னருகில் அமர்த்திக்கொண்டான்.

எரிமலைகளை அவள் மடியில் கொட்டிவிட்டு, நந்தா விடைபெற்றுப் போனவுடன், அடக்கி வைத்திருந்த அழுகை பொங்கி வெடித்தது. அவள் தோள்களை அணைத்துக்கொண்டான்.

"ஐயோ! சங்கர் பேர்ல எவ்வளவு வெறுப்பை உருவாக்கி வெச்சிருக்கேன். அவரை நடுத்தெருவுல நிக்க

வெச்சு, செருப்பால அடிப்பேன்னுல்லாம் எவ்வளவு மோசமாப் பேசிட்டேன்? எனக்கு எங்கப்பாவை உடனே பார்க்கணும், வினோத்!"

"இந்நேரம் அவரோட கார் பாண்டிச்சேரி எல்லையைத் தாண்டியிருக்கும் மேகா...

"நான் சொன்னது எனக்கு வாய்ச்ச அப்பாவை இல்ல; என்னோட சொந்த அப்பாவை. சங்கரை எனக்குப் பாத்தாகணும். அவர் கால்ல விழுந்து பாதங்களைக் கட்டிப் பிடிச்சிக்கிட்டு அழணும் வினோத்!"

"நிஜமாவா சொல்றே?"

"ஆமா, ஆமா... அவரைப் பாண்டிச்சேரில பாத்தோமே... கண்டுபிடிக்கலாம்... வா, வினோத்!" என்று அவள் அவனை எழுப்பினாள்.

"மகளே..." என்று குரல் வர, நிமிர்ந்தாள்.

அந்த அறை வாசலில் வெளிச்சமும், நிழலுமாக நின்றான் சங்கர். வினோதை உதறினாள் மேகா. இரண்டே எட்டில் சங்கரை நெருங்கினாள். ஆனால், சட்டென்று அவனைக் கட்டிப் பிடிக்க முடியவில்லை. அவனைப் பார்த்ததும் பீறிட்டு எழ வேண்டிய பாசம் சற்று தயங்கிவிட்டுத்தான் மனதில் துளிர்த்தது.

அவள் புகைப்படத்தில் பார்த்திருந்த சங்கருக்கும், இந்த சங்கருக்கும் நிறைய வித்தியாசம் இருந்தது. இவன் மிகவும் தளர்ந்திருந்தான். 18 நீண்ட வருடங்கள் அவனிடம் விட்டுப் போயிருந்த காயங்களும், தழும்புகளும் அவனுடைய அடையாளத்தை வெகுவாக மாற்றியிருந்தன.

தன் இரு கரங்களையும் நீட்டி, மேகாவின் தோள்களில் வைத்தான் சங்கர்...

"மகளே! என்னை ரொம்ப வெறுத்துட்டியா?"



தாங்க முடியாமல் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள் மேகா...

"ஸாரிப்பா... ஸாரி..." என்று அழுதாள்.

"ச்சீ! தப்பு உன் பேர்ல இல்லம்மா..."

கண்களைப் புறங்கையால் துடைத்துக்கொண்டாள் மேகா...

"இனிமே அந்த துரோகி வீட்டுக்கு நான் போக மாட்டேன்," என்றாள்.

அவளை அமர்த்தி பக்கத்தில் உட்கார்ந்தான் சங்கர்...

"தப்பு மேகா... அப்படி சட்டுன்னு நந்தாவை நீ உதறக் கூடாது. நீயும், அனுசூயாவும், நந்தாவும் எவ்வளவு அன்னியோன்னியமா வாழ்ந்துட்டிருக்கீங்கன்னு நான் தள்ளி நின்னு பாத்தேன் மேகா. நான் இருந்திருந்தாகூட இந்த அளவுக்கு உங்ககிட்ட பாசம் காட்டியிருப் பேனான்னு எனக்குத் தெரியல. நந்தா, மிக நல்ல கணவனா இருக்கான்; மிக நல்ல அப்பாவா இருக்கான். இன்னும் என்ன வேணும்?"

"மிக நல்ல நண்பனா இல்லாமப் போயிட்டாரே..." என்று அழுதாள் மேகா.

"ஒவ்வொரு மனுஷனுக்குள்ளயும் ஒரு வீரன் இருக்கான்; ஒரு கோழை இருக்கான். பாகிஸ்தான்லதான் கோழையா நடந்துக்கிட்டான் நந்தா. ஆனா, எப்ப உங்களைத் தன் குடும்பமா ஏத்துக்கிட்டானோ, அப்பவே அவன் வீரனாயிட்டான். பார்வையில்லாத எங்கம்மாவை, சொந்த மகன் போல கடைசிவரைகூட இருந்து பராமரிச் சிருக்கான்... அவங்க இறந்தபோது, மகனா இருந்து அவங்களுக்கு கொள்ளி போட்டிருக்கான்...

"ஒரு கணவன், தன் மனைவிகிட்ட எவ்வளவு அன்பு காட்ட முடியுமோ, அதைவிட அதிகமாவே அனுசூயா கிட்ட அன்பாயிருந்திருக்கான்... ஒருத்தன் தனக்குப் பிறந்த குழந்தை பேர்ல பாசம் வெக்கறது பெரிய விஷயம் இல்ல மேகா. ஆனா, தன்னுடையது இல்லன்னு தெரிஞ்சும் உம்மேல வச்சானே, அந்தப் பாசம் ரொம்ப மேன்மையான பாசம். அந்த விதத்துல, அவன் எனக்கு மிக நல்ல நண்பனாத்தான் இருந்திருக்கான்!"

"ஆமா மேகா," என்றாள் சாபிரா.

"அசிங்கத்தை மிதிச்சுட்டா, அதுக்காக காலை வெட்டிப்போட முடியுமா? கழுவிட்டு சுத்தப்படுத்திக்கிட்டா போதும். தன் மனசுல இருக்கற பாரத்தையெல்லாம் இன்னிக்கு இங்க இறக்கி வெச்சுட்டாரு நந்தா. நீ வேண்டாம், வேண்டாம்ன்னு ஒதுக்கறியே, வெறுக்கறியே, அந்த சங்கர் நீ நினைக்கற மாதிரி துரோகி இல்லன்னு உனக்குத் தெரியணும்ன்னுதான் நந்தா வாயாலேயே உண்மையை வரவழைச்சேன்... மத்தபடி, நந்தா பேர்ல உனக்கு இருக்கற மரியாதையை கெடுக்கணுங்கறது எங்க ஆசை இல்ல!"

"உன்மேல உயிரையே வெச்சிருக்கான் நந்தா. அவனை வெறுத்துடாத மேகா!" என்றான் சங்கர்.

இருட்டை வெறித்துக்கொண்டு படுத்திருந்தாள் மேகா. காலையில் பாண்டிச்சேரியில் வெடித்த பூகம்பம் இன்னும் அவளுள் அதிர்வுகளை ஏற்படுத்தியிருந்தது.

அவள் அருகில் வந்து குனிந்து முத்தமிட்டாள் அனுசூயா.

"குட்நைட் பிசாசு..." என்றாள்.

வழக்கமாக அம்மாவுக்கு முத்தம் கொடுத்து, படுக்கை யறைக்குள் அவளை விரட்டித் தள்ளும் வேகம் மேகாவிடம் இப்போது இல்லை.



"அதுக்குள்ள தூங்கிடுச்சு கழுதை!" என்று சொல்லி விட்டு, அனுசூயா படுக்கையறைக்குள் நடந்து போகும் மெட்டி ஒலி கேட்டது.

படுக்கையறைக் கதவு சாத்தப்பட்டது. 'ணக்' என்ற அந்தச் சிறிய ஒலியே மேகாவுக்கு சம்மட்டியால் அடித்தது போலிருந்தது. சட்டென்று படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். உடல் எங்கும் வியர்த்துவிட்டது.

நந்தாவையும், அனுசூயாவையும் நெருக்கமாகப் பார்த்தபோதெல்லாம் கிளர்ந்து எழுந்த சந்தோஷம், இப்போது முற்றிலுமாகத் தொலைந்து போயிருந்தது.

'எந்த உரிமையுடன் என் அம்மாவை நந்தா தொடலாம்? அவள் என் அப்பாவுக்கு உரியவள். அவர் துரோகம் செய்ததாகப் பொய்யான சித்திரம் எழுதி, அவர் பேரில் வெறுப்பை உண்டு பண்ணித்தானே என் அம்மாவின் கையைப் பிடித்தான் நந்தா? ஐயோ! என் அம்மா யாரோ ஒருவனுடன் படுத்திருப்பதா?'

சட்டென்று எழுந்தாள்...

"அம்மா, அம்மா..." என்று படுக்கையறைக் கதவைத் தட்டினாள்.

★ ★ ★

## 24

கதவைத் தட்டிய வேகத்திலேயே வெட்கப்பட்டாள் மேகா.

ஆனால், கணநேரத்தில் கதவைத் திறந்து அங்கே நின்றாள் அனுசூயா.

"என்னடா... என்ன ஆச்சு?"

விளக்கம் சொல்ல முடியாமல் சட்டென்று அம்மாவைக் கட்டிப் பிடித்துக்கொண்டாள் மேகா...

"அம்மா... இன்னிக்கு நீ என்கூடப் படுத்துக்கயேன். ப்ளீஸ்..."

கட்டிலில் உட்கார்ந்திருந்த நந்தா சற்றே திடுக்கிட்டு அவளைப் பார்த்தான்.

"என்ன மேகா... ஏதாவது கெட்ட சொப்பனம் கண்டு பயந்துட்டியா?"

அவன் முகத்தைக்கூட நிமிர்ந்து பார்க்க விரும்பவில்லை மேகா...

"அம்மா என்கூடப் படுக்கட்டும். ப்ளீஸ்..." என்றாள்.

"வாயேண்டா. மூணுபேருமே சேர்ந்து பெட்ரூம்ல படுத்துக்கலாம்..." என்று அவளை உள்ளே இழுத்தாள் அனுசூயா.



"இல்லம்மா... நீ என்கூட வந்து படும்மா. ப்ளீஸ்..."

எதற்காக இவள் அடம் பிடிக்கிறாள் என்பது தெரியாமல் நந்தாவைத் திரும்பிப் பார்த்தாள் அனுசூயா. நந்தா திகைத்திருந்தான். ஆனால், 'போ' என்பது போல சைகை செய்தான்.

மேகாவின் அருகில் வந்து படுத்தாள் அனுசூயா.

தன் அம்மாவை யாரோ தட்டிப் பறித்து எடுத்துப் போய்விடுவர் என்பதுபோல அவளை மிகவும் இறுக்கமாக கட்டிப் பிடித்துக்கொண்டாள் மேகா. நினைத்துக் கொண்டாற் போல அவள் கன்னத்தில், கழுத்தில், நெற்றியில் என்று முத்தமிட்டாள்.

"அழறியா என்ன." அனுசூயா, மேகாவின் கன்னத்தைத் தொட்டவள் அதிர்ந்தாள்... ஈரமாகியிருந்தது.

"என்னடா ஆச்சு? என்ன ஆச்சு? எதுக்காக இந்த பதட்டம்? எதைக்கண்டு பயந்துட்டே?"

பதில் சொல்லத் தயாராக இல்லை மேகா. உதடுகளைப் பற்களால் கடித்துக்கொண்டாள்.

"மேகா... ஏதாவது தப்பு நடந்துபோச்சா? உனக்கும், வினோத்துக்கும் சண்டையாயிடுச்சா?"

"இல்லம்மா... அப்பாவைப்பத்தி நினைச்சுட்டிருந்தேன். பாகிஸ்தானுக்குப் போயி, சொந்த நாட்டுக்கு துரோகம் பண்ணக்கூடாதுன்னு எத்தனை இழந்துட்டார்? அதைப்பத்தி நெனைச்சாலே, எனக்கு அழுகையா வருதும்மா!"

"முட்டாள்! 18 வருஷத்துக்கு முன்னால அப்பா ரெண்டு விரலைப் பறிகொடுத்ததை இப்ப திடீர்னு நெனைச்சு..."

அனுசூயாவின் வாயைப் பொத்தினாள் மேகா. இன்னும் ஒரு வார்த்தை அவள் பேசினால், தன்னிடமிருந்து உண்மை வெடித்துக் கிளம்பிவிடும் என்ற அச்சம் வந்தது.

கண்களை இறுக மூடிக் கொண்டாள். அம்மாவை காற்றுப் புகுந்துவிட முடியாத அளவுக்கு இறுக்கமாக அணைத்துக்கொண்டாள்.

காரணம் புரியாத இந்த மாற்றத்தினால் சற்றே குழப்பமானாள் அனுசூயா. மேகாவை வருடிக்கொடுத்துக் கொண்டே இருந்தாள் - அவள் தூங்கிப்போகும் வரை.

மறுநாள் -

நந்தா விழித்தபோது இரவு வெகுநேரம் தூங்காமல் இருந்ததன் களைப்பு அவன் கண்களில் தெரிந்தது. அறையை விட்டு வெளியே வந்தான். மேகாவின் படுக்கையில் அவள் இல்லை.

"பாண்டிச்சேரிக்குப் போயிட்டு வந்ததுலேர்ந்து உங்க பொண்ணு மொத்தமா மாறிட்டா. புகுந்த வீட்டுல என்ன மிரட்டி அனுப்பினாங்களோ, தெரியல. அதிகாலையிலயே எழுந்துட்டா. தோட்டத்துக்கு தண்ணி விடுன்னு கெஞ்சினாக்கூட அசைய மாட்டாளே... இன்னிக்கு அவளா தோட்டத்துக்குப் போயிருக்கா..." என்று அனுசூயாவின் குரல் வந்தது.

அவள் மார்க்கெட்டுக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தாள். வாசல் கதவைச் சாத்திவிட்டு, தோட்டத்துக்குப் போனான் நந்தா.

பின்னால் தள்ளியிருந்த பள்ளிக்கூடத்தின் மைதானம் தெரிந்தது, அதன் சுற்றுச் சுவரிலிருந்து யாரோ அவசரமாக இறங்கிப் பதுங்குவது போலிருந்தது.



'யார் அது? யார் அது? சங்கரா?'

பதறினான் நந்தா.

தண்ணீர்க் குழாயை ஒவ்வொரு செடியாக நகர்த்திப் பிடித்துக்கொண்டிருந்தாள் மேகா.

"மேகா... என்னடா ஆச்சு? ஏன் நேத்திலருந்து எங்கிட்ட பேச மாட்டேங்கற? விலகி, விலகி ஓடறே?"

"..."

"என்கிட்ட எதையோ மறைக்கறே..."

சட்டென்று திரும்பி அவனைக் கண்களுக்குள் பார்த்தாள் மேகா...

"யாரு...? மறைச்சது யாரு நானா?"

அவள் ஒருபோதும் அவனிடம் அப்படி நறுக்குத் தெறித்தாற்போல் பேசியதில்லை. நந்தா, அவனுக்குள் சந்தேகம் வெடிப்பதை உணர்ந்தாள்...

"மேகா!" என்றான், அதிர்ந்து.

அவளை நெருங்கி வந்து, "சங்கரை நீ பாத்தியா?" என்றான்.

"அம்மாவோட பெட்டில ஒரு போட்டோ என் கைல கிடைச்சபோது அம்மா துரோகம் பண்றாங்கன்னு நினைச்சு எப்படி துடிச்சிப்போனேன்! அதை உங்க கிட்ட உடனே சொல்லணும்னு வெளியூர்லேர்ந்து வரவழைச்சேனே... நெனைவிருக்கா? இப்ப உங்க துரோகத்தை யார்கிட்டப் போய் சொல்வேன்!"

நேரே மின்னல் அவன் உச்சந் தலையில் இறங்குவது போல் உணர்ந்தான் நந்தா.

உடைந்து அழ ஆரம்பித்தாள் மேகா. அவன் தொட்டபோது, அவன் கையை விலக்கினாள்...

"பாண்டிச்சேரில சாபிரா அத்தைகிட்ட நீங்க சொன்னதை எல்லாம் நான் கேட்டுட்டிருந்தேன் !"

நொறுங்கிப் போனான் நந்தா.

'ஐயோ... எல்லாமே முடிவுக்கு வரப்போகிறதா ?'

வெகுநேரம் கழித்து மெல்லக் கேட்டான்...

"அம்மா கிட்ட சொல்லப்போறியா ?"

இல்லையென்று தலையை இடதும், வலதுமாக அசைத்தாள் மேகா...

"அம்மா உங்களை முழுசா நம்பிட்டாங்க... உங்க மேல உயிரையே வெச்சுட்டாங்க. 'உன் கணவர் திரும்பி வந்துட்டார். அவர்கூட வாழு !'ன்னு நிபந்தனை போட முடியாது... அதுவும் இல்லாம, இதுவும் இல்லாம மொத்தமாப் பறிகொடுத்துட்டு நிப்பாங்க. எனக்கு ரொம்பப் பிடிச்ச தம்பதிங்களை நானே பிரிக்க மாட்டேன்... அம்மாவை உங்ககிட்ட ஒப்படைச்சிடறேன்; என்னை எங்கப்பாகிட்ட நீங்க ஒப்படைச்சிருங்க !"

திகைத்து நிமிர்ந்தான் நந்தா...

"என்னடா சொல்றே ? எப்படிடா முடியும் ?"

"வினோதுக்கு ட்ரெய்னிங் முடிஞ்சு, முதல் போஸ்ட்டிங் குஜராத்ல கொடுத்திருக்காங்க. நான் வினோத்கூட குஜராத்துக்குப் போயிடறேன். 18 வருஷமா நானும், எங்கப்பாவும் ஆளுக்கு ஒரு திசையா பிரிஞ்சே வாழ்ந்துட்டோம். அவர் என்கூட இருக்கட்டும் !"

"இது... இது... அனுவுக்குத் தெரிஞ்சா..."



"அம்மாகிட்ட நான் சொல்றதா இல்ல... என்னிக்கிருந்தாலும் கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போற பொண்ணுன்னு அம்மாவால என்னைப் பிரிஞ்சிருக்க முடியும்... ஆனா, உங்க பிரிவை அவங்களாலத் தாங்க முடியாதுன்னு எனக்குத் தெரியும் !"

கண்களைத் துடைத்துக்கொண்டாள் மேகா...

"ஆனா... எனக்கு பயமாயிருக்கு... நான் இங்கே இருந்தா, என்னை மீறி என்னிக்காவது அம்மா கிட்ட உண்மையைச் சொல்லிடுவேனோன்னு பயமாயிருக்கு ! எனக்கு சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கொடுத்து அனுப்பிடுங்க... ப்ளீஸ்..."

சட்டென்று திரும்பி உள்ளே போய்விட்டாள் மேகா.

அந்தக் கல்யாண மண்டபம் பிரமாதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மேடையில் புதிதாக கழுத்தில் ஏறிய தாலியுடன், வினோத்தின் விரல்களுடன் தன் விரல்களைக் கோத்து நின்றிருந்தாள் மேகா. அவள் முகத்தில் ஆனந்தம்; வினோத் முகத்தில் நிறைவு.

அனுசூயாவும், நந்தாவும் விருந்தாளிகளை வரவேற்றுக்கொண்டிருந்தனர்.

அவர்களுக்குப் பின்னால், ஒரு சிறிய நாற்காலியில் தாடி, மீசையுடன் உட்கார்ந்திருந்தான் சங்கர். பூரித்த மனதுடன் அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தான். மணமக்களுக்கு வரும் பரிசுப் பொருட்களை வாங்கி பக்கத்தில் வைத்துக்கொண்டிருந்தான். அவ்வப்போது, அவனைப் பார்த்து மேகா கண்ணடிப்பதை ரசித்துக்கொண்டிருந்தான்.

குஜராத்தில் அவர்களுக்கான வீட்டைக்கூட அவன்தான் தேர்ந்தெடுத்துவிட்டு வந்திருந்தான். சாபிராவும்,

வினோதின் அம்மாவும் மேகாவின் மீது பொழியும் கலப்படமில்லாத அன்பைக் கண்டு அவன் நெகிழ்ந்திருந்தான்.

திருமணத்திற்கு வந்திருந்த நந்தாவின் நண்பர்கள், "மகளைப் பிரியறதை நீங்ககூடத் தாங்கிடுவீங்க போலருக்கு... நந்தாதான் உயிரையே பறிகொடுத்த மாதிரி நிக்கறாரு!" என்று அனுசூயாவிடம் சொன்னபோது, அவள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் நிறைவதையும் கவனித்தான் சங்கர்.

செயற்கையாகச் சிரித்துக்கொண்டிருந்தான் நந்தா. மேகா இனி அவனுக்கு இல்லையா? அவனிடமிருந்து ஒரு உறுப்பையே அறுத்துக்கொண்டு போவது போல் இருந்தது.

'அனுவைப் பொறுத்தவரைக்கும் நான் திரும்பிப் போயிட்டதாவே இருக்கட்டும் நந்தா. சங்கர் இங்கே வாழப் பிடிக்காம வடக்கே போயிட்டான்னு சொல்லிடு!' என்று சொல்லியிருந்தான் சங்கர்.

சங்கரும், அவனுமாகச் சேர்ந்திருந்த தனியான சந்தர்ப்பத்தில் மேகாவிடம் அவன் கேட்ட கேள்வி நினைவில் புரண்டது.

'நீ என்னை அப்பான்னு இனிமே கூப்பிட மாட்டியா?'

கண்ணீர் தோய்ந்த கேள்வி அவளை உலுக்கியது.

'உங்க பேர்ல எனக்குக் கோபம் இருக்கே தவிர, என்னால உங்களை வெறுக்க முடியாது, டாடி... நீங்க காட்டின அன்புல பத்துல ஒரு பங்கைக்கூடத் திருப்பித் தராம நான் பிரியறேனேன்னு கஷ்டமாத்தான் இருக்கு!' என்றபடி, சங்கரையும், அவனையும் சேர்த்து அணைத்துக் கொண்டாள் மேகா.



அப்போது, அவன் விம்மி, விம்மி அழுதது போல் அதற்கு முன் அழுததில்லை.

'எனக்கு நீங்க ரெண்டு பேரும் வேணும்... அம்மாவும் வேணும்; யாரும், யாரையும் தொலைக்காம இருக்கணும்னா, நாம பிரிஞ்சிருந்தாதான் முடியும், டாடி. நான் எங்கம்மாவைவிட அதிர்ஷ்டக்காரி. அவங்களுக்கு நீங்க மட்டும்தான் கெடைச்சீங்க... ஆனா, எனக்கு நீங்க எல்லாருமே கிடைச்சிருக்கீங்க!'

மேகாவை இழக்கப் பிரியப்படாதவன் போல் நந்தா எத்தனை நேரம் அவளை அன்றைக்கு அணைத்துப் பிடித்திருந்தான்!

"சார்... ஒரு குரூப் போட்டோ!" என்று காதருகில் குரல் ஓங்கி ஒலித்ததும், கசிந்த கண்களுடன் திரும்பினான் நந்தா.

நந்தா, அனுசூயாவைத் தொடாமலேயே நிற்பதைப் பார்த்து அம்மாவை அருகே இழுத்தாள் மேகா. அவள் காதில் கிசுகிசுத்தாள்...

"அப்பா தலையில ரெண்டு போடு போட்டு கையைக் கோத்துக்கம்மா. இல்லேன்னா, இங்க வர்ற கேஸ்ல எதையாவது சைட் அடிச்சுட்டு பின்னாலயே போயிடப் போறாரு!"

"ஏய் வாலு! மொதல்ல உன் புருஷனை கைக்குள்ள போட்டுக்கற வேலையைப் பாரு," என்று அவளைச் செல்லமாக சிரித்துக்கொண்டே தள்ளிவிட்டாள் அனுசூயா.

நந்தாவின் கையை இழுத்துப் பிடித்து அனுசூயாவின் தோளில் போட்டாள் மேகா...

"நீங்க இப்படி நின்னாதானே நாங்களும் இப்படி க்ளோஸா நிக்க முடியும்?" என்று வினோதின் இடுப்பை கட்டிக் கொண்டாள்.

வினோத்தின் பக்கத்தில் நின்றிருந்த அவனது அம்மாவும், சாபிராவும் அவர்களை அடுத்து நின்றிருந்த சங்கரும் தங்கள் கண்கள் ஆனந்தத்தால் நனைவதை உள்ளார உணர்ந்தனர்.

- முற்றும் -